
Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 வெள்ளி - 13 20 - 26 - மே - 2005



## வேறொன்றும் இல்லை...



## தாயகத்தில் 'தாயகம்'



## சுடுகலன் சுமந்த கரங்கள்...

## படித்ததில் பிடித்தது

# அழியாத கோலங்கள்

நாம் பயணித்த
நீண்ட தூரப் பயணங்களில்
முட்களும், பற்றைகளும்
நம் பாதங்களை பதம்பார்த்தன
போதாதென்று
பாரதூரமாய்
நெஞ்சையுமே காயப்படுத்தின
அந்த நிகழ்வுகள்~ என்றும்
அழியாத கோலங்கள்.


அன்று
கோயில் குளங்களிலும்
கூடுகின்ற
திருவிழாத் தலங்களிலும்
தேர்வடம் பிடித்திழுக்கும்
தெரு உட்சவ கூட்டத்திலும்
உங்களுக்கே உரித்தான
உருட்டு விழிகள்
தூர திருட்டு வில்லையாய்
எங்களை தேடியே
தீண்ட முயன்றன.

அப்போதுங் கூட
நாங்கள் உங்களால்
தீண்டப்படாமலே
தூரப்பட்டு நின்றோம்
என்றாலும்
கோரப்படாதவரல்லவே.

அன்று
அர்ச்சனையும்
ஆலய வழிபாடும்
அதிகார வேலிகளும்
ஆயுத அரக்க பேய்களும்
ஆக்கிரமித்துக் கொண்டபோது
ஆலயங்கள்
அநாதரவாக்கப்பட்டன
அவ்வேளையில் தான்
ஆண்டவன் எங்களை
அருகணைத்து
அசூசைபாராமல்
ஆட்படுத்திக் கொண்டான்.

இன்று நாங்கள்
தேர்வடம் பிடிக்கின்ற போது
நீவிரெல்லாம்
ஓரப்பட்டு நின்றாலும்
ஒரு போதும் உம்மால்
தூரப்பட முடியவில்லையே.

தமிழாக்கம்-இ.ரஜித்
ஆங்கிலத்தில்:-பாத்திமா நஜிம்



# இலக்கியப்பகிர்வு

# பாதசரம்

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன

கல்வித்துறையிலும் இலக்கியத் துறையிலும் நன்கு அறியப்பட்ட வல்வை ந.அனந்தராஜ் அவர்களின் பாதசரம் என்னும் சிறுகதைத் தொகுப்புத் தொடர்பாக சில கருத்துக் களை இங்கு முன்வைக்கப் படுகின் றது.

பதின்மூன்று சிறு கதைகளைக் கொண்ட இத்தொகுப்பில் 1973ஆம் ஆண்டு தொடக்கம் 2003ஆம் ஆண்டு வரையில் கதாசிரியரால் எழுதப்பட் டுள்ளகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

அதாவது 1973,1974,1975,1976, 1998,1999,2003 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட தலா ஒவ்வொரு சிறுகதை யும் 1995இல் எழுதப்பட்ட நான்கு சிறுகதைகளும் 2000 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இரண்டு சிறுகதைகளு மாக தொகுப்பு அமைந்துள்ளது.

“இவ்வேளை‘பாதசரம்’சிறுகதை மீண்டும் எனது நினைவிற்குள் புகுந்துகொள்கின்றது. நாற்பதுகள ளவிலே (வெள்ளிப்)பாதசரம் என்ற உன்னதமான சிறுகதையொன்றை இலங்கையர்கோன் எழுதியிருந்ததை நாமறிவோம். அது வடமராட்சியில் நிகழ்ந்தது. இப்போது எழுந்த இதுவும் அம் மண்ணிலேதான் நிகழ்ந்தது. யதேச்சையான ஒற்றுமை ஒருபுற மிருக்க, ஏறத்தாழ ஐம்பது ஆண்டு கால இடைவெளியின் இவ்விரு படைப்புக்களும் இருவேறுகால மாற்றங்களின் யதார்த்த வெளிப்பாடு களாகவுள்ளமை கவனத்திற்குரியது.

அதுமட்டுமன்று இந்நீண்ட கால இடைவெளியில் சிறுகதையின் இயல்புகள் கூட பல்வேறு மாற்றங் களைக் கண்டுவிட்டமை மனங்கொள் ளப்படவேண்டியதாகிறது. அனைத் தையும்விட, நவீன இலக்கிய வடிவ மான சிறுகதை (நாவலும்) உலகப் பொதுவான வடிவமாகும். எனவே உலகச் சிறுகதையின் மாற்றங்களை நாம் அறிந்துகொள்வது அவசிய மாகின்றது. இவற்றை அறிவோமா யின் இவ்விதங்களில் இத்தொகுப் பிலுள்ள சிறுகதை மாற்றங்களை அவாவி நிற்பது தெரியவரும்.

எனினும் எமது பிரபலமான மூத்த தலைமுறை எழுத்தாளர்களே அவைபற்றி விசனப்படாதபோது இவ் வாசிரியர் அந்நிலைக்குட்படத் தேவை யில்லை. ஆயினும் எழுத்தாற்றலும் ஆளுமையும் கடின முயற்சியும் தாக மும் கொண்ட இவரிடமிருந்து இனி வரும் காலத்தில் அத்தகைய ஆரோக் கியமான மாற்றங்களை நாம் எதிர்பார்ப் பதில் தவறெதுவும் இல்லையே”

என்று முன்னுரை எழுதிய கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத்தலைவர் செ.யோகராசா அவர்கள் குறிப்பிட்டவரிகளுடன் தொகுப்பிற்குள் செல்லலாம்.

“சமூகத்தின் விடிவுக்கும், ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்து வரும் அவலங்களுக்கும் விடை காணும் வகையில், சமூக விழிப்புணர்ச சியை இலக்கிய முயற்சிகளினூடாக ஏற்படுத்தவேண்டுமென்று நான் முயற்சி எடுத்தபோது...”

என்ற தனது எண்ணக்கருத் தினை வல்வை ந.அனந்தராஜ் அவர் கள் தனது சகல சிறுகதைகளிலும் அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்டலாம்.

சிறந்த சமூக நோக்கமும், படைப்பாளிக்கு இருக்கவேண்டிய சிறுமை கண்டு பொங்கும் இயல்பும் படைப்பாளருக்கு உள்ளது.

அவரது இந்த எண்ணப்பாங்கு அவரது சகல கதைகளிலும் எந்தவி தமான ஐயுறவும் இல்லாமல் நிரூபிக் கப்பட்டுள்ளது.

அதாவது கதைகளின் பிரதான அம்சங்களில் ஒன்றான உள்ளடக்கம் தொடர்பில் அவர் சிறப்புப் பெற்றுள்ளார். எனினும் அவை கலைத்துவமான கதை களா அமையாது போயுள்ளது.

இப்படியான கதை களை எங்கள் மண்ணில் உள்ள படைப்பாளிகள் எல்லோரும்தான் எழுது கின்றார்கள். அதாவது இவ்வாறான கதைகளை எழுதித்தான் இதன் அடுத்த கட்டத்திற்குப் போய் இருக்கவேண்டும். போக முடியும். எனினும் கதைகளைத் தொகுக்கும் பொழுது இவ்வாறான கதைகளை தவிர்த்துக் கொள்வது மிகப்பொருத்த மாக இருக்கும்.

ஏனெனில் உள்ள டக்கத்திற்கான வலுவை பிரதானப்படுத்தப்படும் போது அதில் கதைக்கான அம்சங்கள் சரியான இடத்தில் அல்லது விதத்தில் அமையாது போய்விடும் ஆபத்து வந்துவிடும்.

இந்தச் சிறுகதைகளின் படைப் பாளராகிய வல்வை ந.அனந்தராஜ் அவர்கள் 1974இல் எழுதிய “சாட்சி கள் மிரண்டால்” என்ற சிறுகதை யினையும், 2000ஆம் ஆண்டில் எழுதிய ‘கானல்நீர்’ சிறுகதையினை யும் எடுத்துக்கொண்டால் இரண்டுக் கும் இடைப்பட்டகாலம் இருபத்தி யேழு வருடங்களாகும்.

ஆனால் இந்த இரண்டு சிறு கதைகளுக்கும் இடையில் எழுத்து நடையிலோ அல்லது சிறுகதை வடிவத்திலோ, மொழிப்பாவனை யிலோ பெரிதான மாற்றத்தினைக் காண முடியாது உள்ளது.

தேடலும், விரிந்த வாசிப்பும் உடைய படைப்பாளி இவ்வாறாக மாற்றம் இன்றி இருக்கமாட்டார். எனினும் இப்படைப்பாளி இவ்விதம் இருப்பதற்குக் காரணம் இருக்கலாம்.

இவர் பல்வேறுபட்ட துறை களில் ஆர்வம் உள்ளவர்-அது மாத்தி ரம் அல்ல. இவர் எழுதிய கணிசமான நூல்கள் அறிவுத்துறையோடு சம் பந்தப்பட்டவை. இதுவும் ஒரு காரண மாக அமையலாம்.

ஒரு கவிஞர் கதை ஆசிரியராக மாறும்போது எவ்விதம் கவிதைப் பாங்கான வரிகள் கதைகளை ஆக்கிரமிக்கின்றனவோ அவ்விதமே கட்டுரையாளர்கள் கதையாளர்களாக மாறும்போது கட்டுரைப்பாங்கு கதை களில் வந்துவிடும் அவலம் ஏற்பட்டுவிடுகின்றது.

அனுபவப் பரிமாற்றலை அடிப் படையாகக்கொண்டது படைப்பு எனில் அறிவு சார்ந்த கட்டுரையானது தமது கருத்துக்களை ஏனையவர் களுக்கு நேரடியாக வழங்கி உதவு கிறது. அதன் காரணமாக அனுபவப் பரிமாற்றத்திற்கு உதவமாட்டாது.

அனுபவப் பரிமாற்றத்தினை அடிப்படையாகக்கொண்ட சிறுகதை யானது நேரடித் தன்மையானது. அல்லது ஒரு சொல் ஒரு பொருள் ஒரு அர்த்தம் என்ற கோட் பாடுகளுக்கு அப்பால் பல் வேறு உத்திமுறைகளுடன் அது படைக்கப்படுகின் றது.




எந்த உண்மையை அடிப்படையாகக் கொண் டாலும் அது கதையாக்கப்படும்போது கற்பனை சேர்ந்து அதன் காரணமாக புதிய உத்திகள் பிறந்து சொல்லப் படும் விடயத்தை நல்ல படைப்பாக்கு கின்றது.

ஒரு விடயத்தை கட்டுரையாக்கு வதற்கும் கதையாக்குவதற்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டு. கட்டுரையாளர் தனக்குக் கிடைக்கும் உண்மைத் தரவுகளை, தகவல் களை அடிப்படையாக வைத்து அந்த விடயத்தை கட்டுரையாக்குவார்.

இன்னும் சொல்லப்போனால் குறித்த விடயத்தை பலபேர் கட்டுரை யாக எழுதினால் கூட கிட்டத்தட்ட எல்லாக் கட்டுரைகளும் ஒரே தன்மை யானதாக ஒரே அடிப்படையைக் கொண்டதாக அமையும்.

ஆனால் குறித்த இந்த விடயத்தை பல தேர்ந்த படைப்பாளி கள் சிறுகதைகள் ஆக்கினாலோ அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாக அமையும். அதுவே படைப் புக்கான சிறப்பு அம்சமாக இருக்கும்.

வல்வை ந. அனந்தராஜ் அவர் கள் எடுத்துக்கொண்ட உண்மைச் சம்பவங்கள் பொருத்தமான சிறுகதை உத்தி முறைகள் பயன்படுத்தப்படாத காரணத்தால் கட்டுரைப் பாங்கான தன்மை கொண்டனவாக அமைந்து விடுகின்றன்.

இந்த இயல்பு வல்வை ந.அனந்தராஜ் அவர்களுக்கு மட்டு மானது அல்ல. எங்கள் சிறுகதை யாளர்கள் பல பேரிடம் உள்ளது. எனினும் துணிச்சலாக ந.அனந்தராஜ் அவர்கள் சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார்.

அந்தத் துணிச்சலின் பேரில் நம்பிக்கை வைத்தே இக்கருத்துக் களை இங்கு முன்வைத்துள்ளேன். இதைவிட மேலான சிறுகதைகளை அவர் தருவார் என்ற நம்பிக்கையுடன்.

# அதைத்தவிர வேறொன்றுமில்லை



மீண்டுமொருமுறை இலங்கைத்தீவுக்கு ஒரு தொகுதி ஆயிரங்கோடிகள் வாக்களிக்கப்பட்டுள்ளன. இந்த வாக்களிப்புடன் கூடப் பிறந்ததாக சமாதான நிபந்தனைகளும் இணைந்திருக்கின்றன. கடந்த மூன்று, நான்கு வாரங்களாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா அம்மையார் நடத்திவந்த பொதுக்கட்டமைப்பு நாடகம் இப்போது வில்லங்கத்துக்குள் மாட்டிக்கொண்டுவிட்டது. அல்லது அவரை வில்லங்கத்துக்குள் மாட்டிவிட்டுள்ளது.

அம்மையாரின் கூட்டாளிகளை மேவி ஒரு பொதுக்கட்டமைப்பைப் புலிகளுடன் ஏற்படுத்துவதென்பது சாராம்சத்தில் பொய்யானதாகவே இருக்குமென்பது வெளிப்படை. அதைவிடவும், அந்தளவுக்கு இந்த விடயத்திலே 'றிஸ்க்' எடுக்குமளவுக்கு அம்மையாருக்கு அர்ப்பணிப்பு இருப்பதாக யாராவது நினைத்தால் அவர்களுக்கு அம்மையாரின் சுயரூபம் நிச்சயமாகத் தெரிந்திருக்கவில்லை என்பதே பொருளாகும்.

ஆகவே கண்டியில் உறுதியளிக்கப்பட்ட 3 பில்லியன் டொலர்களும் இலங்கைத்தீவுக்கு ஒரு கனவுக்காட்சியாகவே பெரும்பாலும் இருக்கப்போகிறது. ஏற்கனவே வோஷிங்ரனில் 700 மில்லியன் டொலர்களும் ரோக்கியோவில் 4.5 பில்லியன் டொலர்களும் உறுதியளிக்கப்பட்டனவாயினும் அவையெல்லாமே பொய்யாய்ப், பழங்கதையாய்ப்போகின்ற ஒருவிதமான கையறுநிலையே இலங்கையில் காணப்படுகிறது. 2002 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து இன்று வரைக்கும் அந்த வாக்களிக்கப்பட்ட உதவிப்பொதிகள் துசுபடிந்து கிடக்கின்றன. அவற்றுக்கான நிபந்தனைகளின் நிறைவேற்றம் மட்டும் எந்த விதமான முன்னேற்றமின்றி, மறுவளமாக மேலும் பின்னோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது.

அப்படியாயின் புதுவரவான 3 பில்லியன் டொலர்களுக்கு நடக்கப் போவது என்ன? கடந்த செவ்வாயன்று, கண்டியில் உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு முடிவடைந்த பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய சிறிலங்காவின் நிதியமைச்சர். இது பற்றிக் கூறியதைக் கவனியுங்கள். "உதவிவழங்கும் நாடுகள் நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லை. 'ஆனால் சில வழிகாட்டல்களை அவை வழங்கியுள்ளன" என்பது அவரது கூற்று.

இந்தக் கூற்றுக்களின் உள்ளர்த்தம் என்ன? "வழிகாட்டல்" என்ற ஒற்றைச் சொல்லினுள்ளே பொதிந்திருப்பது மிகப்பெரிய இராஜதந்திர கனதிமிக்க பொருளாகும். "சமாதான முயற்சிகள், பொதுக் கட்டமைப்பு என்பன சீராக நடைமுறைப்படுத்தப்பட்டாலேதான் இந்த 3 பில்லியன் டொலர் நிதி விடுவிக்கப்படும்" என்பதே குறித்த 'வழிகாட்டல்' ஆகும். இந்த வழிகாட்டலுக்கு, இன்றைய சிறிலங்காவின் அரசியற்களத்தின் நிலவரத்தின்படி என்ன நடக்கக்கூடும்? சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதே குதிரைக்கொம்பாக இருக்கையில்; ஆழிப்பேரலை நிவாரணப்பணிக்கு ஒருபொதுக்கட்டமைப்பை உருவாக்குவதே கானல் நீராக இருக்கையில்; அவை "நடைமுறைப்படுத்தப்படுவதென்பது," அதுவும் "சீராக நடைமுறைப்படுத்தப்படுவதென்பது" நினைத்துப் பார்க்கப்படக்கூடியதா?



கண்டி மாநாட்டின் ஆரம்ப நாளான 16 ஆம் திகதியன்று சிறிலங்காவின் நாடாளுமன்ற அரசியல்வாதியும், பௌத்தபிக்குவுமான எல்லாவல மேதானந்த தேரர் நடந்து கொண்டமுறை இந்தக்கேள்விகளுக்கு மிகச்சிறந்த பதிலாக அமையக்கூடியது.

பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவதை தமது கட்சி (ஜாதிகஹெல உறுமய) எதிர்க்குமென்று சூளுரைத்த தேரர்; அதனை விளக்கும் மகஜரின் பிரதிகளையும் அங்கு கூடியிருந்த பிரதிநிதிகளிடம் விநியோகித்தார்.

இதற்கு அடுத்தநாள் இன்னுமொரு சூளுரை பிக்குகளிடமிருந்து வந்தது. "நாட்டைப் பிரிக்கும் பொதுக்கட்டமைப்பை நிறுத்துவதற்காக தீக்குளித்து உயிரை விடவும் தயார்" என அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் இதையெல்லாம் தூக்கி வீசும்படியாகக் கடந்தவாரம் முழுவதும் அம்மையார் பேசியிருந்தார். எந்தவித எதிர்ப்புகளையும் பொருட்படுத்தப்போவதில்லையென அம்மையார் வீரவசனங்களை உதிர்த்தார். அவசரகாலச்சட்டம், ஊரடங்குச்சட்டத்தையெல்லாம் எதிர்ப்புகளை அடக்க அம்மையார் பயன்படுத்துவதெனவும் செய்திகள் கசிய விடப்பட்டன.

கண்டி மாநாட்டின் முதல் நாளான்று சிறப்புரையாற்றிய சந்திரிகா அம்மையார் அங்கு பொதுக் கட்டமைப்பை எதிர்ப்பவர்களை நோக்கி கடுந்தொனியில் சில கேள்விகளை எழுப்பினார். அன்றைய தினம் ரூபவாஹினியில் உரையாற்றியபோது அதற்கும் ஒருபடி மேலே போய்; பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் யுத்தத்துக்குத் தயாரா? உங்கள் பிள்ளைகளை படையில் சேர்க்கத் தயாரா? என்று அறைகூவல் விடுத்தார்.

இவையெல்லாம் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை மிகவும் கவர்ந்ததாக அரச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா சனாதிபதியின் செயலுறுதியை அவர்கள் மதிப்பதாகவும், நம்புவதாகவும் அவை பறைகின்றன. தொடர்ந்தும் அறைகின்றன. இதனாலேயே 50இற்கு மேற்பட்ட நாடுகளும் நிறுவனங்களும் 3மில்லியன் டொலர்கள் என்ற உதவித்தொகைக்கு வாக்களித்துள்ளதாகவும் அரச ஊடகங்கள் பெருமைப்பட்டுக்கொள்கின்றன.

உண்மைதான். அம்மையாரின் செயல்நிறைவேற்றத்தின் மீதான "நன்நம்பிக்கை" காரணமாகத்தான் அந்த 50 நாடுகளும் நிறுவனங்களும் தமது நிபந்தனையை விரிவாகவே விதித்துள்ளன. சமாதான முயற்சிகளும் ஆழிப்பேரலைப் பொதுக் கட்டமைப்பும் சீராக நடைமுறைப்படுத்தப்படுவதிலேயே உதவித்தொகை விடுவிக்கப்படுவது தங்கியிருக்கின்றது என அவை மிகத்தெளிவாகவே கூறிவிட்டன. இதனைக் கூர்ந்து அவதானிப்பவர்களுக்கு இதிலுள்ள பிடிமானம் புரியும். சமாதான முயற்சி தொடங்கப்பட வேண்டுமென்றோ, பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டுமென்றோ கூறப்படவில்லை. அதற்கும் மேலாக அவை இரண்டும் சீராக நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருப்பது சந்திரிகா அம்மையார் மீதான உலகின் நம்பகத்தன்மையைக் கோடிட்டுக்காட்டுகின்றது.

பொதுவாகவே உதவித்தொகைகள் என வாக்குறுதியளிக்கப்படுபவற்றில் 30 விழுக்காடு மட்டுமே சென்று சேர்வதாகவும்,மிகுதித்தொகை விடுவிக்கப்படாமலே போய்விடுகிறதெனவும் ஆழிப்பேரலையின் பின் ஐ.நா.செயலர் கொபி அனான் தெரிவித்த கருத்து இங்கு கவனிக்கத்தக்கது. அப்படிப் பார்த்தால் இலங்கைத்தீவுக்கு இந்த இரண்டுநாள் படாடோப மாநாட்டால் கிடைக்கக்கூடியது என்ன?

உலக நாடுகள் இவ்வளவு பெரியதொகையொன்றை இலங்கைக்கு வழங்கத்தயாராக இருக்கின்றன என்ற ஒரு நம்பிக்கையின் கீழ் ஏனைய நடவடிக்கைகளைக் கொண்டு செல்லமுடியும் என ஒரு பொருளியல் அறிஞர் கூறியிருந்தார். உண்மையில் சிறிலங்கா அரசு இந்த உதவிக்கான உறுதியளிப்பைக் காட்டிக் காட்டித்தான் ஏனைய நடவடிக்கைகளைச் செய்துகொள்ளமுடியும். கண்டி மாநாட்டின் பெறுபேறு அவ்வளவே. அதைத்தவிர வேறொன்றுமில்லை!

**பு.சத்தியமூர்த்தி**



## விசுக்விசுக் விசாலாச்சி

"ஊருக்குச் சொல்லுமாம் பல்லி-களனிப்பானையில விழுமாம் துள்ளி"

அட முழுக்க முழுக்கப் பேசுறது இனவாதம். தமிழருக்கு உரிமையே குடுக்கக்கூடாதெண்டதில பிடிவாதம். இலங்கை முழுக்க பௌத்த சிங்கள நாடெண்டு தேசியவாதம். இப்பிடி ஒட்டு மொத்தமதவாதமேறினதில மூட்டுக்கு மூட்டு வீங்கிப்போய்க் கிடக்கிற சிறிலங்காக் கட்சியளுக்கு ஒட்டுமொத்தமா சரவணவாதம் போக்கிற மந்திரவாதியளா வந்து நிக்கிற நாடுகள் கண்டியில மாநாடு வைக்கினம் அதைத்தான் சொல்லுறன். சும்மா வோடா இந்தக் காலத்தில அஞ்சுரூவாக் காசெண்டாலும் ஏதும் லாபமில்லாம ஆர்தாறான். கோடி கோடியாகக் கொட்டித்தாறவன் வட்டிக்கும் குட்டிக்கும் ஏதும் பேசத்தானே வேணும். எல்லாம் எங்கடகாலம். முன்ன... முன்ன என்ன முன்ன? இப்பவுந்தான், பாரதியாரைப் பரணிலவச்சுக் காப்பாத்துறம் அவர்தான். உந்தச் சேதுவை மேடுறுத்தி வீதிசமைக்க வெளிக்கிட்டவர். இப்ப சமைக்கிற மீனுக்கே சன்னதம் பத்துவார் பாஸ் குடுக்கிறாங்களாம். இதைவிட இந்த முறை வெசாக்கை யாழ்ப்பாணத்தில சிறப்பாக்கொண்டாட ஏற்பாடு நடக்கிறதாமே. பலாலி விகாரை, கந்தரோடை விகாரை, காங்கேசன் துறை விகாரை, நாகவிகாரை,நயினா தீவெண்டு பெரிய தடல்புடலாம். நூறு பிக்குமார் வருகினயாம் பிரித்தோத ஆரிய குளம் சந்தியில வெசாக் பந்தலாம். இப்பவே வயறிங்வேலை துவங்கியாச்சாம் கேக்கக் கேக்க ஆசையாக் கிடக்கு- கடைசி கடைசியெண்டு செய்யினமோ தெரியாது. இதையெல்லாம் விடுங்கோடா அவையள் நல்லூருக்கயும் தேரிழுக்கிறகாலம் வந்ததுதானே. இதைத்தான்ரா சொல்லுறது 'இரவல் புடவையில இதுகுமொரு கொய்யகமாம்' எண்டு.

ஊரூராக் கையேந்தி வயிறு வளர்த்தாலும் உதிலயொண்டும் குறைச்சலில்லை. அரியாலைச் சனத்துக்கு வயலக்குடுத்திட்டாப் பிரச்சினை முடிஞ்சுபோகுமெண்டு ஒரு அங்கலாய்ப்பு. என்னவோ போட்டுப் புதைச்ச கண்ணியள எடுக்கத்தான் சுணங்கினது. இல்லாட்டி அப்பயே தந்திருப்பன் எண்டெல்லோ ஒரு சின்னப்பாட்டும் பின்னால. சும்மா வேடா இவை போட்டுட்டுப்போன ஆயுதத்திலும் பாக்கப் புதைச்சிட்டுப் போன ஆயுதங்கூட இப்பவும் கண்ணைத்துடைச்சுத்துடைச்சு கண்ணில மண்ணைத்தூவி நாகர்கோயில் தொண்ட மனாத்துப்பக்கமெல்லாம் புதையல் வைக்கிறது தெரியாதே. இல்லைக் கேக்கிறன். சுனாமியோட வாரிக்கொண்டு போன இடமெல்லாம் திரும்பி புதைப்பு நடக்குது. உந்த உயர்பாதுகாப்பு வலயங்களுக்க பண்ணை செய்து தாங்கள் திண்டது போக சந்தைக்கும் மரக்கறி போகுது. தமிழ்ச் சனத்தின்ர காணியள விட்டிட்டு இவை எப்ப போறது? இந்தக் கேள்விக்கு மட்டும் இன்னும் பதிலில்லை. அவளாரோ சொன்னமாரி பேச்சுவார்த்தையென்ன பேச்சுவார்த்தை. பிசாத்து சமாதானமென்ன சமாதானம். கத்தரிக்காய்ச் சமாதானம. வடக்குக் கிழக்க விட்டிட்டு வந்தவையில ஏறி உங்கட உங்கட ஊருக்குப்போனா ஒரு பிரச்சினையுமில்லையே.

( 20ஆம் பக்கம் பார்க்க)

## காரசாரம்

# கருமேகங்கள் எப்போது விலகும்



இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் சேர்ந்து கலந்து ஏதோ ஒரு முடிவுக்கு வரப்போகின்றன என்பது மகிழ்ச்சிதான். என்றாலும் முடிவு எங்களுக்குச் சாதகமாக இருக்கப் போவதில்லை என்பதும் உறுதிதான் எப்படிப்பார்த்தாலும் இந்த நாடுகள் அனைத்திலும் உயர்வானதாக தன்னைக் காட்டிக்கொள்ளும் அமெரிக்காவோ, பிரித்தானியாவோ, பிரான்சோ,ரஷ்யாவோ,சீனாவோ இல்லை. இத்தாலியோ, கொரியவோ இன்னுமுள்ள ஆயுத உற்பத்தியில் தம்மை ஈடுபடுத்தி அந்த விற்பனையிலேயே நாட்டின் பெருமளவு பொருளாதாரத்தைப்பெறும் நாடுகள் எவையும் சமாதானம் பற்றிய அக்கறை கொள்வதாகக் காட்டிக்கொள்வதை எவ்விதம் ஏற்கமுடியும்.

சமாதானத்துக்காகவே யுத்தம என்பதும் மனிதாபிமான நடவடிக்கைகளாகவே ராணுவ, ஆயுத உதவிகள் வழங்கப்படுகிறது என்பதுமான மிகப்பெரும் பொய்யை எவ்விதம் ஏற்கமுடியும். உலகின் ஆயுத உற்பத்தியில் அரைப்பங்கு அமெரிக்காவுடையது. இதையடுத்து முன்னர் கூறிய நாடுகளும் அடங்குகின்றன. இவையே சமாதானப் பேச்சுகளிலும், தமக்கப்பால் உள்ள நாடுகளிலும் அமைதிக் காப்பாளர்களாகவும் மாறும் அதிசயம் நடக்கிறது உண்மை.

ஆனால் மிக உண்மையான சமாதானம் எனப்படுவதும் அதைப்பற்றிய முயற்சிகள், முறைப்பாடுகள் உதவிகள் அனைத்தும் இந்த ஆயுத உற்பத்தி நாடுகளிடம் விடப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் மட்டும் நூறு மில்லியனுக்கும் அதிகமானோர் போர்களில் கொல்லப்பட்டார்கள் என்பது குறைந்த தொகையல்ல. இந்த வகையில்தான் உலக நியதி நியமிக்கப்பட்டுள்ளது. போபால் விசவாயுக்கழிவுகள் கசிவடைந்த போது ஒரு தாய் தன் குழந்தையை மார்பில் அணைத்தவாறு வாயு வந்து கொண்டிருந்த திசை நோக்கி ஓடினாளாம். வாயு அவளை மயக்கமுறச் செய்ய ஆரம்பித்தபோது அக் குழந்தையை வேறு புறமாகத் தூக்கி எறிந்தாளாம். இச்சம்பவம் பற்றி ஒரு பத்திரிகை தாய்ப்பாசம் பற்றி இப்படி எழுதியது. உயிருக்கு ஆபத்து வரும்போது குழந்தை ஒரு பொருட்டல்ல. என்று அதையே மறுவளமாக சிந்தித்தால்தான் நின்ற திசை ஆபத்து என்பதால் மறு திசை நோக்கி குழந்தையை எறிந்திருப்பாளோ என்றும் வர்லாம்.

இந்த அடிப் படையில் தான் இந்த நாடுகளின் செயற்பாடுகளைப் புடம் போட்டுப்பார்த்தால் தமக்கென சிறிதளவாவது நன்மை விளையுமெனில் அங் கெல்லாம் தோன்றும் ஆபத்பாந்தவர்கள். அப்படி விளையாதெனில விட்டெறிந்து அவர்கள் எப்படியோ போகட்டும் என்ற மனப்பாங்கிலுள்ளவர்கள் அவ்வளவுதான்.

விடுதலைக்குப் போராடுதல், உரிமைக்குப் போராடுதல் என்பது உலகமொழியில் அராஜகம் நம்மை ஆளத் தகுதியுள்ளவர்களாகத் தம்மை கருதிக்கொள்ளும் ஒரு இனத்திடம் தம்மை ஒப்புக்கொடுத்து அவர்களுடன் ஐக்கியமாகி விடுதலே சிறுபான்மை இவைகளுக்குச் சிறப்பைத்தருவதாகும்.

யூகோஸ்லோவியா, ஈராக், ஆப்கானிஸ்தான் ஆபிரிக்கா இன்னும் அநேக நாடுகளில் இதுதான் நடந்தது. வியட்நாம், கியூபா, லெபனான், சிரியா, எரித்திரியா எங்கும் இது போன்ற ஆற்றுகை நடைமுறைப்படுத்தப்பட்டது. அன்று உறுதியுடன் நின்று தன்னைக் காத்துக்கொண்ட வியட்நாம் வேறொரு வகையில் இன்று அமெரிக்காவின் கைகளில் தானாகவே விழுந்து விட்ட அவலமும் நேர்ந்தேயுள்ளது. இந்த வகையில் ரத்தம் சிந்திய ஒரு போராட்டத்தை நடாத்தி அதன் மூலம் தனது லட்சியத்தை அடையத் துடித்த தமிழர்களின் போராட்ட வரலாற்றிலும் இன்று மோதி நிற்கும் கரு மேகங்களும் சுனாமிப் பேரலைகளும் எப்போது எப்படி விலகப் போகின்றன என்பது ஒரு கேள்விக்குறிதான்.

---

# அரசுக்கு எப்போது தற்கொலை?



தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. ஒரு ஜீவனுக்கு மிக முக்கியமான பற்று வைத்திருக்கும் விடயமாக உயிர் இருக்கிறது. இந்த உயிரைக் காக்கக் கடல் கடந்தும் ககனத்தில் பறந்தும் தொலை தூரங்களுக்கு ஓடிப்போகும் மாந்தர் மட்டுமல்ல விலங்கினங்களும் உண்டு. உயிர்காக்கும் உணவு தேடி வலசை போவதுண்டு. இரண்டு வாரமே வயதுள்ள ஒரு நாய்க்குட்டியைக் கூட பள்ளத்தை நோக்கித் தள்ளினால் அது முன்னங்கால்களை உதைத்துப் பின்தள்ளும். அப்பேர்க்கொத்த உயிரை வேண்டாம் என்று ஒருவர் முடிவெடுப்பதற்கு மானம் ஒன்றே காரணமாகும் என்பதும் பழைய கதை இயலாமை, வாழ்வை நடத்த இயலாமை தளர்ச்சி வேதனையின் விளிம்பில் ஏற்படும் விரக்தி போ... இனி வாழ்வதில் அர்த்தமில்லை என்ற நிலைக்குத் தள்ள அவன்(ள்) மரணத்தை வரவேற்கத் தயாராகிறாள்(ன்) எல்லாத்தற்கொலைகளுக்கும் முதல் மனக்கொலை நடந்துவிடுகிறது.

தாயைப் பிரிந்த குழந்தையோ, குழந்தையைப் பிரிந்த தாயோ தற்கொலை செய்வது அரிது. ஆனால் காதல் அந்தக் காரித்தைச் செய்து விடுகிறது. காதல் போயின் சாதல் என்ற கவிஞர்களும். காதல் பற்றிய பொன் மொழிகளைச் சொன்னவர்களும் கூட காதலின் இழப்புக்கு ஈடாகச்சாவைச்சொல்லிச் சென்றதும் ஒரு காரணமாகலாம். நிற்க.

கற்பிழந்த பெண் உயிர்வாழக் கூடாது என்பதும் கற்பிக்கப்பட்டது தான். "கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" எந்த இடத்தில் இந்த உவமை கடன்பட்டால் கட்டமுடியாது போனால்... மரணம் அதை நிவர்த்தி செய்துவிடுமா? 'கடன்' தாம் பெற்ற விவசாயக் கடனைக்கட்டமுடியாது. கூட்டங் கூட்டமாக உயிர்விட்ட விவசாயிகளைப்பற்றியெல்லாம் படிக்கிறோம். கோடி கோடியாகக் கடன் பெற்ற எந்த நாடு தற்கொலை செய் தது.சாதாரண குடிமக்களின் வாழ்க்கையைச் சுரண்டும் பெரும் பூதங்களை அவர்கள் இனங் காண்பதுமில்லை. காண முயற்சி செய்யப் போவதுமில்லை.

ஏதோ செய்கின்ற சிறு தொழிலில் திருப்தி கண்டு அறுவடையைக் கொண்டாடி,உண்டு மகிழ்ந்து, ஆடை அணிமணிகள் அணிந்து, தேவைக்குட்படவே செலவுசெய்து உழைத்ததில் பாதியை சுரண்டும் பேர்வழிகளிடம் தொலைக்க குடித்து, சினிமாபார்த்து, வானவில்லாக அந்த நாட்களை முடிக்கும்போது அடுத்த விதைப்பு அவன்முன் பூதமாக வந்துவிடும். மீண்டும் கடன், மீண்டும் உழைப்பு, மீண்டும் அறுவடை, மீண்டும் மகிழ்ச்சி, மீண்டும் இழப்பு வாழ்க்கையே ஒரு மாய வட்டமாய் அவனை சோர்ந்துபோகச் செய்கிறது.

மாடு கட்டறுத்துக்கொண்டு ஓடியது கமக்காரன் அதை விரட்டிச்சென்றான். பலதடவை போக்குக்காட்டிய மாடு நட்டபயிர்களை நாசஞ்செய்து பாய்ந்தது. மாடு அகப்படவில்லை. இயலாமை அவனை கோபப்பட வைத்தது. "மயிர் இந்த மாட்டைப் பிடிக்கேலாதநான் ஏன் இருக் கோணும்" என்றவாறே கிணற்றடி நோக்கியோட மனைவியும் மாடு பிடிக்க உதவுவதற்காகப் பின்னாலேயே ஓட அவன் கிணற்றடிப் புதருள் இருந்த கிருமி நாசினிப் போத்தலை எடுத்து மடமடவெனக் குடித்துமுடித்தான். தாயும் இரண்டு பிள்ளைகளும் கதறித்துடிக்க அவனும் துடித்து இறந்தான். இது சாவுக்கு ஒரு காரணமா?

தாயைத்தந்தை குடி

மாயா

வெறியில் அடித்தான். பதினேழு வயது மகன் அங்காலபோங்கோ என இழுத்துத் தள்ள தந்தை மல்லாக்காக விழுந்து வெறி மயக்கில் படுவா நீ என்னைத் திருத்தவோ... பெத்த பிள்ளை கைவச்ச "பிறகு ஏன் இருக் கோணும்..." கிருமி நாசினியை அருந்திச் செத்தானவன்.

திருமணவீடு - தண்ணீரும் எண்ணைவாங்கும் கொள்கலனும் ஒரே நிறம். விளக்குக்கு எண்ணைவிட்ட கலன் நீர்க்கலனுடன் இருக்க தண்ணீர் விடாயில் வந்த சிறுவன் எண்ணைக்கானை வாயிலூற்ற சுவை வேறுபாட்டில் பேசமுயல புரைக்கேற சிறுவன் சாவடைகின்றான்.

தன்னம்பிக்கை, துணிவு, ஆளுமை எல்லாம் உள்ளவர்களே அதிகம் தற்கொலை செய்கிறார்கள். தற்கொலைக்கு ஒருவரைத் தூண்டும் மனக்கொலை செய்பவர்களும் தண்டிக்கப்படவேண்டும். நியாயமாகப் பட்டால்மட்டும். மனக்கொலைகளின் பிறப்பிடம் அரசுதான். மக்களின் இயல்பு வாழ்க்கையை அவர்கள் மகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும் மன நிறைவோடு வாழவகைசெய்ய வேண்டிய கடமை அரசுக்கேயுண்டு. ஒரு நாட்டின் மக்கள் பெருமளவில் தற்கொலை செய்து கொள்வதானது அரசு தற்கொலை செய்வதற்குச் சமமானது.

---

# இந்திய முகாம்களில் ஈழத்தமிழ் அகதிகள்

தாயகத்தில் போர் நெருக்கடி அதிகரிக்க இடம்பெயர்ந்து தமிழ் நாட்டிற்கு அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழ் மக்கள் அறுபதினாயிரத்துக்கும் அதிகமானோர் பல அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்களில் அதிகளவில் மன்னாரிலிருந்து சீறும் கடலலைகளை சாதாரண மீன்பிடி வள்ளங்களால் கடந்து தமிழ் நாட்டின் கரைகளைத் தொட்டவர்கள்.

குடும்பம் குடும்பமாகச் சென்ற இந்த மக்கள் பல வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இன்னமும் தமிழ் நாட்டில் நிறுவப்பட்டிருக்கும் அகதி முகாம்களில் தங்களது வாழ்வை கழித்து வருகின்றனர்.

முழுமையான வாழ்வுக்கான வசதிகளைக் கொண்டிராத இந்த மக்கள் இன்னமும் முகாம்களுக்குள் தமது வாழ்வைக் கழித்து வருகின்றனர்.

இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் இந்த பெருங்கடலை இந்த மக்கள் கடப்பதற்கா இந்திய மீனவர்களுக்கும், உள்ளூர் மீனவர்களுக்கும் பல ஆயிரக்கணக்கான ரூபாக்களை வழங்கியே தமிழ் நாட்டை சென்றடைந்தார்கள்.

இவ்வாறு செல்லும்போது கடல் விபத்துகளில் அகப்பட்டு நூற்றுக் கணக்கான அகதிகள் தங்கள் உயிர்களை இழந்தார்கள்.

இந்த நிலையில் தமிழ் நாட்டிற்கு சென்று பல வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் மீளவும் தாயகத்துக்குத் திரும்ப அவர்கள் விரும்புகின்றபோதும் அதற்கான முழுமையான நடவடிக்கைகளை தமிழ் நாட்டு அரசோ அல்லது இலங்கை அரசோ மேற்கொள்வதாக இல்லை.

இதன் விளைவு ஆபத்துமிக்க கடலை பாதுகாப்பற்ற சாதாரண மீன்பிடி வள்ளங்கள் மூலமாகக் கடக்க முயல்வதால் உயிரிழப்புக்களை சந்திக்கின்றனர்.

இப்பொழுது இறுதியாக கடந்த சனிக்கிழமை தமிழ் நாட்டிலிருந்து படகுமூலம் தாயகம் திரும்பிக் கொண்டிருந்த ஏழு பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்திய கரையிலிருந்து ஈழத் தமிழர்கள் பதினான்குபேரை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட மீன்பிடிப்படகு மோசமான காலநிலைக்குள் சிக்கிக் கொண்டதால் இந்த அவலம் நிகழ்ந்துள்ளது.

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை திரும்ப முயலும் அகதிகளில் ஆபத்துக்களை எதிர்கொள்வது மிக அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

சிலவேளைகளில் பெருமளவு பணத்தை இந்த அகதிகளிடம் பெற்றுக் கொண்டு தமது படகுகளில் ஏற்றிக் கொண்டுவரும் இந்திய மீனவர்கள் கரையிலிருந்து சில மைல்களுக்கு அப்பால் இருக்கும் மண் திட்டிகளில் இறக்கிவிட்டுச் செல்வதால் அநாதரவாக தள்ளப்படும் இந்த அகதிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அதிகம்.

மணல் திட்டிகளில் இறக்கி விடப்படும் அகதிகள் மீது கடற்படையினர் மேற்கொள்ளும் பாலியல் வல்லுறவுகளும் அந்த அகதிகளின் பொருட்களை அபகரிப்பதும் அதிகரித்துள்ளது.

அண்மையில் இவ்வாறு இந்திய மீனவர்களால் மணல்திட்டியில் இறக்கிவிடப்பட்டிருந்த அகதிகளில் ஒரு இளம்பெண் மீது கடற்படையினர் பாலியல் வல்லுறவை மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்ப முயலும் அகதிகள் விவகாரத்தில் இந்த மக்களின் பாதுகாப்பையும் இந்த எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு புலிகள் இயக்கம் நடவடிக்கையினை மேற்கொண்ட போதும் இந்திய அரசின் திட்டமிட்ட நடவடிக்கையினாலும் இலங்கை அரசின் நழுவல் போக்கினாலும் அந்த மக்களுக்கு இன்னமும் உருப்படியான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை.

இதனால் அந்த மக்கள் ஆபத்தான பயணங்களை மேற்கொள்ளவேண்டியவர்களாக உள்ளனர்.

மிக அண்மைக்காலமாக தாயகம் திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுகிறது.

இந்த நிலையில் அகதிகள் விவகாரத்தில் தொடர்புடைய ஐக்கியநாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் கூடுதலான கவனத்தை மேற்கொள்ள வேண்டும். காரணம் தாயகம் திரும்ப முயலும் அகதிகளுக்கான பாதுகாப் பான பயண ஏற்பாடுகளும், அவர்கள் தாயகம் திரும்ப விரைவான நடவடிக்கைகளுமே அவசியமாகவுள்ளது.

— புகழன்

# தலைவரின் எண்ணத்தில் தாயகம் மருத்துவமனை!



15.05.2005 தமிழ் மக்களின் வாழ்வில் மற்றொரு பிரகாசமான நாள் என்று கூறினால் அதுமிகையாகாது. அதாவது அன்றுதான் தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணக்கருவுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற எமது தமிழ் உறவுகளின் பெரும் உதவியுடன் தாயகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கான அனைத்து அதி நவீன மருத்துவ வசதிகளுடன் கூடிய தாயக மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த அமையப்போகும் மருத்துவமனை தொடர்பாக மேலதிகத் தகவல்களைப்பெற்றுக்கொள்ளும் நோக்கில் தமிழீழ மருத்துவ களஞ்சியப் பொறுப்பாளர் மனோஜ் அவர்களுடன் தொடர்பு கொண்டோம். தாயக மருத்துவமனை தொடர்பாக அவர் தரும் விபரங்கள் வருமாறு.

மருத்துவ சிகிச்சைகளை பொறுத்தவரை முதலாம்கட்ட சிகிச்சை,இரண்டாம்கட்ட சிகிச்சை, மூன்றாம்கட்டசிகிச்சை இதில் முதலாம் கட்டம் சாதாரணசிகிச்சைகளை உள்ளடக்குகின்றது. இரண்டாம் கட்டம் என்பது முதலாம் கட்டத்திலிருந்து சற்றுக் கூடுதலான சிகிச்சை அளிப்பு. பெரும்பாலும் இங்கிருக்கின்ற எல்லா வைத்தியசாலைகளும் இரண்டாம் கட்ட சிகிச்சை அளிப்பினை மட்டுமே மேற்கொண்டு வருகின்றன. மூன்றாம் கட்டம் என்பது அதி நவீன மருத்துவ சிகிச்சை அளிப்பதாகும். இங்கு உருவாக்கப்போகின்ற தாயகமருத்துவமனை இதனை மையமாக வைத்தே உருவாக்கப் போகின்றோம்.

அதாவது அமையப்போகின்ற இந்த தாயக மருத்துவமனையில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை, இதயம் சம்பந்தமான சத்திரசிகிச்சைகள், நரம்பியல் சம்பந்தமான சிகிச்சைகள் போன்ற இவ்வாறான அதி நவீன சிகிச்சை அளிக்கக்கூடியவகையில் அமையும்.

இப்படியான ஒரு மருத்துவமனை கட்ட வேண்டிய தேவை ஏன் எங்களுக்கு ஏற்பட்டது என்றால் புலம் பெயர்ந்து வாழ் கின்ற எங்கட தமிழ் மருத்துவர் கள் அங்கு சகல துறைகளிலும் விசேட நிபுணத்துவம் பெற்றிருக்கின்றனர். இவ்வாறு வெளிநாடுகளில் வாழ்கின்ற வைத்திய நிபுணர்கள் தாயகத்திற்கு வந்து தங்களின் சேவைகளை வழங்கத் தயாராகவே உள்ளனர். மேலும் பலர் இங்கு வந்து தங்களால் இயன்ற மருத்துவ உதவிகளை வழங்கிச் செல்கின்றனர்.

ஆனால் எங்களிடம் இருக்கின்ற மிகப்பிரதான பிரச்சினை என்னவென்றால் அவ்வாறு ஒவ்வொரு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றவர்கள் இங்கு வருகின்றபோது நாம் அத்துறை சார்ந்து அவர்களிடம் இருந்து பயனை முழுதாகப்பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளது.

காரணம் எம்மிடம் அதற்கேற்ற வகையில் ஒரு மருத்துவமனையோ அல்லது ஆய்வுகூட வசதிகளோ அல்லது சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களோ இல்லை. இதனால் வருகின்ற வைத்திய நிபுணர்களிடம் இருந்து முதலாம் கட்டம் இரண்டாம் கட்ட சிகிச்சைகளை பெற வேண்டியுள்ளது.

ஆனால் வருகின்ற மருத்துவ நிபுணர்களிடம் மூன்றாம் கட்ட சிகிச்சை பெருமளவுக்கு அவர்களிடம் திறமை இருக்கின்றது. இதனால் தான் இனிவரும் காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்பதற்காகவே

**தமிழ்**

தாயக மருத்துவமனை தற்கால மருத்துவ உலகின் எல்லா வசதிகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் அமைக்கப்போகிறோம்.

இதைவிட பெரும்பாலான எமது மக்கள் அதி நவீன சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பில் இருக்கின்ற தனியார் மருத்துவமனைக்கு செல்கின்றனர். இதன்மூலம் மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்படுகிறது. அதாவது போக்குவரத்துப் பிரச்சினைகள், தடைமுகாம்களில் சோதனைகள், பொருளாதாரச் சிக்கல்கள், நீண்டதூர பிரயாணம் இவை எல்லாவற்றையும்விட மொழிப்பிரச்சினைகள் குறிப்பாக மேலதிக சிகிச்சைக்காக தமிழர் ஒருவர் கொழும்பு தேசிய மருத்துவ மனைக்குச் சென்றால் அங்கு அவர் இனரீதியாக பாகுபாடு போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் கொழும்பு சென்று சிகிச்சை பெற வேண்டியுள்ளது.



இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணத்திற்கு அமைய தாயக மருத்துவமனை தாயக மக்களுக்கு முழு அளவிலான மருத்துவ சிகிச்சைகளை வழங்கும்.

சிறிலங்காவின் தலைநகரில் இயங்குகின்ற பிரபல்யமான மருத்துவமனைகளை விட தாயக மருத்துவமனை சிறப்பாக இயங்கும். இந்த மருத்துவமனை முழு அளவில் தாயக மக்களைக் கருத்தில் கொண்டே ஆரம்பிக்கப்படுகிறது.

இருபத்திரெண்டுகோடி ரூபாவுக்கு மேலான பொருட்செலவில் கட்டப்படுகின்ற இம் மருத்துவமனைக்கான செலவுகளை வெளிநாடுகளில் வாழ்கின்ற எமது தமிழ் உறவுகளே வழங்குகின்றனர். மருத்துமனைக்கான அமைப்பு முறை உதவிகளை லண்டனில் உள்ள தமிழர் நல வாழ்வு இணை யம் வழங்குகின்றது. ஆளணியை பொறுத்தவரையில் வெளிநாடுகளில் தமிழ் மருத்துவ நிபுணர்கள் தங்களின் சேவைகளை வழங்க தயாராகவே உள்ளனர். ஒரு சிலர் இலவசமாகவே தங்களின் சேவைகளை வழங்கவுள்ளனர். சிலரை பணம் கொடுத்துத்தான் வரவழைக்க வேண்டும் என்றாலும் அதற்கும் நாங்கள் தயாராகவே உள்ளோம் இதைவிட இங்கிருக்கின்ற மருத் துவர்களை உள் வாங்கி ஒரு சிறப்பான மருத்துவமனையாக இயக்கவுள்ளோம்.



டாக்டர் செங்காதரன் அவர்கள் அடிக்கல் நாட்டும் போது...

பெரும்பாலும் போரினாலும், ஏனைய அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு போதி யளவு பொருளாதார வசதிகளற்று காணப்படும் மக்களுக்கு இம் மருத்துவ நிலையத்தின் பங்களிப்பு. எப்படியிருக்கும் என்று கேட்டதற்கு, மனோஜ் அவர்கள் கூறும்போது,

இந்த மருத்துவமனை உருவாக்கத்தின் நோக்கமே அவ்வாறான எமது தாயக மக்களுக்கு அதி நவீன மருத்துவ சிகிச்சைகளை இங்கேயே அளிப்பது தான். சிலவேளைகளில் கஸ்ரப்பட்ட எமது மக்களுக்கு இலவசமாகவும் வழங்குவோம் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகை மட்டும் பெற்றுக்கொண்டும் வழங்குவோம். குறிப்பாக இந்த மருத்துவ மனையின் நோக்கம் இலாபம் அல்லது பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு தாயகத்திலேயே எல்லா வகையான மருத்துவ சிகிச்சைகளையும் அளிப்பதுவே ஆகும். இது ஒரு மக்கள் மருத்துவமனை என்பதனை கவனத்தில் எடுக்கவேண்டும்.

இம் மருத்துவமனை உருவாக்கத்திற்குத் தனியே புலம் பெயர்ந்து வாழ்கின்ற எமது மக்கள்தான் உதவிசெய்யவேண்டும் என்று இல்லை. எமது தாயகத்திலேயே உதவி செய்யக்கூடிய பலர் உள்ளனர். அவ்வாறானவர்களும் எமக்கு உதவிகள் செய்தால் இதன் உருவாக்கத்திற்கு பெரும் உதவியாக இருக்கும் என்கிறார் மருத்துவப் பிரிவைச்சேர்ந்த மனோஜ் அவர்கள். தமிழீழத்தேசியத் தலைவரின் தமிழீழ கட்டமைப்பு தொடர்பான தூரநோக்கு சிந்தனையில் தமிழ் மக்களது வாழ்வில் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறார். அதன் ஒரு வெளிப்பாடே இந்த தாயக மருத்துவமனையும், அதி நவீன சிகிச்சைகள், நவீன சத்திர சிகிச்சை கட்டடங்கள், விசேட வைத்திய நிபுணர்கள் என நவீன மருத்துவ உலகோடு போட்டியிடும் ஒரு மருத்துவ மனையாக தாயக மருத்துவமனை தாயக மக்களுக்கு தனது சேவையினை இன்னும் இரண்டு வருடங்களின் பின் வழங்கப்போகின்றது என்பது மகிழ்ச்சியான விடயம்.

## உன்னதமான உறவுகள்

எம் இன்பத்தினுள்ளும் துன்பத்தினுள்ளும் எம்மோடு ஒன்றித்து உறவாடும் உறவுகளை எந்தவொரு ஜென்மத்திலும் எம்மனங்கள் மறந்து விடக்கூடாது. நாம் பிறக்கின்ற போது எமக்குக்கிடைக்கின்ற உறவினை விட நாம் எதிர்பாராமல் கிடைக்கின்ற உறவு உண்மையான உறவாகும்.

இவ்வுறவுகளோடு நாம் நிறைந்த அன்பினை பெற்றுக்கொள்வதோடு எமக்கு ஏற்படுகின்ற இன்னல் எதுவென்றாலும் தாமும் அதனோடு பங்குகொள்கின்ற மனநிலை நிறைந்து காணப்படுவார்கள். இவ்வாறாக உறவாடும் அவர்களோடு ஆழவேரோடி ஆலமரம்போல் எம் உறவினை மேலும் பலப்படுத்திக் கொள்ளல் நல்லதொன்றாகும். நாம் பலரோடு பழகினாலும் அவர்கள் அனைவரும் எம்மோடு உறவாட முனையமாட்டார்கள். இது ஓர் உண்மையானது. சிலர் எம்மோடு உறவு வைத்துக்கொண்ட பின்னர் அவர்கள் எங்களோடு தங்கள் உறவு வைப்பினை எவ்வாறு எங்கள் மீது உறவு வைப்பிடுவதை வைத்துக் கொள்கின்றார்கள் என்பதினை அறிந்துகொள்ளமுடியும்.

நாம் வாழ்வினிலே பல இன்னல் இடர்களைத் தாண்டி வந்துள்ளோம். ஒவ்வொருவரும் தம் வாழ்கையோடு நிறையவே போராடியுள்ளார்கள். இவ்வாறு அவர்கள் எம்மோடு வைத்த பாசவுறவு மூலம் தாம் அறிந்துகொள்ள முனைவார்கள். இச்சந்தர்பங்களில் எம் மனங்களிலிருந்து ஒவ்வொரு பக்கங்களாய்ப் புரட்டி அவர் ஆழ்மனதினுள் நீங்கள் வைப்பிடுவதில் எந்தவொரு பிரச்சினையுமில்லை. இவ் வைப்பிடுவதன் மூலம் உங்கள் உறவின் அத்திவாரக்கற்களிற்கு இன்னும் உரமூட்டும்.

உண்மையில் ஒருவன் இன்பத்திலும் துன்பத்திலும் கலந்து கொள்கின்ற மனநிலை காணப்படுவதில்லை. மாறாக இவ்விரண்டிலும் எம்மோடு உறவாகும் உறவோடு எம்வாழ்வியலில் பட்ட சுமைகளை சுகமாய் அவர்களிற்கு பகிர்ந்தளிக்கும் போது எம் கண்கள் எம்மை அறியாமலே கண்ணீரை பிரசவிக்கும். இக் கண்ணீர் பிரசவிப்பினுள் தம் உதடுகள் மூலமாய் மன ஆறுதல் தரக்கூடியவை பகிர்ந்துகொள்வார்கள். இவற்றோடு நிறுத்திவிடாது. எம்மோடு பாசவூற்றுக்களை ஏற்படுத்திக்கொள்வார்கள். வானத்தில் இருக்கும் வெண்மதி பௌர்ணமி ஒளியினை ஓர் நாள் தரும் இவ்வுறவுகள் எம்மனங்களில் தினம் பௌர்ணமி ஒளியாவார்கள். கூடி வந்த உறவைவிட எதிர்பாராமல் கிடைத்த இவ்வுறவுகள் உயிர் கூட உவகை செய்வார். இதில் எந்த ஐயப்பாடுமில்லை. எதிர்பாரா உறவோடு ஒன்றித்து வாழுங்கள். மனம் விட்டு கதைத்து மகிழ்வினை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் எவ்விடயத்தினை கூறமுனையும்போது ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தோடு நல்விடயங்களையும் உங்களிற்கு ஏற்படுத்தி தருவார்கள். அதனை ஏற்று நடக்கும் படியாய் நடந்து உறவினை பலப்படுத்தி மலரத்துடிக்கும் மொட்டுப் போல் உங்கள் மனதினில் அழியா உறவாய் வாழ வழி தேடுங்கள்.

சி.மதீஸ்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 20 . 05 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# புனிதரின் அடையாளம்!

அமைதியின் அடையாளமான கௌதம புத்தரின் சிலை ஒன்று திருகோணமலையில் வன்முறைக்கு கருவாக அமைந்துவிட்டது.

திருமலை நகரில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றக்கோரி நடத்தப்பட்ட ஹர்த்தால் மற்றும் கதவடைப்பு போராட்டத்தால் திருகோணமலையின் இயல்பு வாழ்வு பாதிக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

ஒரு மார்க்கத்தின் அடையாளமான இந்த புத்தர் சிலை ஏன் திருகோணமலையில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

திருமலை நகரின் மத்தியில் நிறுவப்பட்ட இந்த புத்தர் சிலைக்கு எதிர்ப்புக் காட்டப்பட்டதன் மூலம் புத்த மார்க்கத்திற்கு எதிரான மத எதிர்ப்பு எண்ணம் உருப் பெற்றுள்ளதா என்ற கேள்வி எழலாம்.

உண்மையில் அங்கு உருவான எதிர்ப்புப் போராட்ட மானது பௌத்த மார்க்கத்திற்கு எதிரானது அல்ல.

பௌத்த மார்க்கத்தை பூசித்து பௌத்த துறவிகளாக இருந்து வழிகாட்டிய எத்தனையோ தமிழ் பௌத்த பிக்குகள் வரலாற்றில் உண்டு.

தமிழ் பௌத்தம் இலங்கைத்தீவில் விசாலித் திருந்த பெருமையும் உண்டு.

ஆனால், இன்று திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மணலாறு என்று தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமித்து தமிழ பிரதேசங்களையெல்லாம் சிங்களக் குடியேற்றங்களாக அபகரித்தபோதெல்லாம் அங்கு முதலில் நிறுவப்பட்டது விகாரைகளும் புத்தர் சிலைகளுமே.

இன்று கௌதம புத்தரின் தத்துவங்களையும் போதனைகளையும் பூசிக்கும் ஒரு மார்க்கத்தின் அடையா ளத்தை ஒரு ஆக்கிரமிப்புச் சின்னமாக மாற்றிய பெருமை சிங்கள தேசத்தின் அரசியல் தலைவர்களையும் சில புத்த பிக்குகளையுமே சாரும்.

மார்க்கத்தை மார்க்கத்தின் வழியில் செல்லவிடாது, மார்க்கத்தை அரசியல் சாக்கடைக்குள் கலந்து அரசியல் இலாபங்களுக்கான வாசலாக மார்க்கத்தை பயன்படுத்த முயல்வதன் அச்சமே திருகோணமலை மக்களின் அச்சமாகும்.

இத்தகைய நடவடிக்கைகள்மூலம் மார்க்கத்தின் புனிதத்தை கெடுக்கும் காரியங்களில் சில புல்லுருவிகள் செயற்படுகின்றமை தெளிவாகவே தெரிகிறது.

மார்க்க அடையாளம், மதச்சின்னங்கள், ஆலயங் கள் என்பன அந்தந்த மதத்தின் புனித தன்மைக்கு ஏற்ப அதன் இசைவுக்கு ஏற்ப அதனை நிறுவுவதும் வழிப்படுத்துவதுமே சாலச்சிறந்ததாகும்.

இன்னுமொரு மதத்தவருக்கோ, இனத்தவருக்கோ எந்தவகையிலும் அசௌகரியங்கள் ஏற்படாதவண்ணம் கையாளவேண்டியது மிக அவசியமானதாகும்.

ஆனால், திருமலையில் நிறுவப்பட்ட புத்தர் சிலையின பின்னால் மறைந்து இருக்கும் மறைகரங்களின் அடிப்படை நோக்கம் ஆன்மீகத்தின் பாற்பட்டது அல்ல.

திருகோணமலையில் மார்க்கத்தின் பெயரால் இனங் களுக்கிடையில் ஒரு மோதலை ஏற்படுத்துவதேயாகும்.

கௌதம புத்தரின் எண்ணங்களுக்கும் அவரின் சிந்தனைகளுக்கும் அப்பால் குறுகிய எண்ணங்களுடன் செயற்படமுனையும் புல்லுருவிகள் உலகத்தில் மதிக்கப் படும் ஒரு மார்க்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முனைகின்றனர்.

இன்னும் தமிழ் மக்கள் மத்தியிலும் உலக மாந்தர் மத்தியிலும் கௌதம புத்தரின் தத்துவங்கள் மிக உயர்வாகவும் புனிதமாகவுமே பூசிக்கப்படுகிறது.

இது இலங்கைக்கு அப்பால் சீனா, ஜப்பான், தாய்லாந்து என உலகின் பல நாடுகளிலும் பின்பற்றப் படுவது மிகச்சிறந்த உதாரணமாகும்.

ஆனால் அங்கெல்லாம் கௌதம புத்தரின் சிலையை இனவாதத்தின் அடையாளமாகவோ, ஆக்கிரமிப்பின் குறிகாட்டியாகவோ எந்த இன மக்களினதும் மனங்களில் சிறுகீறலாக கூட விழாது, புனிதமாகவே மதிக்கப்படும் அளவுக்குப் பேணப்படுகிறது.

ஆனால் இலங்கையில் மட்டும் பௌத்த மார்க்கத் தின் புனிதரின் அடையாளத்தை சிங்கள இனவாதிகள் அதன் புனிதத்தன்மையை கெடுக்கும்வகையில் அரசிய லுக்குள் பயன்படுத்துவது மிகவும் வேதனையான விடயமே.

---

மட்டக்களப்பு சந்திவெளியில் நடைபெற்ற மக்கள் எதிர்ப்புப் போராட்டம் தொடர்பாக இலங்கைத்தீவில் எதிரெதிரான இரண்டுவித ஊடகக்கருத்துருவாக்கம் உருவாகியது. ஒன்று மக்கள் அணிதிரண்டு சாத்வீகமான அரசியல் போராட்டத்தை நடத்தியபோது இதன் மீது படையினர் இராணுவ வன்முறையை பிரயோகித்து தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை ஆயுத முனையில் ஒடுக்க முனைந்ததை வெளிப்படுத்தியது. இது பெரும்பாலான தமிழ் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் கருத்தாக வெளிவர, மற்றொன்று புலிகள் சீருடையின்றி இராணுவத்துடன் மோதலில் ஈடுபட்டனர் எனும் கருத்துருவாக்கத்தைத் தோற்றுவித்தது. இது சிங்கள ஆங்கில கடும்போக்கு மற்றும் மிதவாத அச்சு மற்றும் இலத்திரனியல் கருத்துருவாக்கமாக அமைந்தது.

ளது. ஐக்கிய தேசியக்கட்சியை பச்சைப்புலிகள் எனவும் மேற்குலகை வெள்ளைப் புலிகள் எனவும் வர்ணிக்கும் இவர்கள் தம்மை துண்டு துண்டுகளாக வெட்டிப் போட்டாலும் தாம் ஒருபோதும் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்விற்கு அனுமதிக்கப் போவதில்லை என தேசிய தேசபக்த இயக்கம் எனும் ஜே.வி.பி, ஹெல உறுமய கூட்டினூடாக கூக்குரல் இடுகின்றனர்.

(Even if they chop us into pieces, we will never accept federalism as a solution to tha conflict-National Patriotic Movement) இதுவே இன்றைய பேரின வாதிகளின் நிலைப்பாட்டிற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமெனும் சொற்றொடரின் பொருளாகும் நிலைப்பாடாகிறது. இதனையே அவர்கள் கண்டியில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்குரிய



# சிந்தப்போகும் குருதியின் முன் சாட்சியா...?

இது இன்று நேற்றல்ல இலங்கைத்தீவின் இனத்துவ முரண்பாட்டின் ஆரம்பகாலம் முதலே 1930 களிலேயே இப்போக்கு உருவாகிவிட்டது. தமிழ் மக்களின் சாத்வீகப் போராட்டங்கள் எல்லாமே ஆயுதமுனை வன்முறையில் ஒடுக்கப்பட்டதே. 1958,1961 எனத் தொடரும் இனக்கலவரங்களின் இனத்துவமையக்கருத்துருவாக்கமே இலங்கையின் நவீன வரலாறாக விரிந்துசெல்கிறது.

யுத்தம் ஓய்வுக்கு கொண்டுவரப்பட்ட நீண்ட சமாதான பரிவர்த்தனைக் காலத்திலும் இந்த இனத்துவமையக் கருத்துருவாக்கம் பண்புரீதியாக மாற்றம் எதற்கும் உட்படாது அப்படியே இருக்கிறது என்பது தற்போதைய சமாதானத்தின் பலவீனத்தையே சுட்டிநிற்கிறது. இந்த சமாதானத்தின் ஊடே தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் கௌரவமான சகவாழ்வை வழங்கக்கூடிய சமஷ்டிமுறையிலான அதிகாரப் பரவலாக்கத்தை தமிழ் மக்கள் வேண்டிநிற்க சிங்கள மக்களோ ஒற்றையாட்சியில் ஒரே இனம் ஒரே மதம் எனும் கோட்பாட்டுக்கு ஊறு ஏற்படாமல், ஆனால் யுத்தம் பற்றிய பயமின்றிய ஒரு வாழ்வையே இலங்கைத்தீவின் சமாதானமாக அர்த்தப்படுத்தி நிற்கின்றனர். இணையமுடியாத இரு துருவங்களாக இக்கருத்துக்கள் இன்றும் இத்தீவில் பண்புரீதியான மாற்றங்களிற்கு உட்படாமல் ஆழ வேரூன்றியுள்ளன.

இந்த நாடு சிங்கள பௌத்த மக்களுக்கு மாத்திரம் சொந்தமானது என நினைப்பதுதான் பிரச்சினைகளுக்கு மூலகாரணம். இந்நாடு இங்கு வாழும் சகல இனமக்களுக்கும் சொந்தமானது என்பதை உணர்ந்து சகல அதிகாரங்களையும் நாம் பகிர்ந்து கொள்ளவேண்டும் என பத்திரிகைகளுக்கு பேட்டியளித்த வடகிழக்கு ஆளுநர் டிரோன் பெர்ணான்டோ போன்றவர்கள் தாம் சொல்பவற்றிற்கு செயல்வடிவம் கொடுத்து சாதாரண சிங்கள மக்களின் கருத்துக்களாக இவற்றை மாற்றும் ஆற்றலும், இதயசுத்தியும் கொண்டிருக்கிறார்கள் என்பது எதிர்கால வரலாறு சொல்லவேண்டியவிடயமாகும். பெரும்பாலும் அறிக்கைகளாகவே இவை அடிபட்டுச் சென்றுவிடும்.

தமிழ் மக்களின் உரிமையை அவர்களின் கௌரவமான வாழ்வுக்குரிய அரசியல் தீர்வை இந்தத்தீவின் நிலையான சமாதானத்தை அதன் வழிமுறைகளை வலியுறுத்தும் நியாயமான சிந்தனையாளர்கள், ஊடகவியலாளர்கள் மீது இப்போது நேரடியாகவே கொலை அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது. தமிழர் தேசியத்தின் குரலாக ஒலித்த மாமனிதர் சிவராமின் படுகொலைக்கு உரிமைகோரிய "தேரபுத்தபாயபடை" இப்போது தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து புதிய யுத்தமுனை ஒன்றை மக்களுக்கெதிராக தொடங்கியுள்

செய்தியாகவும் வெளியிட் டுள்ளனர்.

1958 தமிழுக்கு தேசிய மொழி அந்தஸ்து வழங்குவதை எதிர்த்து கண்டிக்கு பாத யாத்திரை மேற் கொண்டவர்களிலிருந்து இன்றுவரை பேரினவாதத்தின் கருவிகளாக செயற்படுபவர்களே இந்தத் தேசத்தின் இரத்தக்கறைக்குக் காரணமாக அமைந்தவர்கள் என்பது வரலாறு. வெளுத்துப்போன புரட்சிச்சாய முகங்களோடு இப்போது ஜே.வி.பி தமிழ் மக்களுக் கெதிரான பேரினவாத போர் முனையைத் திறந்துள்ளது. சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவிலும் இராணுவப்படையணிகளுக்குள் ளும் பெருமளவு ஊடுருவியுள்ள இவர்கள் யுத்தநிறுத் தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியுள்ளனர். அது

சஞ்சிகன்

மட்டுமல்ல பெரும்பாலான சிறிலங்காவின் தொழிற்சங்கங்களில் அவர்களுடையகையே ஓங்கியிருப்பதால் இனிவரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியினுடையதோ அல்லது தனித்த சுதந்திரக்கட்சியி னுடையதோ ஆட்சி ஸ்திரமாக அமையமுடியாது போகும் பொழுது வேலைநிறுத்தங்கள்மூலம் பெரும் நெருக்கடிகளுக்குள்



உள்ளாக்கப்படுமென எதிர்பார்க்கப்படு கிறது.

இவர்களால் இன்று பொத்துவிலிலும் திருகோணமலையிலும் நிறுவப்பட்ட திடீர் புத்தர்சிலைகள் இனிவரும் காலங்களில் சிந்தப்படப்போகும் இரத்தத்தின் முன்சாட்சியங்களாக அமைந்திருக்கின்றன.

எப்போதும் போலவே
ஓநாய்கள்
தமது இரத்த வெறி
தர்மத்தை நியாயப்படுத்துகின்றன.
கழுத்து நெரிக்கப்பட்ட
ஆட்டுக்குட்டிகளின்
கண்களில் வடிந்த
இரத்தக் கோடுகளின் மீது
மீண்டும் மீண்டும்
மொய்க்கின்றன இலையான்கள்
இரத்தவாதப் பௌத்தத்தின்
கௌதமனே நீ
எத்தனை முறைதான்
பலியிடப்படுவாய்.

# தொடர்ந்து ஏமாற்ற முடியுமா?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் போல் மற்றவர்களை முட்டாள்கள் என நினைத்துக்கொண்டு தொடர்ச்சியாகப் பேசுவதற்கு இலங்கை அரசியலில் வேறொருவரும் இல்லை எனத் துணிந்து கூறலாம். அதாவது அவர் அரசியலில் தீவிரமாக நுழைந்த வேளையிலிருந்து இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுவரை அவர் ஆற்றிய உரைகள் அனைத்தும் அவ்வாறானதாகவே இருந்துவந்திருக்கிறது.

தேர்தல் விஞ்ஞாபனம் என்பது தேர்தலில் வெற்றிபெறுவதற்கானது மட்டுமே என்பது சிறிலங்கா அரசியல்வாதிகளின் நிலைப்பாடு. சரி அதில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டாலும் பரவாயில்லை. அவற்றை நிறைவேற்றாமலேயே தாம் நிறைவேற்றிவிட்டதாக அபத்தமான வாதங்கள் மூலம் நிரூபிக்க அவர்கள் முயல்வார்கள்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ அதனிலும் மேலான அபத்தவாதங்களை முன்வைத்துக்கொண்டேயிருப்பார். வாக்குறுதிகளை தன்னால் நிறைவேற்றமுடியவில்லை எனவும் கூறுவார். அவற்றை நிறைவேற்ற முடியாமைக்கு யார் மீதாவது பழிபோடுவார். ஆனால் தான் அதனை நிறைவேற்றியே தீருவேன் எனவும் கூறுவார். ஆனால் செயற்பாட்டில் எதனையுமே காட்டமாட்டார்.

இவ்வாறுதான் சமாதான தேவதையாகத் தன்னைக்காட்டிக்கொண்டு 1994இல் பதவிக்கு வந்த அவர் ஒருபுறம் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதாகக் கூறிக்கொண்டு மறைமுகமாக யுத்தசூழ்நிலையைத் தோற்றுவித்துக்கொண்டிருந்தார்.

சமாதானம் ஏற்பட்டால் மக்களின் வாழ்வு சுபீட்சமடையும் எனக் கூறிக்கொண்டு மறுபுறம் யுத்தத்திற்குப் பெருமளவு நிதியை ஒதுக்கி பாரிய யுத்தமொன்றுக்குத் தயாராகிக்கொண்டிருந்தார். தமிழ் மக்களின் போராட்டத்தை புலிகள் தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்க "தமிழ் மக்களைப் புலிகளிடமிருந்து விடுவிக்க" யுத்தம் நடத்துவதாகக் கூறி தமிழ் மக்களைப் பெரும் அவல வாழ்வுக்குள் தள்ளினார்.

பெரும் கோடிக்கணக்கில் செலவிட்டு நடத்திய யுத்தத்திற்கு "சமாதானத்துக்கான யுத்தம்" என்று பெயர்சூட்டினார்.

இறுதியில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் மீள முடியாத அவலத்திற்குள் தள்ளப்பட்டார்களேயொழிய அவரால் யுத்தத்தில் வெற்றிகொள்ளவும் முடியவில்லை, சமாதானத்தை ஏற்படுத்தவும் முடியவில்லை. ஏனெனில் அவர் கூறிய எதுவுமே சரியானவையல்ல.

இந்த விடயத்தில் மட்டும்தான் அவரின் நேர்மையீனம் வெளிப்பட்டது என்பதல்ல அவருடன் அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியிலும் செயற்பட்ட மிகநெருக்கமானவர்கள் கூட இன்று அவருடன் இல்லை என்பது மட்டுமல்ல அவரது விரோதிகளாக்கப்பட்டும்விட்டனர். அதாவது இன்று அவரால் தீவிர விரோதிகளாகவே பார்க்கப்படுகின்றனர்.

எஸ்.பி.திசாநாயக்கா, ஜீ.எல்.பீரிஸ் போன்ற அரசியல்வாதிகளாகட்டும் வசந்தவிக்கிரம துங்க, விக்டர்ஐவன் போன்ற ஊடகவியலாளர் ஆகட்டும் அவரைச் சூழவிருந்த புத்திஜீவிகளாகட்டும் அனைவருக்குமே இன்று அதேகதிதான் கிடைத்துள்ளது. ஏன்? இன்றும் கூட பிரதமர் மகிந்த ராஜபக்சவின் நிலையும் அவ்வாறுதான்



சென்றுகொண்டிருக்கிறது.

இவற்றுக்குக் காரணம் சனாதிபதி சந்திரிகாவின் நேர்மையீனமே. அவர் எப்போது எவ்வாறு பேசுவார் எவ்வாறு நடந்துகொள்வார் என்பது ஊகித்தறியமுடியாத ஒன்று.

இன்று அவரது அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பியினருடன் அவர் வைத்துக்கொண்ட உறவு நேர்மையானதல்ல என்பது வெளிப்படை. இனப்பிரச்சினை விடயத்தில் உளப்பூர்வமாக இருதரப்பும் ஒரேகொள்கைகளைக்கொண்டிருப்பினும் உலகை ஏமாற்ற இரு தரப்பும் நடந்துகொள்கின்ற முறைகள் மிகவும் மோசமானவை.

இந்நடவடிக்கைகள் தனியே தமிழ் மக்களை மட்டும் ஏமாற்ற எடுக்கப்படுபவையல்ல. சிங்கள மக்களையும் உலகையும் கூட ஏமாற்றும் நோக்கம்கொண்டவை.

ஜே.வி.பியை பொறுத்தவரை அதன் அதிகாரத்தை நோக்கிச்செல்வதற்கான மூலதனமே இனவாதம்தான். அதாவது ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஆரம்பகாலத்தில் தமது வளர்ச்சிக்கு எவற்றைக் கையிலெடுத்துக்கொண்டனவோ அதனை இன்று ஜே.வி.பி எடுத்துக்கொண்டுள்ளது.

ஐ.தே.கவும் சு.கவும் இன்று இனவாதத்தைக் கைவிட்டுவிட்டன என்பதல்ல இதன் அர்த்தம். இன்று ஆட்சியாளர்கள் என்றரீதியில் வெளிப்படையாக இனவாதிகள் என்பதைக் காட்டிக் கொள்ளமுடியாதநிலை அவர்களுக்கு உள்ளது. அந்த நிலை இன்று ஜே.வி.பிக்கு இல்லை. அதற்கு வளர்ச்சிபெற்று ஆட்சிபீடத்தைத் தனித்துக் கைப்பற்றவேண்டிய தேவையே இன்று உள்ளது. எனவே அதற்கு அது பாடுபடுகிறது.

அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த சனாதிபதி சந்திரிகா முயல்கிறார். எனவே ஒருபுறம் தனது ஆட்சிகவிழும் ஆபத்து இருக்கையிலும் தான் துணிவாக நடந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கப்போவதாக காட்டிக்கொள்கிறார். தனது ஆட்சிக்குமட்டுமல்ல தனது உயிருக்கே ஆபத்து சிங்களத் தீவிரவாதிகளால் ஏற்படப்போகிறது எனவும் காட்ட அவர் முயல்கிறார்.

சமாதான காலத்திலும்சரி, யுத்தகாலத்திலும்சரி மிக ஆபத்தான சூழலில் மக்களுக்குச் சேவையாற்றும் நாட்டின் தலைவிதானே எனக் காட்டிக்கொள்வதில் அவருக்குத் தனிமகிழ்ச்சி. இதன்மூலம் தனக்கு அனுதாபத்தைத் தேடிக்கொள்வது அவரது நோக்கமாகும்.

ஜே.வி.பியினதும் ஜாதிகஹெல உறுமயவினதும் இன்றைய வளர்ச்சிக்குக் காரணமான அவர் இன்று அவர்களைச் சாடி உரையாற்றுவதும் கூட சந்தேகத்துக்குரியதே.

பொதுவாக அவர் இப்படியான உரைகளை வெளிநாட்டுத் தலைவர்கள் மத்தியிலேயே ஆற்றுவது வழமை.

உண்மையில் வெளிநாட்டுத் தலைவர்கள் மத்தியில் தன்னை ஒரு நேர்மையான பாரபட்சம் காட்டாத தலைவி எனக் காட்டிக்கொள்வதற்காக இவ்வாறெல்லாம் உரையாற்றுவார். ஆனால் தனது முயற்சிகளுக்கு அல்லது தான் நினைத்தவாறு செய்யமுடியாது இருப்பதற்கு வெவ்வேறு காலகட்டத்தில் வேறு வேறு தரப்புகள் மீது அவர் குற்றம் சுமத்துவார். அது ஒருவேளை ஐக்கிய தேசியக்கட்சியாக இருக்கலாம். விடுதலைப்புலிகளாக இருக்கலாம். இப்பொழுது ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய என்பவற்றின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. சில தினங்களுக்கு முன் ஐ.தே.க. தலைவருக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு அவர் ஒத்துழைக்கவில்லை எனக் குற்றம் சுமத்தினார்.

எனவே அவருக்குத்தேவை பழிபோட ஒரு அமைப்பே தவிர எதனையுமே செய்யவேண்டிய தேவை அவருக்கில்லை.

"தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு என ஏற்றுக்கொண்ட ஒரேயொரு தலைவி தானே" "நோர்வேயின் சமாதான முயற்சிகளைத் தொடக்கி வைத்தது நானே" "50 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு துரோகமிளைக்கப்பட்டுவிட்டது" "1983இற்குப் பின் வந்த அரசாங்கங்களை தமிழ் மக்கள் நம்பவில்லை. அதில் தவறேதும் இல்லை" இப்படியெல்லாம் அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் கடந்த 11 வருடங்களுக்கு மேலாக இந்நிலைமாற்றியமைக்க என்ன செய்திருக்கிறார்? அவரது ஆட்சியின் ஆரம்ப காலத்தில் இடம்பெற்ற சமாதான முயற்சிகளின் போது அவர் நடந்துகொண்ட விதம் அவர் மீது தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கையைச் சிதறடித்தது. சுமார் 7 வருடங்கள் அவர் நடத்திய தீவிர யுத்தம் தமிழ் மக்களை சொல்லொணா துன்பங்களுக்கு உள்ளாக்கியது.

கடந்த மூன்று வருடங்களாக இடம்பெற்று வரும் சமாதான முயற்சிகளுக்கு அவர் விளைவித்த இடையூறுகள் அவர்மீது தமிழ் மக்களுக்கு தீராத வெறுப்பை உருவாக்கியுள்ளது.

எனவே அவரது இவ்வாறான உரைகள் எல்லாம் தமிழ்மக்களை ஏமாற்றப் பயன்படப் போவதில்லை. உலக நாடுகளை இதன்மூலம் ஏமாற்றமுடியும் என அவர் நினைக்கலாம். ஆனால் நிலைமை அதுபோலத் தெரியவில்லை. அவ்வாறு ஏமாறுவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# நீங்காத அவலம்

சிறிலங்கா அரசு போர்க்காலங்களில் தமிழர் தாயகப் பகுதிகளுக்கான பொருளாதாரத் தடை, மருந்துத்தடை மற்றும் தபால் போக்குவரத்துத்தடை என்பவற்றை விதித்து போரினால் பாதிக்கப்பட்ட மக்களை பொருளாதார ரீதியாக நசுக்கி வந்தது.

இவற்றை கண்டித்து அன்றைய காலகட்டங்களில் தாயகத்திலும் புலம் பெயர்வாழ் நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. ஆனால் அரசு தொடர்ந்தும் புறக்கணிப்புக்களையே செய்து வந்தது. ஆனால் இன்று சமாதானகாலத்திலும் அதே செயற்பாட்டைத்தான் செய்து வருகின்றது. வவுனியா மாவட்டத்தில் அபிவிருத்தி மற்றும் மருத்துவம் புறக்கணிக்கப்படுகின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 20 கிராம சேவகர் பிரிவுகளிலும் 6661 குடும்பங்களைச் சேர்ந்த 30706 அங்கத்தவர்களை கொண்ட பூர்வீக குடிகளான தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவற்றை விட இப்பிரதேசத்தை அண்டிய மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 1500 குடும்பங்களும் தமக்கான அடிப்படை மருத்துவ வசதிகளை செட்டிகுளம் மாவட்ட மருத்துவமனையில் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆனால் இச் செட்டிகுளம் மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாக தரமுயர்த்தப்பட்டுள்ளதே தவிர எந்தத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படவில்லை. ஓரளவு செய்து கொள்ளப்பட்ட வசதிகளும் பயனற்றவசதிகளாகவே காணப்படுகின்றன.



அதாவது செட்டிகுளம் மாவட்ட மருத்துவ மனையின் கீழ் பூவரசன்குளம் கிராமிய மருத்துவ மனை, பாவற்குளம் கிராமிய மருத்துவ மனை. சிதம்பரபுரம் கிராமிய மருத்துவ மனை, நேரியகுளம் கிராமிய மருத்துவ மனை, உறுக்குளம் கிராமிய மருத்துவ மனை, ஓமந்தை மத்திய மருந்தகம் என்பன இயங்குகின்றன. இவற்றில் உறுக்குளம் மருத்துவ மனை, தவிர ஏனைய மருத்துவ மனைகளில் மருத்துவர் பற்றாக்குறை, தாதியர் பற்றாக்குறை, சிற்றூழியர் பற்றாக்குறை, நோயாளர் காவு வண்டியின்மை, கட்டட வசதியின்மை போன்ற பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

காரணம் தமிழர் தாயகப்பகுதி மருத்துவமனைகள், இதில் அடங்குகின்றன. சிங்களக் குடியேற்றத்தில் உள்ள உறுக்குளம் மருத்துவமனையில் மேலதிக மருத்துவர், போதியளவு தாதியர்கள், நோயாளர்விடுதிகள், நவீனவசதிகள் இன்றி இயங்கி வருகிறது.

கிட்டத்தட்ட நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்யும் செட்டிகுளம் மாவட்டமருத்துவமனைக்கு ஆறு வைத்திய நிபுணர்கள் (மருத்துவர்கள்) தேவையான நிலையில் இரண்டு மருத்துவர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். கடந்தவாரம் இம் மாவட்ட மருத்துவமனையில் தமிழ்மருத்துவர் நீண்ட விடுப்பில் சென்றமையால் அங்கு ஒரு மருத்துவர் மட்டுமே கடமையில் இருந்தார். அங்கு சிகிச்சை பெறச் சென்ற நோயாளர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் பெரிது. அதாவது சிங்களத்தில் இருந்து தமிழிலும் தமிழில் இருந்து சிங்களத்திற்கும் மொழி பெயர்ப்பு செய்யும் ஒருவருடனேயே, சிகிச்சைபெறச் செல்ல வேண்டியநிலை காணப்பட்டது. இதனால் சாதாரண நோயாளர் முதல் அவசர நோயாளர் வரை எதிர்கொண்ட சிரமங்கள் சொல்ல முடியாதவை. இதேவேளை கட்டடங்களால் நிறைந்து காணப்படும் செட்டிகுளம் மாவட்ட மருத்துவமனை மருத்துவர் இன்மை, தாதியர் இன்மை, தளபாடம் இன்மை, சிற்றூழியர் இன்மை என தேவைகள் எவையும் பூர்த்தி செய்யப்படாத ஒரு மருத்துவ மனையாகவே உள்ளது.

இம் மருத்துவமனையின் அவல நிலை தொடர்பாக வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தேவைகள் தொடர்பாக நாம் மத்திய அரசிடம் கோரிக்கைகளை விடுக்கும்போது அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டியவர்கள் அவர்களே. அதனால் அவர்கள் வேண்டா வெறுப்பாக புறக்கணிப்புக்களை காட்டி நியமனங்களை வழங்குகின்றனர்.

வவுனியா மாவட்டத்திற்கு 42 மருத்துவ மாதுக்கள் தேவையான நிலையில் 20 மருத்துவமாதுக்கள் மட்டும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெருமளவானோர் கிழக்குப்பகுதியைச் சேர்ந்தவர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இதே போன்று ஏனைய ஆளணி, வளப்பற்றாக்குறைகளும் காணப்படுகின்றன. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மருத்துவ வசதிகளை சர்வதேச நிதிநிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. அதனால் ஓரளவு தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தை அண்டிய சிங்கள பிரதேசங்களில் அளவுக்கு அதிகமான ஆளணி ஏனையவளங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதே போன்றுதான் ஏனைய தமிழர் தாயகப்பகுதிகளும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என அறியக் கூடியதாகவுள்ளது.

இந்த நிலையில் தமிழர் தாயகப் பகுதிகளில் அரசினால் புறக்கணிக்கப்படும் மருந்து வசதிகளால் பெரிதும் அசௌகரியங்களை எதிர்கொள்ளகின்றனர்.

**சு.பாஸ்கரன்**

**நவம் அறிவுக்கூடப்போராளியும் தமிழீழ நுண்கலைக்கல்லூரி மாணவனுமான கி.இதயராஜ் அவர்களுடனான நேர்காணலின் போது..**

# சுடுகலன் சுமந்த கரங்கள்...



நானும் இயக்கத்துக்கு வரப் போறன். என்னையும் கூட்டிக்கொண்டு போங்கோ சித்தப்பா என்கிறான் அந்த இளைஞன்.

"வேண்டாம் எங்கட வீட்டில இரண்டுபேர் இயக்கத்தில இருக்கிறம். அதால நீ வீட்டை பார்த்துக் கொண்டிரு என அவனது சித்தப்பா கூற,

"இல்லை இந்த இந்தியன் ஆமியோட இங்க இருக்க ஏலாது"

சரி அப்படியென்றால் நீ ஒன்றை செய் இந்தியன் ஆமியின்ர முகாமுக்குள் போய் அவன்ர ரைபிள் அல்லது குண்டு ஒன்றை கொண்டுவா. அதற்குப் பிறகு நான் உன்னை இயக் கத்திற்குக் கூட்டிக்கொண்டு போறன் என அவனது சித் தப்பா கூற அவனும் சம்ம திக்கிறான்.

அதன் பின் சில நாட்களில் இராணுவத்தின் முகாமுக்குச் சென்று அவர்களுக்கு விறகு வெட்டிக்கொடுப்பது, பாத்திரங்கள் கழுவுவது, இராணுவ அதிகாரிகளுக்கு உணவு பரிமாறுவது என பல்வேறு வேலைகளை அவ்இளைஞனும் அவனது நண்பனும் செய்துவந்தார்கள். வேலைகள் முடிய முகாமை விட்டு வெளியே வரும் போது வழமையாக வாயில் கடமையில் உள்ள இராணுவம் சோதனை செய்த பின்பே இவர்களை வெளியில் செல்ல அனுமதிப்பான். இக் காலப் பகுதியில் அவனது சோதனை யின் பல வீனத்தை நன்கு அறிந்துகொண் டான் அவ் இளைஞன்.

இப்படியே சில காலம் கழிந்தது. அவனது நோக்கம் அங்கு வேலைசெய்வது அல்ல. தனது சித்தப்பா கூறியதுபோல ஏதேனும் ஒன்றை எடுத்து வந்து சித்தப்பாவிடம் கொடுத்து விட்டு தானும் இயக்கத்தில் சேர்ந் துவிடவேண்டும் என்ற எண்ணமே அவனிடம் மேலோங்கி இருந்தது.

இந்நிலையில் தான் குறிப்பிட்ட அந்நாள் வந்தது. வழமைபோல நண்பர்கள் இருவரும் இராணுவ முகாமுக்குள் வேலைக்காக செல்கின்றனர். அன்று அம் முகாமில் உள்ள இராணுவத்தினர் விடுதலைப் புலிகளைத் தேடி சுற்றி வளைப்பு ஒன்றுக்காகச் சென்று விடுகின்றனர். இதன்பின் அம்முகாமில் ஒரு அதிகாரி உட்பட சில இராணுவத்தினர் மட்டுமே இருந்தனர்.

தனது அலுவலகத்திற்கு வந்த குறிப்பிட்ட அவ்வதிகாரி தனது ஆயுதங்கள் அனைத்தினையும் மேசையில் வைத்துவிட்டு தனக்கு உணவு கொண்டுவருமாறு அவ் இளைஞனுக்குப் பணிக்கிறான்.

இவனும் வழமை போல உணவு பரிமாறுகிறான். இப்போது இவனது உள்மனம் இது நல்ல சந்தர்ப்பம், இது நல்ல சந்தர்ப்பம் என்றே கூறிக் கொண்டிருந்தது. சந்தர்ப்பத்திற்காக காத்திருந்த இவனுக்கு பழம் நழுவி பாலில் விழுந்தது போல அந்த அதிகாரி ஆயுதங்களை அப்படியே வைத்துவிட்டு தூங்கிவிடுகின்றார்.

இங்கே இந்த இளைஞன் மேசைமீது உள்ள குண்டு ஒன்றினை எடுத்துக் கொண்டு வழமைபோல் வேலைகளை முடித்துவிட்டு முகாமைவிட்டு புறப்படுகின்றார். முகாமின் வாயிலை அடைந்தபோது அவனது இதயம் பல மடங்காகத் துடிக்க ஆரம் பிக்கின்றது. அவனது நண்பன் கடமையில் உள்ள இராணுவத்தால் சோதிக்கப்பட்டு அனுமதித்தபின் இவன் செல்கிறான். இராணுவமும் வழமையான பாணியில் கைகளை உயர்த்தச் சொல்லி விட்டு கையிலிருந்து இடுப்புவரை தடவிவிட்டு அனுமதித்து விடுகின்றான்.

வெற்றிகரமாக வெளியே வந்த அவ்இளைஞனுக்கு சில காரணங்களால் அன்று அவனது நோக்கம் நிறைவேற வில்லை. காலம் உருண் டோடிக் கொண்டிருந்தது. இந்திய இராணு வத்தின் கொடுமைகள் பலவற்றை தாங்கவேண்டிய நிலைமை இவனது குடும்பத்திற்கு ஏற்பட்டது. இதற்குக் காரணம் இவனது குடும்பம் தமிழீழ விடுதலைப்புலிகளோடு கொண்டிருந்த தொடர்புகள், இவ் இளைஞனின் இரண்டு சிறிய தந்தை அப்போது தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப் பினர்கள்.

இதனை தாங்கிக்கொள்ள முடியாத அவ்விளைஞன் 1994ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் தன்னை ஓர் போராளியாக இணைத்துக்கொள்கிறான்.

குறிப்பிட்ட அவ் இளைஞன் வேறுயாருமல்ல நவம் அறிவுக்கூடப் போராளி இதயராஜ்தான். மட்டக்களப்பு கண்ணங்குடா கொத்தியாவலையைச் சொந்த இடமாகக்கொண்ட இதயராஜ் இராணுவத்தினருக்கு எதிராக இருபத்திரெண்டுக்கு மேற்பட்ட சண்டைகளில் பங்கேற்றுள்ளார்.

இவ்வாறு பங்கேற்ற ஒரு சண்டைதான் சந்திவெளியிலிருந்து மொறக்கொட்டாஞ்சேனை நோக்கி ரோந்துவந்த இராணுவத்தின் மீது மேற்கொண்ட தாக்குதல். இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக நடந்தது. இந்த சண்டையில் இராணுவத்தின் எறிகணை ஒன்று இதயராஜிற்கு அருகில் வீழ்ந்து வெடித்ததில்தான் அவர் கண்பார்வையை இழந்தார்.

அதற்குப்பின் மந்திகை வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைபெற்று பின் 1998 மே மாதம் தான் நவம் அறிவுக் கூடத்திற்கு வந்துள்ளார்.

நவம் அறிவுக் கூடத் திற் கு வந் தபின் தான் இதயராஜ் நம்பிக்கை ஒன்றை ஆயுதமாக வைத்துக் கொண்டு மிருதங்கத்தை முறையாகக்கற்று இன்று மிருதங்க அரங்கேற்றத்தையும் நடத்தியிருக்கிறார். இந்த முற்றாக கண் பார்வையற்ற போராளி இதயராஜ்.

சாதிப்பதற்கு ஊனம் உள்ளத்தில் இல்லாமல் இருந்தால் போதும் என்பதற்கு இதயராஜ் ஒரு உதாரணம். ஆரம்பத்தில் ஜெகன், வேல்மாறன் ஆசிரியர்களிடம் மிருதங்கம் பயின்ற இவர் இப்போது கண்ணதாசன் ஆசிரியரிடம் பயின்று வருகின்றார். மிருதங்கத்தில் தரம் 5வரையாகப் பயின்ற இவர் இனி தரம் 6 வரை கற்கப்போகிறார். தரம் 6 மிருதங்க ஆசிரியர் ஒருவருக்குரிய பாடவிதானம் என்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட இவரது ஆசைகள் மிருதங்கத்தில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளவேண்டும் என்பது.

இரண்டு கைகளிலும் எறிகணையின் இரும்புத்துண்டுகள் (ஷெல்பீஸ்) காணப்படுகிறது. இருந்தும் மிருதங்கம் முறையாக வாசிக்கின்றார் என்பது இவரது சிறப்புக்கு ஒரு எடுத்துக் காட்டு, முழுமையாகக் கண்பார்வையற்ற இவர் மிருதங்கத்தை தேர்ந்தெடுத்து பயில்வதற்கு சிறப்பு காரணங்கள் ஏதேனும் இல்லை. அனைவரையும் வியக்கத்தக்க முறையில் பார்வையற்ற ஒருவர் சிறப்பான ஒரு மிருதங்க அரங்கேற்றத்தை செய்திருப்பது சாதனையே. எங்களுடைய சமூகத்தில் சிலர் எவ்வித குறைபாடும் இன்றி இருந்தும் எவ்வித முயற்சியும் இன்றி வாழ்க்கின்றனர். அந்த வகையில் இதயராஜ் மேன்மையானவர் பாராட்டத்தக்கவர்.

இவரது இவ் வெற்றிக்கு பின்னால் இவரது குரு அதிலும் மிக முக்கியமாக கண்ணதாசன் என்பவர் குறிப் பிடத்தக்கது. இத்தனைக்கும் இவர் ஒரு பிள்ளையின் தந்தை. பல்வேறு பட்ட பாதகமான புறநிலைச் சூழ் நிலைகளுக்கு மத்தியில் மிருதங்கத்தை பயின்று இப்படியொரு அரங்கேற்றத்தை செய்திருப்பதன் பின்னணியில் தனது மனைவி, மற்றும் பொறுப்பாளர் அனைவரும் காரணம் என்கிறார். குறிப்பாக தனது குரு கண்ணதாசன் தனது வெற்றிக்குக் காரணம் என கூறும் இதயராஜ் தனது எதிர்கால இலட்சியம் தன்னைப்போன்ற பலரை தான் உரு வாக்கவேண்டும் என்பது என்கிறார்.

செவியினால் உலகத் தைப் பார்த்தும் கேட்டும் ரசிக்கும் இவர்கள் இப்படியாக ஒரு கலையை தெரிவு செய்து அதில் சிறப்பான வளர்ச்சி அடைவது என்பது ஒரு கடினமான விட யமே. தரம் நான்குடன் தனது கல்வியை நிறுத்திக் கொண்ட இதயராஜ் நவம் அறிவுக்கூடத்திற்கு வந்த பின்னரே கல்வியையும் தொடர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நவம் அறிவுக் கூடத்திற்கு சென்ற எமக்கு அங்குள்ள போராளிகளின் நடவடிக்கைகளை பார்த்த போது ஒன்று தெளிவாகியது. சாதிப்பதற்கு ஊனம் ஒரு குறையல்ல. ஆரோக்கியமான மனம் இருந்தால் போதும் என்பது இப்போது எமக்கு கவிஞர் வைரமுத்துவின் அந்த வைர வரிகள் "ஊனம் ஊனம் ஊனமிங்கு ஊனம் யாருங்கோ. உடம்பில் உள்ள குறைகளெல்லாம் ஊனமில்லைங்கோ உள்ளம் நல்லா இருந்தா ஊனம் ஒரு குறையில்லை" என்ற அந்த வரிகள் நினைவுக்கு வர நவம் அறிவுக்கூடத்தில் இருந்து வெளியே றினோம்.

**சுழியன்**

## உலக சாதனை தமிழன்
## செல்வன் துஸ்யந்தன் சத்தியமூர்த்தி

சுரத்தட்டு இசைக்கருவியை (Keyboard) தொடர்ச்சியாக இரண்டு இரவும் இரண்டுபகலும் விடாது இயக்கி உலகசாதனைபுரியும் பெருமுயற்சியில் ஜேர்மனி இராட்டிங்கன் நகரைச் சேர்ந்த செல்வன் துஸ்யந்தன் - சத்தியமூர்த்தி ஈடுபட்டார். முன்னைய உலக சாதனையான 53 மணித்தியாலங்களை முறியடித்து புதிய சாதனைபுரிய முன்வந்துள்ள செல்வனை ஜேர்மனியின் தொலைக்காட்சிகள் பத்திரிகைகளும் தமிழர் தொலைக்காட்சிகளான தீபம் T.T.N. தொலைக்காட்சிகளும் லண்டன் தமிழ் வானொலி IBC, TBC வானொலிகளும் இந்த முயற்சிக்கு ஆதரவு கொடுத்தன.



# தராக்கி செத்துக்கிடப்பதை யார் காண விரும்பியிருக்கலாம்



**சிவராம் ஒரு பயங்கரவாதி ஊடகவியலாளர். புலிகளுக்கு விரோதமான இன்னொரு பயங்கரவாத குழுதான் சிவராமை கொலை செய்திருக்கிறது என்று சிஹல உறுமய அறிக்கை விட்டிருக்கிறது. எனவே சிங்கள தீவிரவாதிகளுக்கு சிவராம் செத்துக்கிடப்பதை காண விரும்புவதற்கு பல காரணங்கள் உண்டு.**

ஆயிற்று. ஒரு வழியாக அந்த மாபெரும் மனிதனின் மரணத்துக்கு முன்பின் கேட்டறியாத "தேரபுத்த பாய பலகாய" என்ற அமைப்பு உரிமை கோரிவிட்டது சரி. இனி சிவராமின் கொலையாளிகளை தேட வேண்டிய அவசியமிருக்காது. சிவராமின் பேனா வலுவுக்கு முகம் கொடுக்கமுடியாத "விகாரமாதேவி" களும் "துட்டு கெமுனு"க்களும் பினாமிகளின் பெயரால் உரிமை கோரப்பட்டது குறித்து நிம்மதி யடையக் கூடும். எனினும் சிலி நாட்டுக் கவிஞர் பப்லோ நெரூடா தன் "மண் காட்டிக் கொடுத்தது" கவிதையில் கூறியிருப்பது போல் இந்த மாமனிதனின்.

"............
தூய குருதியை
முட்பற்றைகள் மறைக்கவில்லை.
.......
எவரும் இக்குற்றத்தை
மறைக்கவில்லை.
நகரத்து மையத்தில்
அந்தக் குற்றம் நிகழ்ந்தது"

ஆமாம். இரவில் நாடாளு மன்ற உறுப்பினர்கள் கூட போக முடியாத உயர் பாதுகாப்பு வலயத் தினுள் சிவராமின் சடலம் காணப் பட்டதனால் அரசே இக்கொலைக்கு பொறுப்பு என முன்னாள் சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தெரிவித் திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு (அதாவது ஜே.வி.பியின் வெறியாட்டக்காலப் பகுதிக்கு) முன்னதாக இவ்வாறான கடிதங்கள் அனுப்பப்பட்டதாக IGP சந்திரா பெரேரா கூறி பழியை ஜே.வி.பியின் மீதே போட்டு விட்டி ருக்கிறார்.

உயர் பாதுகாப்பு வலயத் துக்கு பொறுப்பான படைத்தரப் பினரோ கொலையாளிகள் விசார ணையை திசைதிருப்பவே சிவராமின் சடலம், குறித்த இடத்தில் போடப் பட்டதாகக் கூறி தங்கள் [illegible]லையைக் காப்பாற்றப் பார்க்கிறார்கள்.

நல்லவேளை புலிகள் தப்பித்தார்கள். அண்மைக்காலத்தில் குறிப்பாக முரளிதரனின் துரோகத் துக்கு பின் சிவராம் எடுத்திருந்த தீவிர தமிழ்த் தேசிய நிலைப்பாடு மட்டும் இல்லாதிருந்தால், "கொலை நடந்தி ருக்கும் விதத்தை பார்க்கும் பொழுது புலிகளைத் தவிர வேறு எவரும் இக் கொலையை செய்திருக்க முடியாது என்று தோன்றுகிறது" என இராணு வப் பேச்சாளர் அழகாக அறிக்கை விட்டிருப்பார்.

அண்மையில் டெய்லி மிறறில் (10.05.2005) "சிவராமின் கொலையின் முக்கியத்துவம்" என்ற தலைப்பிலான தனது கட்டுரையில் ஒரு ஓய்வு பெற்ற இராணுவ புல னாய்வு நிபுணரும் IPKF உடன் இராணுவ புலனாய்வுக்கு பொறுப்பாக இங்கு செயற்பட்டவருமான கேணல் R.ஹரிஹரன் பின்வருமாறு கூறு கிறார்;

தமிழ் இலட்சியத்தை பல வீனப்படுத்தியமைக்காக கருணாவை சிவராம் கண்டனம் செய்திருந்தார்.

சிங்கள பேரினவாதிகளை தீவிரமாக எதிர்த்தார். குறிப்பாக சமாதான முயற்சிகளுக்கெதிராக ஜே.வி.பியினர் கைக்கொண்ட தடை செய்யும் தந்திரோபாயங்களை தாக்கியிருந்தார்.

இவையெல்லாம் சேர்ந்து தீவிரவாத குழுக்கள், அரசு இயந் திரம், பொலிஸ், அரசியல் கட்சிகள் பல்வேறுவகை பேரினவாத சக்திகள் முதலியவற்றுக்கு இடையே தராக் கிக்கு பல எதிரிகளை தேடிக்கொடுத் திருந்தன.

தமிழ் நெற்றின் ஆசிரியர், தமிழ்த் தீவிரவாதத்துக்கான அவரது ஆதரவு காரணமாக, பாரதூரமான பின் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி யிருக்கும் என்று ஜே.வி.பியின் வீரவன்ஸ எச்சரித்திருந்தார்.

சிவராம் ஒரு பயங்கரவாதி ஊடகவியலாளர். புலிகளுக்கு விரோதமான இன்னொரு பயங்கர வாத குழுதான் சிவராமை கொலை செய்திருக்கிறது என்று சிஹல உறுமய அறிக்கை விட்டிருக்கிறது. எனவே சிங்கள தீவிரவாதிகளுக்கு சிவராம் செத்துக்கிடப்பதை காண விரும்புவதற்கு பல காரணங்கள் உண்டு.

சிவராம் எப்போதுமே பாது காப்புப் படைகளின் இலக்காக இருந் திருக்கிறார். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயரத்தினத்தின் மறைவுக்குப் பழிவாங்கும் முகமாக சிவராம் கொலையின் பின்னணியில் அவர்கள் இருந்திருக்கலாம்.

என்று ஹரிஹரன் கூறியி ருக்கிறார். பட்டறிவு கொண்ட இரா ணுவப் புலனாய்வாளர் என்றவகை யில் அவரது கூற்றுகளை நாம் ஏற் றுக்கொள்ளலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு இன்னுமொன்றும் தெரி யும். எமது கவிஞர் முல்லைக்கமல் கூறியது போல்;

"இவரும் அவரும் அவரும் அவர்தானாம்" என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

சந்தேக வலையை தாராள மாகவே விரித்துவிட்ட ஹரிஹரன் அடுத்துக் கூறியதுதான் வியப்பின் உச்சத்துக்கு எம்மைக்கொண்டு போவதாகும். அவரின் வார்த்தை களிலேயே கூறுவதானால்,

"கருணாவிற்கு இதில் பங்கிருக்குமா? அப்படியிருக்க வாய்ப்பில்லை. செல்வாக்கு மிக்க தமிழ் ஊடகவியலாளர் ஒருவரை இந்தக் கட்டத்தில் கொல்வதன் மூலம் அரசியல் ரீதியாகவோ படைய ரீதியாகவோ கருணாவுக்கு எந்த நன்மையும் கிட்டப் போவதில்லை" என்று திருவாய் மொழிந்திருக்கிறார்.

நல்லது. தராக்கி யார்? செல்வாக்கு மிக்க தமிழ் ஊடகவிய லாளர் என்பதற்கு அப்பால் கருணா வின் மனப்போக்கை நன்கு அறிந்த வர். கருணாவின் துரோகத்தை சாடி யவர் தமிழ்த் தேசியம் தொடர்பான கருணாவின் எதிர் நிலைப்பாட்டை சாடிக்கொண்டிருந்தவர்.கொழும்பில் மனைவியின் பெயரில் முதலிட்டு கருணா கம்பனி நிறுவியதை வெளிப்படுத்தியவர். கருணா- இரா ணுவத் தொடர்பு பற்றி வெளிப்படுத்த விருந்த வேறு பல இரகசியங்களும் சிவராமோடு புதையுண்டிருக்கலாம். அப்படியானால் சிவராம் செத்துக் கிடைப்பதை காண விரும்ப கருணா வுக்கும் போதியளவு காரணங்கள் உண்டு.

கருணா யார்?

தமிழ் மக்களால் வீசியெ றியப்பட்ட சங்கரிக்கு தலைப்பாகை கட்டி TULF-ENDLF- கருணா என முண்டு கொடுத்து நிமிர்த்தப்பட்ட அரசியல் கட்சி(?)யின் இராணுவப் பிரிவு தலைவர் (?) இவரைக் காப் பாற்ற ஏன் முனைகிறார் ஹரிஹரன் என்பது ஒரு மில்லியன் டொலர் கேள்வியாகும். இதன் மூலம் யாரைக் காப்பாற்ற ஹரிஹரன் முனைகிறார்? நிர்வாகத்துறையில் பிரபலமான வாக்கியம் உண்டு.

"ஏதாவது தவறு நிகழ்ந்து விட்டால் உன் மேசையிலிருந்து அதைத் தேடத் தொடங்கு" என்பது

ஹரிஹரன் பட்டியலில் அகப்படாமல் தப்பிவிட்ட வேறு ஒரு வகையினரும் உள்ளனர்.

படைய ஆய்வுத்துறையில் முடிசூடா மன்னர்களாக இருக்க விரும்பி தராக்கியை ஓரம் கட்ட விரும்பியவர்கள். இன்றுவரை தங் கள் பத்திகளில் ஒரு அனுதாப வார்த்தை எழுதாதவர்கள்.வெறுமனே படையினர் தரும் உப்புச் சப்பற்ற பல சமயங்களில் தவறான மதிப் பீடுகளை வைத்து களஅறிவு எதுவும் இல்லாமல் ஆழமற்ற ஆய்வுகளை எழுதியவர்கள். படைய அறிவியல் மற்றும் கள நிலைகள் பற்றி விரிவான அறிவு டைய சிவராமின் முன்னால் தோற்றுப் போய் "நப்பராய் இழுபடும்" கட்டுரைகளை எழுதியவர்கள். இந் தப் பட்டியலில் பல ரும் இருக்கிறார்கள். சந்தேக நபர்களின் பட்டியல் இதைவிட நீண்டு செல்லக் கூடும். ஆனால் இதில் ஒரு விடயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இந்த சந்தேக நபர்கள் அனைவருமே தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள். சிவராமினுடைய தனித்துவமான பண்புகள் காரணமாக சிவராமுக்கு தனிப்பட்ட எதிரிகள் எவரும் இருக்க வாய்ப்பில்லை.

செனகல் நாட்டுக் கவிஞர் டேவிட் டியொப் எழுதியிருப்பது போல்.

"வாழ்வின் அர்த்தங்களையும்
ஒளியையும்
பத்து மடங்காய்
எம்மீது பொழிந்த
மம்பாவை
அவர்கள் கொன்றுவிட்டது
உண்மைதான்...."

எனினும் பப்லோ நெரூடா எழுதியது போல்

"சிந்தப்பட்ட குருதியை
மீளப்பெற
மக்களின்
மீளெழுகைக் காலத்தில்
அவர்கள் உயிர்த்தெழுவார்கள்"

**வின்சென்ற் புளோறன்ஸ்**

## சந்தேக மணியத்தார்...



எண்டாலும் அம்மா ஒருநாளும் உப்பிடியெல்லாம் வெருட்டக்கூடாது.

ஏனெண்டாப்பாருங்கோ ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி மகளே யெண்டு திரியிற ஜே.வி.பி,ஹெல உறுமய போன்ற கட்சிகளுக்கு இப்ப அடிக்கடி அம்மையார் நெத்தியடி குடுக்கிறா.

இப்ப கடைசியா கண்டியில நடந்த மாநாட்டிற்குப் பிறகு சமாதானம் வேணுமோ.... அல்லது சண்டை வேணுமோ... எண்டெல்லாம் கேட்டுப் போட்டு கடைசியில பதினெட்டு வயதுக்கு மேலயுள்ள பிள்ளைகள அனுப்பினா பயிற்சி கொடுக்கத்தயார் எண்டு பகிரங்க அறிவிப்பு விடுத்திருக்கிறா.

இனி தெற்குப் பக்கத்தால புது இராணுவ அணியொண்டு உருவாகப் போகுது பாருங்கோ.

அதுக்குப் பெயர் என்ன தெரியுமோ வி.ஐ.பி.படையமைப்பு எண்டுதான் வைக்கவேணும்

இல்ல சும்மா கேக்கிறன் அழகா, அட்டகாசமா... சினிமாப்படங் களில வெடிக்கிற சிவகாசி பட்டாசு போல வெடிக்கிற இந்த தலைவி மற்றும் தலைவர்மாரெல்லாம் ஒருக்கால் சொல்லுறதையெல்லாம் செய்தா நாடு எப்பிடியிருக்கும்.

தொலைஞ்சுது நாடு புத்தம் சரணம் கச்சாமி எண்டிறதுக்கு பதிலா உவங்கள் எல்லாம்... ஐயோ... அம்மா... எண்டுதான் கத்துவாங்கள்.

சரி... சரி வடிவா உலகத்தை கண்டியில கூட்டி சந்திரிகா தன்ர பம்மாத்து விளையாட்ட காட்டிப் போட்டா... பாவம்... உலக மக்கள்.

# பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மக்கள் என்ன சொல்கிறார்கள்?

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு நான்கு மாதங்களை கடந்த நிலையில் கூட இன்றும் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. இனியும் ஏற்படுத்தப்படுமா என்பதும் சந்தேகமே?

சனாதிபதி சந்திரிகா இதன்பால் வார்த்தைகளை மட்டும் அட்டகாசமாகவும், கவர்ச்சியாகவும் வாரிவழங்குகின்றாரே தவிர ஒன்றும் செயல் வடிவம் பெற்றதாக இல்லை. இதனால் தமிழ் மக்கள் முற்று முழுதாக சிறிலங்கா அரசின் பால் நம்பிக்கை இழந்தே காணப்படுகின்றனர்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மக்கள் எவ்வாறான கருத்துக்களை வைத்திருக்கின்றார்கள் என்பதனை அறியும் பொருட்டு பல்வேறு பிரதேசங்களை சேர்ந்த மக்களை சந்திப்பதற்கு திருமுறிகண்டிக்குச் சென்றோம். ஏ-9 வீதியின் ஊடாக வடக்கில் இருந்து தெற்கிற்கு செல்கின்ற மக்களும் சரி தெற்கின் பல பிரதேசங்களில் இருந்து வடக்கிற்கு வருகின்ற மக்களும்சரி முறிகண்டியில் சில நிமிடங்கள் தரித்தே செல்வர். நாம் அவர்களைச்சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டபோது....

சுவிஸ்லாந்தில் பதினைந்து வருடங்களாக வசித்து வரும் இராசகுமார் என்பவர் கூறும்போது, "பொதுக்கட்டமைப்பு என்பது அவசியம்தான். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் வழங்குகின்ற உதவிகள் ஒழுங்காக சென்றடைய வேண்டும். ஆனால் சந்திரிகா அரசாங்கம் பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்தி மக்களுக்கு உதவி செய்யப்போவதாக எனக்கு தெரியவில்லை. சந்திரிகா இன்



றைக்கு ஒன்றை கூறுவா பிறகு நாளைக்கு நித்திரையால எழும்பி இன்னொன்றை சொல்லுவா! எனவே அரசாங்கத்தை நம்புறதில எந்தவித பிரயோசனமும் இல்லை. அம்மா இதைப்பற்றி கதைச்சுக் கதைச்சு எங்கட தேசியத்தலைவரின்ர காலத்தை வீணாக்கிறது மட்டும் தான் மிச்சம். அரசாங்கம் தமிழர்களுக்கு பொதுக்கட்டமைப்பும் சரி சமஷ்டியும் சரி எந்தத் தீர்வையும் தரப்போறதில்லை. என்னைப் பொறுத்தவரை ஆயுத ரீதியாக போராட்டத்தினை மீண்டும் முன்னெடுத்துச்சென்று தமிழர்கள் தங்கட உரிமைகளை பெற்றுக் கொள்வதே ஒரே வழி.

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரி மாணவன் பிரசாத் கூறும்போது, அரசாங்கம் பொதுக்கட்டமைப்பையும் ஏற்படுத்தாது. தமிழீழத்தையும் தராது. அதனால அரசாங்கத்தை நம்புவதில எவ்வித பிரயோசனமும் இல்லை.



செல்வாநகர் கிராமத்தில் வியாபார நிலையம் நடத்திவரும் சிவகுமார் கூறும்போது,

"இதெல்லாம் அரசாங்கத்தின் பேய்க்காட்டு வேலை. சும்மா வெளிநாடுகளை ஏமாற்றுவதற்கான கண்துடைப்பு நடவடிக்கை. இதைப் பற்றி கதைச்சுக் கதைச்சு காலம்தான் வீண் போகிறது. இனியும் அரசாங்கத்தை நம்பக்கூடாது. அரசு எங்களுக்கு எதையும் தராது என்பது எப்பவோ தெரியும்"



அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் மல்லாவியைச் சேர்ந்த தனம் என்பவர் கூறும்போது, பொதுக்கட்டமைப்பு அரசாங்கம் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களாகிய எங்களுக்கு அற்றுப்போச்சு. ஏனென்றால் சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு மூன்று வருடங்கள் கடந்தும் அதில் சொல்லப்பட்ட விடயங்களுக்கு மாறாகவே அரசாங்கம் நடந்துவருகின்றது. அத்தோடு சுனாமி ஏற்பட்டு நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. இன்னமும் ஏற்படுத்தவில்லை. இனியும் ஏற்படுத்துமா என்பது சந்தேகமே. அப்படி அரசாங்கம் பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்த முன்வந்தாலும் அரசாங்கத்தோடு இருக்கின்ற இனவாத கட்சியான ஜே.வி.பி முட்டுக்கட்டையாக இருக்கும். சர்வதேசம் ஏற்றுக்கொண்ட ஒரு சிறிய விடயம் பொதுக்கட்டமைப்பு. இதனை ஏற்படுத்தாத அரசாங்கம் எப்படி எங்களுடைய இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போகின்றது. இதைவிட அரசாங்கம் தான் பெறுகின்ற நிதியுதவிகளை வைத்து தங்கட மக்களையும் அங்குள்ள பிரதேசங்களையுமே அபிவிருத்தி செய்ய குறியாக நிற்கிறது. தமிழ் மக்கள் கவனத்தில் கூட எடுப்பது கிடையாது. ஆனால் பெருமளவு பாதிக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மக்கள்தான். என்னைப் பொறுத்தவரை அரசாங்கம் தமிழ் மக்களுடைய எந்தப்பிரச்சினையையும் தீர்க்கப்போவதில்லை. என்பது மட்டும் நிச்சயம்.

**நேர்காணல்: மு.தமிழ்ச்செல்வன்**

ஆட்டோச் சாரதியான பத்திநாதன் இவ்வாறு கூறுகின்றார்.

அரசாங்கம் நிவாரணம் மற்றும் உதவிகளை அங்கு கொடுத்திருக்கிறம். இங்கு கொடுத்திருக்கிறம் என்றெல்லாம் சொல்கின்றது. ஆனால் இதுவரையில் பெரிசா அப்படி எதுவும் கிடைத்ததாக இல்லை. தாளையடி முல்லைத்தீவுகளுக்குச் சென்றுபார்த்தால் இன்னும் இடிந்த கட்டடங்களும் மக்களுடைய அகதி முகாம் வாழ்க்கையையும்தான் பார்க்க முடிகிறது. பத்திரிகைகளில் எல்லாம் பார்க்கும்போது காலி, அம்பாந்தோட்டைப் பிரதேசங்களில் எல்லாம் கட்டடங்கள் கட்டப்படுவதனை காணக்கூடியதாக உள்ளது. ஆனால் பெருமளவு பாதிக்கப்பட்ட தமிழர்கள் பகுதியில் ஒன்றையும் காணவில்லை. இதனால் நான் ஒன்றை மட்டும் சொல்லுவன் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதையும் தரப்போவதில்லை. நாங்கள் நாங்கள் எங்கட வாழ்வுக்கு எங்கட வழியை தேட வேண்டும் என தனது கருத்தினைக்



கூறிமுடித்தார் அந்த ஆட்டோச் சாரதி.

கிளிநொச்சியைச் சேர்ந்த றஞ்சித் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக கூறும்போது, சமாதானம் சமாதானம் என்று சொல்லி அதனையும் ஒழுங்கா கொண்டு நடத்தினதாக இல்லை. அதே போலத்தான் பொதுக்கட்டமைப்பும் இந்தா ஏற்படுத்துறம் அந்தா ஏற்படுத்துறம் என்று சொல்லுகினமே தவிர ஒன்றையும் ஏற்படுத்தினதாக இல்லை. அரசாங்கத்தின்ர இந்த வார்த்தைகளை நம்பிக்கொண்டிருந்தால் காலம் தான் வீண்போகுமே தவிர எந்தவித பயனும் கிடைக்கப்போறதில்லை.

கிளிநொச்சி நகரில் தையல் கடை நடத்திவரும் றகீம் என்பவர் கூறும்போது,

அரசாங்கத்தின்ர கதையை பார்த்தால் அடுத்த சுனாமி ஏற்பட்டாலும் கூட பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தாது. எனக்கு அரசியலில் எல்லாம் இன்ரஸ்ட் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரியும் அரசாங்கம் எங்களுக்கு எதையும் தராது. சண்டை பிடிச்சுத் தான் எங்களுக்குரியதை பெற்றுக் கொள்ள வேண்டும்.



கிளிநொச்சி நகரில் ஆட்டோச் சாரதியாகப் பணியாற்றும் சுரேஸ் கூறும்போது, அரசாங்கம் எல்லா விடயங்களிலும் இப்படித்தான் இழுத்தடிச்சுக்கொண்டு இருக்கின்றது. தமிழர்களுக்கு சிங்கள அரசாங்கம் எப்போதுமே ஒரு தீர்வைத் தரப்போவதில்லை. நாங்கள் இனியும் அரசாங்கத்தை நம்புவதில் எவ்வித பயனும் இல்லை. பேசாமல் எங்கட அடுத்தகட்ட வழியை பார்க்கவேண்டும். அரசு அதை தரும் இதைத்தரும் என்று பார்த்துக்கொண்டு இருந்தால் காலம்தான் வீண்போகும்.

`மல்லாவி முதலாம் யூனிற்றில் வாழ்ந்துவரும் சதீஸ்குமார் "பத்திரிகைகளில் எல்லாம் பார்க்கும்போது அரசாங்கம் அதை செய்வதாக இதைச் செய்வதாக கூறுகின்றதே தவிர ஒன்றையும் செய்ததாக தெரியவில்லை. ஆனால் தங்கட பிரதேசங்களை மட்டும் அபிவிருத்தி செய்து வருகிறது.



இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்து வந்த பலரை நாம் சந்தித்தோம். அவர்களில் சிலர் தங்களது பெயர் முகவரி எதனையும் கூறாமல் கருத்தினை மட்டும் கூறினார்கள். அவர்களில் ஒருவர்தான் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரி விரிவுரையாளர். பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அவரின் கருத்து, "பொதுக்கட்டமைப்பு என்று சொல்லி எங்களை ஏமாற்றுகின்ற நடவடிக்கை தான். வெளி நாடுகளிலிருந்து நிதியினை பெற்று தங்கட பகுதிகளை அபிவிருத்தி செய்வது தான் அரசாங்கத்தின்ர நோக்கம். பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு இன்னும் இரண்டு வாரம் கேட்கிறா. நான்கு மாதம் கடந்தும் ஏற்படுத்தாத இவர்கள் எப்படி இரண்டு வாரத்திற்குப் பிறகு ஏற்படுத்தப் போகினம். சர்வதேசத்திடமிருந்து நிதிகளை பெற்றுக் கொண்டு பின்னர் புலிகள் ஏற்றுக்கொள்ளாத நிபந்தனைகளுடன் பொதுக்கட்டமைப்பு யோசனையை முன்வைப்பார்கள். அதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சொல்லுவார்கள் விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளாததற்கு நாங்கள் என்ன செய்வது. இதெல்லாம் அரசின் நிதியை பெற்றுக் கொள்வதற்கான தந்திரம் என்றார்.



முறிகண்டி தேநீர்ச் சாலையில் உள்ள மணியம் என்பவர் கூறும்போது, எங்களுக்கு பொதுக்கட்டமைப்பும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் தமிழீழத்தை மட்டும் தந்தால் போதும். பொதுக்கட்டமைப்பு விடயத்திலேயே அரசாங்கம் இப்படி நடந்துகொள்கிறது என்றால் மற்ற மற்ற விடயங்களில் எப்படி அரசாங்கத்தை நம்புவது. அரசாங்கத்தோட இதையெல்லாம் பற்றிக் கதைச்சுக்கொண்டு இருக்காமல் மறுபடியும் எங்கட வேலைகளை பார்க்கவேண்டியதுதான்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மக்களை சந்தித்து அவர்களது கருத்துக்களைக் கேட்டபோது, அனைவருக்கும் சிறிலங்கா அரசின் மீது நம்பிக்கை இழந்தே காணப்பட்டமை தெளிவாக தெரிகிறது சிங்கள தேசம் தமிழர்களுக்கு எதையும் வழங்கப்போவதில்லை என்பதில் தமிழ் மக்கள் தெளிவாக உள்ளனர். சிறிலங்கா அரசிடம் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சாதகமான முடிவினை நாம் சந்தித்த எவருமே எதிர்பார்க்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அரசின் மீது தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கை எப்போதோ மலையேறிவிட்டது. காலம் காலமாக சிங்கள தலை மைகளால் ஏமாற்றப்பட்டு வந்த தமிழ் மக்கள் இனியும் ஏமாறத் தயாராக இல்லை என்பது அவர்களது கருத்துகளிலிருந்து தெளிவாகியது. இதில் முக்கியமான விடயம் என்னவெனில் நாம் சந்தித்த அனைவரும் சிறிலங்கா அரசின் மீது நம்பிக்கையற்றே காணப்பட்டனர். ஒருவரேனும் அரசு பொதுக்கட்டமைப்பினை சிலவேளைகளில் ஏற்படுத்தலாம் என்ற தொனிப்பட கருத்துக் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# மாற்று வழிகளில் மின்சாரம்



இன்றைய உலகம் மின்சாரத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது. நாளுக்கு நாள் மின்சாரத்தின் தேவை அதிகரித்துச் செல்கிறது. இந்நிலையில் நீர்வீழ்ச்சி மூலம் பெறப்படும் மின்சாரம் போதியளவு மழை இன்மையால் குறைந்துகொண்டு செல்கிறது. அதே அனல் மின் நிலையம் மூலம் பெறப்படும் மின்சாரத்திற்கு அதிகளவான நிலக்கரி தேவைப்படுகின்றது. எனவேதான் மாற்று வழியான காற்றலை மூலம் பெறும் மின்சாரத்தை அதிகரிக்கவும் கழிவுகள் மூலம் மின்சாரத்தை பெறும் முயற்சியிலும் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அதாவது மரபுசாரா எரிசக்தித் துறையின் வளர்ச்சி மரபுசார்ந்த எரிபொருட்கள் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தி வருகிறது. உலகம் முழுவதும் மூன்றில் இரண்டு பங்கு மின் சாரம் அனல் மின் நிலையங்களில் இருந்து தான் பெறப்படுகிறது. அனல் மின் நிலையங்களை இயக்க முதன்மையான பொருள் நிலக்கரி ஆகும். உலகின் மொத்த நிலக்கரி உற்பத்தி ஆண்டுக்கு சுமார் 500கோடி தொன் ஆகும்.

200 மெகாவாட் அனல் மின் நிலையத்தை இயக்க 8லட்சம் தொன் நிலக்கரி தேவை. இந்த தொன் அளவு மின்சாரத்தை இயக்க 40 தொன் இயற்கை யுரேனியம் போதுமானது. நிலக்கரி உருவாக அதிக நாட்கள் தேவைப்படுகிறது.

சீனாவில் ஒரு ஆண்டில் 100 கோடி தொன் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது. சுரங்கப் பகுதிகளில் வேலை செய்யும் போது பெருமளவில் உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. எனவே இனி வருங்காலங்களில் அனல் மின்சாரம் மெல்ல மெல்லக் குறைந்து, காற்றலை மூலமாக மின்சாரம் தயாரிப்பது தற்போது தீவிரமாகிவருகிறது. இந்தியாவிலேயே காற்றலை மூலமாக மின்சாரம் தயாரிக்கும் மாநிலங்களில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது. இந்தியாவில் காற்றலைகள் மூலம் மின் உற்பத்தித் திறனில் 53சதவீதம் தமிழகத்தில் தான் உற்பத்திசெய்யப்படுகிறது. தமிழகத்தில் காற்றலைகள் மூலமாக 1664 மெகாவாட் மின்சாரம் உற்பத்திசெய்யப்படுகிறது.

இவைதவிர தாவரக்கழிவுகள், கரும்புச்சக்கை, நகரக்கழிவுகள், தொழிற்சாலைக்கழிவு, சௌவரிசி, மரவள்ளிக் கிழங்கின் கழிவு, கோழி எச்சம் ஆகியவற்றில் இருந்து மின்சாரம் தயாரிக்கப்படு கிறது. மேலும் பிளாஸ்ரிக் கழிவு களில் இருந்து பெற்றோல் தயாரிக்கும் முறையும் பரிசீலனையில் உள்ளது. தாவர சக்தி, நீராவி மின்சாரம், மின்கலம் மூலம் இயங்கும் வாகனங்கள், ஹைட்ரஜன் சக்தி என மரபுசாரா எரிசக்தித் துறை நாள்தோறும் புதிய பரிமாணத்தை எட்டுகிறது.

இன்றைய உலகில் நாளாந்தம் மக்களின் தேவை அதிகரித்துச் செல்லச் செல்ல தேவைகளை பூர்த்திசெய்வதற்கான புதிய வழிமுறைகளையும் காண வேண்டியுள்ளது. எப்படியோ நவீனத்தால் நன்மை ஏற்படுவதனையே அனைவரும் விரும்புவர்.

# வால் நட்சத்திரத்துடன் மோதும் விண்கலம்



இந்த உலகமே ஓர் அதிசயம் தான். வானம், பூமி, கடல் என அதிசயங்கள் கொட்டிக்கிடக்கும் அற்புதம் இந்த உலகம். இந்த அதிசயத்தினை ஆராயும் முயற்சியில் முன்னணி நாடுகளின் விண்வெளித் துறை ஈடுபட்டுள்ளன. அதில் முதலில் இருப்பது அமெரிக்காதான்.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாஸா பல்வேறு ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்திவருகிறது. அதில் ஒன்று தான் Comet வால் நட்சத்திரத்தில் நடத்தப்படவுள்ள ஆராய்ச்சி. Comet வால் நட்சத்திரம் பற்றிய ஆராய்ச்சிக்காக நாஸா கடந்த சனவரியில் விண்வெளி ஓடம் ஒன்றினை விண்ணுக்கு அனுப்பிவைத்தது. இத்திட்டத்திற்காக மொத்தம் 279 மில்லியன் டொலர்களை அமெரிக்கா செல விட்டுள்ளது.

அந்த விண்வெளி ஓடம் எதிர்வரும் யூலைமாதம் 4ஆம் திகதி Comet வால் நட்சத்திரத்தினை சென்றடையவுள்ளது. அப்போது அதிக எடைகொண்ட எரிசக்தி அவ் விண்வெளி ஓடத்தில் இருந்து வெளிப்பட்டு Comet இன் மீது மோதும். இந்தச் சக்தியின்அளவு ஒரு காற்பந்தாட்ட மைதானம் அளவு இருக்கும் எனக் கூறப்படுகிறது.

அம்மோதலினால் வெளிப்படவுள்ள வெப்பசக்தியைக்கொண்டு சூரிய சக்தி தொடர்பான விடயங்களை ஆராய நாஸா திட்டமிட்டுள்ளது. அத்துடன் Comet நட்சத்திரமோ அல்லது பிற நட்சத்திரங்களோ, சிறிய கோள்களோ பூமியின் மீது மோதாமல் தடுப்பதற்கான மாற்று ஏற்பாடுகளையும் ஆராய்வதற்கு நாஸா திட்டமிட்டுள்ளது.

இதேநேரம் நாஸாவின் இந்த முயற்சியை எதிர்த்து ரஷ்யாவைச் சேர்ந்த ஜோதிடர் ஒருவர் ரஷ்ய நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். நாஸாவின் இம்முயற்சி உலக இயற்கை அமைப்பைக் குலைத்துவிடும் என தன்னுடைய வழக்கில் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் தன்னுடைய ஆன்மீக நம்பிக்கையைப் பாதிக்கும் விடயமாகவும் நாஸாவின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக அந்த ஜோதிடர் தெரிவித்துள்ளார்.

இதனால் இந்த ஆராய்ச்சிக்கு உடனடியாகத் தடை விதிக்க வேண்டும் என அந்த ஜோதிடர் ரஷ்ய நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணையில் தெரிவித்துள்ளார். இதேநேரம் இம்மோதல் காட்சியை பூமியிலிருந்து தொலைநோக்கி மூலம் காணமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# பக்கவாதுமா? அஞ்சத்தேவையில்லை

சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பவர்களை உற்சாகமாக சுற்றித்திரிபவர்களை படுக்கையில் வீழ்த்துவதோடு முன்பு போல் செயற்பட முடியாமல் முடக்கிப்போட்டு மனவலிமையை நாசம் செய்யும் பக்கவாதம் மோசமான நோய்த் தாக்குலாக இருந்தாலும் முறையான சிகிச்சை பெற்று நலம் பெற முடியும். பக்கவாதத்தால் (Stroke) பாதிக்கப் பட்டவர்கள் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்புகையில் பேச்சுத்திறனை இழந்து கை,கால் இயங்காமல் மிகுந்த சோர்வுடன் இருக்கிறார்கள். வீட்டிலும் எந்தவித முன்னேற்பாடும் செய்யப்படுவதில்லை. வெகு சிலரே பிசியோ தெரபி, பேச்சுப் பயிற்சி, முதலியவற்றை செய்து உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் அடைகிறார்கள்.

பக்கவாதத்தால் அவதிப்படுகிறவர்கள் பெரும்பாலானோர் சிகிச் சைக்குப் பிறகும் கூட நிரந்தர நோயா ளிகளாகவே இருக்கிறார்கள். குடும்பத்தினருக்கும் சமூகத்தினருக்கும் சுமையாகி விடுவதும் உண்டு. இதை சம்பந்தப்பட்ட நோயாளிகளின் குடும்பத்தினர் உணர வேண்டும். மறுவாழ்வுக்கென்று இருக்கும் மருத்துவப்பிரிவின் அருமையை அறியாததால் தான் இந்த அவல நிலை.

அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளில் பக்கவாத நோயாளிகள் மருத்து வமனையில் சேர்ந்து ஐந்து நாட்கள் சிகிச்சை பெற்றதும் அங்கிருந்து நேராக மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். மறுவாழ்வு மையத்தில் பத்து நாட்கள் தீவிர சிகிச்சை பெற்று நோயாளி என்ற மனநிலை மாறி புத்துணர்ச்சியுடனும், உற்சாகத்துடனும் வீடு திரும்பு கிறார்கள். மேலும் முன்பு செய்து கொண்டிருந்த வேலையையும் தொடரமுடியும். யாரையும் சார்ந்திராமல் தன்வேலையை தானே செய்து கொள்ளவும், மற்றவர்களுக்கு சுமை யாக இல்லாமலும் வாழ வழி கிடைக்கும்.



இது தவிர மூளையிலுள்ள செல்களை உபயோகித்து செய்யும் புதுவிதமான பயோ·பீட்பக் (Bio Feed Back) சிகிச்சை முறை அறிமுகமாகியிருக்கிறது.

பக்கவாதம், செரிபரல்பால்சி, தலைக்காயம் அல்லது அறுவைச் சிகிச்சையினால் கைகால் செயலிழப்பு, தண்டு வட நோய்களினால் இருகால்களும் இயங்காமை முதலியவற்றை பழைய முறைகளைப் பயன்படுத்தி ஓரளவுக்குத் தான் சிகிச்சை அளிக்க முடியும். புதிய சிகிச்சையான பயோ·பீட்பக் முறையை கையாண்டு முழுமையான நலம்பெற வைக்கமுடியும். இந்தச் சிகிச்சை முறையை டாக்டர் பெர்னாத்டு, டாக்டர் எஸ்.புளுக்கர் ஆகியோர் மியாமி பல்கலைக்கழகத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏறத்தாழ 8000 நோயாளிகளுக்கு புதியமுறை மூலம் சிகிச்சை அளித்து 98 சதவீதம் நோயாளிகள் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்திருப்பதை ஆதாரமாக தந்திருக்கிறார்கள். EMG கருவி பொருத்திய கம்ப்யூட்டரில் பார்த்தபடியே பலவீனமான தசைகளை அசைக்கும்போதுதான் எவ்வளவு அசைக்கிறோம் எப்படி அசைக்கிறோம் என்பதைப் பார்த்து தவறுகளை திருத்தி திரும்பத் திரும்ப சீர்படுத்திக்கொண்டு முன்னேற்றம் காணமுடியும்.

யாருக்கு இந்த முறை பயனளிக்கும்?

மிகக் குறைவான அசைவுகள் EMGயில் சிக்னல் உண்டாக்குவதில்லை.

★கருவியில் சத்தம் அதிகம் இருந்தாலோ அசைவின் ஒரு பகுதியையே கணக்கெடுப்பதாலோ குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு.


★உடனுக்குடன் பார்த்து திருத்திக்கொள்வது எளிது. காலம் கடந்து செய்பவர்கள் இந்த முறையில் கற்பதில்லை.

★முழுமையாக பேசும் சக்தியை இழந்தவர்கள் இந்த சிகிச்சைக்கு பொருந்தமாட்டார்கள். கொம்யூட்டர் திரையில் பார்த்து செய்யும் ஒவ்வொரு அசைவும் மூளையிலுள்ள நியூரான் எனும் செல்களால் நன்கு கட்டுப்படுத்தப்பட்டு, சீராகவும் பயனுள்ளதாகவும் மாறுகிறது. தசைகள் உறுதி பெறுகின்றன. விறைத்து இருக்கும் கை, கால்களை தளர்த்த முடிகிறது. உறுப்புகளுக்கிடையே ஒருங்கிணைப்பும், சீரான இயக்கமும் அதிகரிக்கிறது. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவாகவும், நம்பிக்கை தரும் விதத்திலும் குணமடைகிறார்கள் என்பது சந்தோசமான விடயமே.

## மஞ்சட் காமாலை நோயாளிக்கு ஏற்ற உணவு எது?

மஞ்சட்காமாலை நோயாளிகளுக்கு வாய் வழியாக உண்ண அரிசியினால் செய்யப்பட்ட உணவுகளே அதிகம் சிறந்தவை. அதிகளவு குளுக்கோசும் கொடுக்கவேண்டும். கல்லீரலுக்குக்கேடு விளைவிக்கும் மருந்துகளைத்தவிர்க்க வேண்டும். சுரத்தைக் குறைக்கும் மருந்தான பரசிட்டமோல் மாத்திரைகளைக்கூட மிகக்குறைந்தளவு கவனமாகக் கொடுக்கவேண்டும். ஏனெனில் இம்மருந்து இவ்வகைக்கல்லீரல் நோய்களுக்கு ஏற்றதல்ல. மேலும் நீரிழிவுக்காரர்கள் கூட இந்நோய் ஏற்பட்ட பொழுது சாதாரணமான உணவுக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தி கல்லீரலுக்கு நன்றாக வேலை செய்ய உதவும் பொருட்டு, தாராளமாக குளுக்கோஸ் போன்ற நீர்த்தன்மைகளையுடைய பானங்களை குடிக்கவேண்டும்.



# பெரிய அளவுகள்

காலை ஏழுமணியாகி விட்டது. பொருட்களை வாங்குவதற்காக சந்திவரை செல்லும் எண்ணத்துடன் இராஜவரோதயத்தார் சேட்டைத் தூக்கிப் போட்டுக் கொண்டார். பையையும் எடுத்துக் கொண்டார்.

மாதினி! மாதினி!

யார்? பழகிய குரல்.

நான்தான் சர்மிளா

அப்பா! கேற்றைத் திறவுங்கோ?

இராஜவரோதயத்தாருக்கு கோபம் கோபமாய் வந்திருக்க வேண்டும்.

மாதினியின் நெருங்கிய சிநேகிதி சர்மிளா. மாதினியின் அம்மா, அப்பாவை அவளும் அம்மா, அப்பா என்று அழைப்பதே வழக்கம். கொஞ்சம் செருமி, கடுமையாக எங்களுக்கு வேலை இருக்கு என்ன வேணும்?

அப்பா! வாங்கோ கேற்றைத் திறவுங்கோ. கொஞ்சம் கதைக்கவேணும்.

வேண்டா வெறுப்பாகக் கேற்திறபட, சர்மிளா உள்ளே நுழைந்தாள்.

இருங்கோ!

சர்மிளாவும் மாதினியும் ஆசிரியர்கள். இருவரும் சுமார் பதினைந்து வருட சிநேகிதம். என்ன விடயமாகிலும், இருவர் குடும்பவிடயங்களும் இரு சிநேகிதிகளுக்கும் அத்துப்படி. ஒருவர் கூறுவதை ஒருவர் கேட்டு வழிப்பட்டு வந்திருக்கிறார்கள். மாதினி எதுவாகிலும் சர்மிளாவுக்கே கூறி ஆலோசனையும் பெறுவாள்.

மாதினி எங்கே? இன்று பள்ளிக்கூடம் லீவுதானே.

..........

அப்பா! எல்லா விபரமும் உங்களுடன் கதைக்கத்தான் வந்திருக்கிறன்.

என்னத்தைக் கதைக்க இருக்கு. யார் யாரை இந்தக் காலத்திலை நம்புறது.

நான் இல்லாத காலங்களிலதானே மாதினிக்கு இவளவு கஷ்டமும் மாதினி விசுவாசமானவள். கள்ளம் கபடமில்லை. இவளவு நெருக்கடியும் வந்திருக்கு.

மாதினி வெளியிலே எங்கும் போய் விட்டுதோ? அடக்க முடியாமல் திரும்பவும்.

ஏதும் வேலையாக உங்கே தான் நிற்கும்.

முன்பு சர்மிளா வந்தால் காணும். மாதினி ஓடி வந்து உள்ளே அழைத்துச்சென்றுவிடுவாள். இப்போ மாதினியின் தந்தை உனது கொண்டாட்டங்கள் எல்லாம் காணும். உடனடியாக எல்லாம் நிறுத்து. ஓரிடமும் போகக்கூடாது. உறுதியான கட்டளை.

அப்பா! நீங்கள் சரியான கோபமாக இருக்கிறீங்கள்? பிறகென்ன பிள்ளை. தேவையில்லாத பிரச்சினைகள்தானே. இது ஒரு வெகுளி. இங்கேயும் வீட்டில் தனியத்தானே நாலு சனத்தோடை பழகு என்று விட பேய்ப்பட்டம் கட்டி எப்படியெல்லாம் வேடிக்கை பாக்குது.

பாவம்! மாதினி நம்பி நடந்திருக்கும் பொம்பிளையள் இந்த நரி வேலை பார்ப்பினம், நரிக் கூட்டங்களுடன் சேர்ந்துகொண்டத யார் கண்டது?

இடப்பெயர்வுகள், இந்த ஆமிக்காரனின் பிரச்சினையளுக்கையும் தப்பிப் பிழைத்து இப்படி ஒரு கொடூரமோ.

அப்பா! உதுவும் ஒரு பெரியபிரச்சினையே. வேலை வெட்டியில்லாததுகள் மினெக்கெடுதென்று.

இல்லை பிள்ளை. மாதினி ஒன்றையும் தாங்க மாட்டுது. மற்றது அப்படிக் கண்டவனுக்குப் பின்னாலை திரிஞ்சாலும் சொல்லலாம். எவளவு பொறுப்பாக வளர்ந்தவள்.

நான் முதலே சொன்னனான் எல்லோரோடையும் சேராதை.

எங்களுக்குத் தெரியாமல் கண்டதுகளைத் தூக்கிக்கொடுக்காதை. எல்லோருக்கும் போய்க் குனியாதை. ஏமாற்றிப் பேய்ப்பட்டம் கட்டிப் போடுவினமென்று கேட்டால்தானே.

அப்பா! மாதினிக்கு ஒரு விதமான பிரச்சினையுமில்லை. இது திட்டமிட்டுச் செய்த, செய்கின்ற சதி. காட்டிக்காட்டிக் கதைக்கினம். உங்கா வருகுது போகுதென்றினம் என்று எனக்கு சொல்லுறவள் மாதினி. தன்மையாகக் கேட்டபொழுதெல்லாம் மழுப்பிவிட்டு இப்போ திசை திருப்பி விட்டாச்சு. தாங்கள் தப்பவேணுமே.

ஒரு பெண்ணை காதலிக்கிறவன் தன் காதலைத் தெரிவிக்க வேணும்.

தெரிவித்தானோ...?

இல்லை!

அவன் யாரெண்டும் தெரியாது. வீடுகளை எட்டிப் பார்க்கிறது.

எட்டிப் பார்த்தவனெல்லாம் மாப்பிள்ளையே?

இப்போ கூப்பாடு போடுகிறவை முன்பு காதலைத் தெரிவிக்க கூப்பாடு போடவில்லை. திருத்தியிருக்கலாம்.

அப்பா! இது ஒரு குழுவன்முறை.

முன்பு ஒரு தரம் இந்த வீட்டுக்கு வந்த புதிதில் மாதினியிடம் ஒருவர் சேட்டைவிட்டு, ஈருருளியின் வேகத்தைக் குறைத்து கண்களால் மேயப்போய் வாங்கிக் கட்டினவர். இப்போது அதன் எதிராலிதான் இதுகளெல்லாம்.

அம்மா, வந்து எட்டிப் பார்த்தா.

எப்படி இருக்கிறீங்கள்?

என்னைத் தெரியுதே.

சர்மிளா தான்.

வந்த வேகத்தில் உள்ளே திரும்பியாச்சு.

மாதினி! மாதினி! சர்மீ வந்திருக்கிறா.

எவளவுக்கோ பிறகு மாதினி வந்தமர்ந்தாள்.

இராஜவரோதயத்தார் கடைக்குப் போய்விட்டார்.

சர்மீ அக்கா! எப்ப வந்தனீங்கள்?

நேற்றுத்தான்.

முந்திய கலகலப்பு மாதினியிடம் இல்லை.

மாதினி! நீர் ஒன்றுக்கும் யோசிக்காதையும். இவை வில்லங்கமாக உம்மிடம் மோதுகினம்.

சர்மீ அக்கா! முதலே என்னை வெருட்டியாச்சு. எங்கே போனாலும் எங்களுக்குத் தெரியும். எல்லா இடமும் எங்களுக்கு ஆளிருக்கு என்று.

மாதினி எல்லாக்கதையும் சர்மிக்குப் போனிலும் கடிதத்திலும் தெரிவித்திருந்தாள்.

## இனியவள்

சர்மீ அக்கா! நான் எங்கு போய்ச் சொல்லுவது? உண்மையைத்தானே பூனை தின்றுவிட்டது. யாரிடம் போய் நீதி கேட்பது.

என்னை எத்தனை வெருட்டு வெருட்டினார்கள். எனக்கு பெருமை, பொறாமை, இருள் என்றெல்லாம் பொல்லாத பட்டங்களைச் சூட்டினார்கள். நான் சரியாக நொந்துதான் போயிருந்தேன். ஆளுக்கொரு விதமாய் என்னைப் பற்றிய தனிமனித ஆராய்ச்சி. நான் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் ஒன்றும் விடாமல் எழுதியாச்சு.

இஞ்ச பாரும் மாதினி!

சின்ன விஷயமாகிலும் மறைக்காமல் எனக்குச் சொல்லுவீர். ஒளிவு மறைவே உமக்குக் கிடையாது. காதிலை உதுகளை வீழ்த்தாதையும். போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். எல்லா மட்டத்திலும் இல்லாதது பொல்லாததுகள் அள்ளி வைக்கிறதே தொழிலாப் போச்சு.

உம்மை அடையாளப் படுத்திப் பகிடி பண்ணியது, ரௌடித்தனமான சிலவேலைகள் செய்தது. குற்ற உணர்ச்சி மனச்சாட்சி வதைக்குது அதற்கு வடிகால் இது.

சர்மீ அக்கா! கண்டமாதிரி எழுதுகினம்.

எனக்கு ஆத்திரம்தான் வருகுது. உமக்குக் கையில்லையே. சிறு விஷயத்துக்கே எனக்கு உற்சாகமூட்டி கவிதை எழுதுவீர். உமக்கு எழுதத்தெரியாதே. பிரசுரியாமல் விடட்டும். உமக்குவரும் ஆத்திரத்தைக் கவிதையாய் வடியும். அவைக்கு உம்மை எப்படி விளங்குதோ? அவையைப் பற்றி விளங்க உமக்கு உரிமையில்லையே?

முதல் கவிதைகள், கட்டுரைகள் எழுதினனான்.

எங்கே பார்ப்போம்.

பிறகென்ன? நல்ல கழட்டுத்தானே.

இங்க பாரும். பொம்பிளைப்பிள்ளை என்றிட்டு கொஞ்சச்சனம் வில்லங்கத்துக்கென்றே இருக்கு. அவர்கள் அளவுகளைக் கூறி வெருட்டலாம். அளவு பணமும், பதவியும் தான். அநியாயம் மனச் சாட்சி முன்னால் கூனிக் குறுகி தோற்றுப்போய்விடும். உமக்கு இப்போ என்ன குறைவு?

யாரே ஒருவன் மாதினியைக் காதலித்ததாகக்கதை. ஆனால் அவனை யாரென்று மாதினிக்குத் தெரியாது. எதுவித தொடர்போ இல்லை. மர்மம்தான். இல்லாததுகளும் பொல்லாததுகளும் எழுதிக் கதைத்து தமது செல்வாக்காலும் பதவியாலும் ஆளணிகளைக் கைக்குள் போட்டு நிறையவேலைகள். அதன் வழி பத்திரிகைகள் சாட்சிகளாகிப் போய்விட்டன.

சர்மீ அக்கா! எனக்கு உயிரோடை இருக்கவே இப்ப கொஞ்ச நாள் விருப்பமில்லாமல் இருந்தது.

உமக்கென்ன விசரே? தெருவிலை போகிறவனெல்லாம் ஏதும் சொல்லிக்கொண்டு போகட்டும். அதுக்காக நீ முடியப்போறதாச் சொல்லுறீர். எவளவு துணிவாய் இருந்தனீர்? இப்ப ஏன் இப்படியாக இருக்கிறீர்?

எல்லோருமாகச் சேர்ந்து துன்பப்படுத்தினார்கள். அப்போது நிலை தளர்ந்து போய்விட்டேன். இப்போ அப்படியில்லை. எனக்குள் சில கேள்விகளைக் கேட்பேன்.

நான் என்ன தவறு செய்தனான்?

யாரையும் நம்பி வாழ்ந்தேனா? வாழ்கிறேனா?

யாரிடமும் எதற்காவது கடமைப்பட்டதுண்டா?

இவர்கள் யார் எனக்கு?

மனச்சாட்சி மட்டும்தான் எனக்குச் சொந்தம். எனது திருமண வாழ்வை மட்டுமே இந்தப் போலிப் பிரசாரங்களால் நிறுத்த முடியும். வேறு என்னசெய்ய முடியும். என்னைப் பெற்றவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள முடியும். நயவஞ்சக வலைகள் இப்படித்தானே. மற்றவர்களின் துன்பத்தில் இன்பம் காண்பதே எல்லோருக்கும் வேலையாய்ப் போய்விட்டது.

மாதினி! இப்போ கடைக்கு யார் போறது?

அப்பாதான். ஏலாட்டியும் போய் வருவார். வெளியில் நான் போவதே வலுகுறைவு. எனது கடமை, வீடு. பத்திரிகைகளும் படிப்பதை நிறுத்தியாகிற்று. இரு கிழமைகளுக்கு மேலாகப் பத்திரிகைகள் படிப்பதில்லை. தொலைக் காட்சிச் செய்தி, வானொலிச் செய்தி அவளவுதான். அப்பாதான் பத்திரிகை வாசிப்பார்.

சர்மீ அக்கா!

நான் ஒருவருடனும் இப்போ பெரிதாகக் கதைப்பதில்லை. கேட்டால் மரியாதைக்கு நாலு வசனம். முன்பு மனம் விட்டுக் கதைக்கப்போய் படுத்தி விட்டபாடே காணும்.

இங்க பாரும்! நீர் யாரோடையும் தெருவழியே கதைச்சுக் கொண்டு திரிஞ்சனீரே? இந்தத் தெருவிலை உள்ளவைக்கு உம்மைப் பற்றி நல்லா விளங்கும். யாரும் என்னவும் கதைக்கட்டும்.

இவைதான் தங்கள் குட்டுக்கள் வெளிக்கிடாமல் நல்லவர்களுக்கும் அந்தமாதிரிக் கதைகள் திரித்துக் கூறியிருக்கிறார்கள்.

மாதினி! சும்மா கிடந்த சங்கை ஊதிக் கொடுத்த கதை தான். அளவுத் திட்டங்களுடையது. பொருட்படுத்தாதையும்.

உம்மிடம் உள்ள புத்தகங்களை நன்றாக வாசியும். இன்னும் பல புத்தகங்கள் வாங்கும். நூல் நிலையமொன்றில் அங்கத்தவராக இணையும். ஆசிரியர் கற்பிக்கும் முறையியலைப் படியும். உமக்கு ஆங்கிலமும் பெரிய பிரச்சினையில்லை. உமது திறமைகளை நன்றாகப் பயன்படுத்தும்.

சர்மீ அக்கா! நான் நல்ல சிந்தனைகளை நினைத்தாலே பரிகாசம் செய்பவர்கள். ஒரு நல்ல நோக்கில் என்னை இணைத்துக் கொண்டால் எப்படி ஏளனம் பண்ணுவார்கள்? இப்போ வீட்டிலிருந்தே ஒன்றுமில்லாததுகளுக்கு எனது தலையை உருட்டுவதற்கு ஆதரவாய் இருப்பவர்கள், இனிமேலும் ஏதும் இப்படியான பிரச்சினைகள் வந்தால் இவ உப்பிடித்தான் என்று சொல்ல மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்.

சும்மா இரும். ஒருவரிலும் பிழையில்லை. இவை அந்தமாதிரி கண், காது, மூக்கு வைத்து அள்ளி வைத்திருக்கினம். இது குறை நிரப்புப் படலம். மாதினி! மனம் நொந்து போயிருக்கும்போது எல்லாரும் அப்படியோ என்று எண்ணத் தோன்றும். நான் இப்போ ஒருவருடம் உளவளத்துணை டிப்ளோமா செய்கிறன். இன்னும் வகுப்புகள் தொடங்கவில்லை.

கெட்டிக்காரி நல்ல விஷயம். வாழ்த்துக்கள்.

மாதினி! நீர் திருமணம் செய்யமாட்டீரா?

அந்தக் கதைக்கே இடமில்லை. வாழ்வென்று வந்தால் கல்லெறிய மாட்டினம் என்று என்ன நிச்சயம். எனக்கு எல்லாமே வெறுத்துப் போய் விட்டுது. இந்தப் பிரச்சினைகளுக்கு முன்பாகவே திருமணம் பற்றிய சிந்தை என்னிடமில்லை. எனக்கு மேலே நிறையப் படிக்கத்தான் ஆசை இருந்தது. அதுதான் கை கூடவில்லை. மனதுக்குள் சில கொள்கைகள் இருக்கு. அப்பாதான் அடிக்கடி வேதனைப் படுவார். சகோதரங்களுக்கும் சதா

→

வேதனை தான். நான் யாரையும் நம்பி இருக்கவில்லை.

அந்தக் காலமிருந்தே மற்றவனின் முன்னேற்றத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் தடையாக இருப்பதே பொழுது போக்காகச் சில சனங்கள் நினைக்குதுகள்

திருப்பி திருப்பி மாதினி உதுகளைப் பற்றி யோசியாதையும் உடம்புக்குக் கூடாது.

சர்மீ அக்கா! என்னாலை இப்ப இயலுவதே இல்லை. அடிக்கடி நித்திரைகொள்ளவேணும்போல சோர்வாயிருக்கும். எப்போ? நித்திரை கொள்ளுவேன் என்றிருக்கும்.

மன உளைச்சல் மாதினி! பொல்லாதது. உயர்ந்த சனங்கள் இப்படியான வேலை செய்வினமே? எப்பொழுதும் உண்மை வெல்லும். தர்மத்தின் வாழ்வதனை சூது கொள்ளும். தர்மம் மறுபடியும் வெல்லும்.

நான் எங்கு போய் உண்மையான சம்பவங்களைக் கூற முடியும்?

இங்கே பாரும் நீர் எழுதுறதெல்லாம் எழுதியாச்சு. நாலு வசனம் தன்னும் துணிவாய் அதிரடிகொடுத்திருக்கிறீரே? அதுவே உள்ள காலமும் உறைக்கும்.

பெரிசாய் யோசிக்கினம். இது தான் யோக்கியம். தாங்கள் அளவுகளிலை பெரியவரோ? இல்லையெனில் அநியாயத்தை நியாயப் படுத்துவதில் பெரியவரோ?

சரி உம்மடை பள்ளிக் கூடம் எப்படி? போக்குவரத்து எப்படி? பள்ளிக்கூடம் பிடிச்சிருக்கு. போக்குவரத்து பழகிவிட்டது.

அக்கா! எனது மாணவன் மாதுளன் குழந்தையானவர் இன்றைக்கு யாருடன் பள்ளிக்கூடம் வந்தனீங்கள்? சித்திரா ரீச்சர் கேட்ட போது,

ரீச்சர்! நான் சித்தியோடை பாடசாலைக்கு வெளிக்கிட்டு விறாந்தையில் நிற்கும் போது ஒருவன் எங்களுடைய வீட்டை எட்டிப் பார்க்கிறவர்.

அதுக்கு இப்போ என்ன?

நான் விடுவேனா ரீச்சர், டே! இடியமீன், தெருவாலை ஒழுங்காப்போ. நீ ஒழுங்கான ஆம்பிளையென்றால் இப்படியான வேலையள் பார்ப்பியே.

அவன் ஓடிமறைஞ்சிட்டான்.

வீட்டிலை பெரியாட்கள் இல்லையே மாதுளன்!

நான் பெரியாள் தானே. அம்மம்மா சொன்னவா.

இன்றைக்கு ஓடிப் போட்டான் இனிமேல் எட்டிப் பார்த்தால் நீ தான் பொறுப்பெண்டு.

என்ன செய்வீராம்?

துவக்குக்குள்ளே மிளகாய்த்தண்ணீர் ஊற்றி வைச்சிருக்கிறன். எனது முதல் வேலை பச்சை மட்டை ஒன்று விறாந்தையிலை சாத்தி வைச்சிருக்கு. சித்தியும், அம்மம்மாவும் சேர்ந்து சாத்துகிற சாத்துக்கு இந்தப்பக்கமே வர மாட்டான்.

ஆசிரியர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

இப்போ சர்மிளாவும் சிரித்தாள். நாங்களும் அப்படி ஒரு வேலை செய்திருக்கலாமோ. நீர்தான் சொல்லுவீர் சின்னப் பொடியள். என்னுடைய தம்பியைவிட வயது குறைந்த பிள்ளைகள். படிக்கின்ற பிள்ளைகளென்று" இப்ப எப்படி?

சர்மீ அக்கா! எனக்கு பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதே இப்படியான ஒரு துன்பமும் வரவில்லை. இந்த வீட்டிலை அதுவும் அம்மா ஒருவருடனும் கதைக்காத படியால்தான் முன் பக்கம் வந்து உறவினரை நண்பரை நான் முக்கியமாக உபசரிக்கவேண்டியிருந்தது. இப்படியொரு சதி வலையோ?

உம்மடை வீட்டிலை இருக்கிறது யார் கேட்கிறது?

சர்மீ அக்கா! நான் தெளிவாகி விட்டேன். யாரும் என்னவும் சொல்லட்டும். முதல் தான் விஷயம் விளங்கேலை யாரிட்டையும் புத்திகேட்டன்.

மாதினி! ஒரு குறள் ஞாபகம் வருகுது. நீர்தான் முதல் அடிக்கடி கூறுவீர், யாருக்காவது எங்களாலியன்ற உதவிசெய்யவேணுமென்று. அம்மா, அப்பாவை அவற்றுக்கு புத்தி கேட்கக் கூடாதென்பீர். நான் ஏசும்போதெல்லாம் என் கடன் பணி செய்து கிடப்பதே என்பீர். இப்போ உமக்கு தன் பாட்டில் தீராத பழியெல்லோ வந்திருக்கு.

சர்மீ அக்கா, நான் இன்றைக்கு நொந்து போகலாம். நாளைக்கு உஷாராய்ப் போய் எனது பிள்ளைகளோடு இருக்கத்தான் போகின்றேன். கடைசியாகவரும் போது அதிபரிடம் அடுத்த தவணை எழுத வாசிக்கத் தெரியாத பிள்ளைகளை ஒரு வகுப்பாக்கி, ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு பாடவேளைகள் அவர்களுக்கு போட்டுத் தரச்சொல்லி இருக்கிறன். அந்த மாணவர்களின் நிறைவிலை நானும் சந்தோஷப்படுவன். பாதைகள் வேறாக இருக்கலாம் பயணங்கள் ஒன்றுதான். எனது காலங்களும் பயனுள்ள காலங்கள்தான்!

மாதினி அந்தக் குறளைக் கூறுமன்.

"அரம் போலும் கூர்மையராயினும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்"

சர்மீ அக்கா! இவையளாலை, உண்மையானவர்களைக் கூட சிலசமயங்களில் தவறாக யோசிக்கிறன்.

நாங்கள் வல்லவர்கள், பெரியவர்கள் என்பதாக ஒரு பெண்ணை இழிவுபடுத்தியதாகக் கூறலாம். எனக்குள்ளும் எரிமலை குமுறிக்கொண்டுதான் இருக்கு. இவர்களின் எந்தக் கதைக்கும் உடன்பாடில்லை. நான் கெட்டுப்போகவுமில்லை. நரம்பில்லாத நாக்கு சுழலட்டும். எனக்கு கை கால் இருக்குது. எனது காலாலை நான் நடக்கின்றேன். மனச்சாட்சி எனக்கு வழி விடுகிறது. கல்யாணம் கட்டாமல் இருக்கின்ற பெண்கள் எல்லாருக்கும் காதல் தோல்வியாமே. இன்னும் கொஞ்ச நாளிலை பிள்ளையுமிருக்கு என்று கதை கட்டுவினம். கேளுங்களன். இவர்களுக்கு சகோதரிமார் கிடையாதே. அவர்களுக்கு இப்படிப் பேய்ப்பட்டம் கட்ட விடுவினமே. எத்தனை நையாண்டி மேளங்கள் கேட்கப் பேச ஆளில்லை தம்பி அதிகப் பிரசண்டம்.

மனநோயாளிக்கும் மனமிருக்கு. அன்பிருக்கு. ஆனால் இவர்கள் யாருக்கு குழி பறிக்கலாம்? அதுதான் நினைவு. எனக்கு நேர்மையான மனச்சாட்சி இருக்கு. செய்யிறதைச் செய்யட்டும்.

இவளவுதுணிவும் வந்திட்டுது பிறகென்ன?

மாதினி, நான் முதல் யாரோ உம்மைப் பற்றி தப்பாகக் கதை விட்டிருக்கினம் என்றுதான் யோசிச்சன். இப்படி வந்து, இந்நிலைக்கு வருமென்று நான் நினைக்கவில்லை.

சர்மீ அக்கா! எல்லாத்துக்கும் இப்போ நான் தயார். என்ன செய்யமுடியும். நான் பயப்படமாட்டன். பயப்படவே மாட்டேன்...

ஓமோம்.

---




ஊமையிடம்
பாடச்சொல்லியும்
ஆமையிடம்
பாயச்சொல்லியும்
கேட்டுப்பாருங்கள்
நடக்கலாம்

கல்லில் நார்
உரிக்கவும்
முட்டையில்
மயிர் பிடுங்கவும்
முயற்சி செய்யுங்கள்
முடியலாம்.

எயிட்சுக்கு மருந்து
கண்டு பிடித்தவனிற்கு
செவ்வாயில்.

விருந்தொன்றை
உலகம் வைக்கலாம்

பூமியை மறுவளம்
சுற்ற வைப்பதும்
நிலவின் கிடங்குகளை
நிரப்பிக் கொள்வதும்
நிறைவேறிப்போகலாம்.

அலைகளை
அமைதி கொள் என்றும்
சிலைகளை நடந்து வாருங்கள்
என்றும் கட்டளை
இடுங்கள்
அது வெற்றியளிக்கலாம்.

உயிர் பறித்தல்
தவறெனச் சுனாமிக்கும்
பிளந்தழித்தலை
நிறுத்தெனபூமிக்கும்
வேண்டுகோள் விடுங்கள்
கருணை காட்டலாம்.

படகைத் தரையில்
ஓட்டலாம்

கடலை இறைத்து
முடிக்கலாம்
உலகை உருட்டி
விழுத்தலாம்
நிலவில் நீச்சல்
அடிக்கலாம்
காற்றை கட்டிப்
பிடிக்கலாம்
ஆற்றை மாற்றி
ஓட்டலாம்
குயில்கள் ஆடலாம்
மயில்கள் பாடலாம்

இத்தனை அதிசயம்
உலகில் நடக்கலாம்

ஆனால் ஒன்று மட்டும்
நடக்கவே நடக்காது
?????
சிங்கள தேசம்
தமிழரின் உரிமையைத்
தானாய்த் தருவது

முக்கண்ணன்

---

# நீயும் நானுமாகி..

ஒரு
நிலாக்கால-நடு
நிசியில்....
முற்றத்தில் இருக்கிறோம்..
நீயும்... நானும்.
இத்தனை ஆண்டுகால
இணைபிரியா(த) பயணத்தின்
இளைப்பு.... நம்
முகங்களின் சுருக்கத்தில் தெரிய..
மங்கலாய் விழும்
அந்த நிலவின் ஒளியில்
உன் முகம்
உற்றுப்பார்க்கிறேன் நான்!

கண்களில் மட்டும்
அதே பழைய பொறி!
சாதித்து முடித்த உன்
இதயத்தின் துடிப்பு- உன்
தீர்க்கத்தில் தெரிந்தது எனக்கு!

கட்டுக்கடங்காத என்
ஞாபகக்குதிரைகள்
பின்னோக்கி ஓடவே பிரியப்படுகின்றன...

மீளவும்
இனி வரமுடியாத
அந்த நாட்களினை
எண்ணிப்பார்க்கிறது மனசு!

முதல் முதலாய்
நாம் இருவரும்
நம்மை
அறிமுகப்படுத்திக்கொண்ட போது
உன்னிடம் இருந்த அலட்சியம்!

காரணம் இல்லாமலேயே - நீ
என்னிடம்
கோபப்படும் அழகு!

நான் விழுந்த போது
கைதந்து தூக்கிய உன்
பக்குவம்!

என்னை
காயப்படுத்திவிடக்கூடாது என்ற
உனது
வார்த்தைகளின் கவனம்!

நான் அழுத நாட்களில் -உன்
கன்னத்தில் வழிந்த
நீர்த்துளி!

இருவருக்குமே தெரியாமல்
நம்மிதயத்தில்
கூடாரம் அடித்துக்குடியேறிய
காதல்!

உனக்கு
உன் தந்தை!
எனக்கு
நீ தந்தை!

நீண்ட நாட்களாக
ஒட்டடை தட்டப்படாது கிடந்த
எனது
கவிதைகளின் அரண்மனைக்கு,
வெள்ளை அடித்து....
விளக்கேற்றி....
தூபமிட்டு...
நித்தமும் ஒலிக்கவைத்தாய்
உன் கொலுசொலி!

உன்னைச்சுற்றி உள்ளவர்களே
உன் மனதை உடைத்த
காலங்களுக்காய்....
நீ அழுத நாட்களைவிடவும்
நான் அழுத நாட்களே அதிகம்.


காலம் எமக்கு
கைகொடுக்கும் என்று சொன்னாய்..
வாழ்ந்து முடித்தோம் நாம்!


இப்போது நீ இன்னும்
என் அருகிருக்கிறாய்
எனது
கைபற்றும்
உன்கையின்
கணச்சூடு...
அன்னையின் அணைப்பை
மீண்டும் ஒருமுறை
அறிமுகப்படுத்தியதெனக்கு

மாட மாளிகையும்...
மணிமுடியும்...
வேண்டுமென
அடம்பிடித்தழும் இந்த
அழுக்குச் சமூகத்திற்குள்ளே...
என்
மார்மீது நீதூங்க
இடம் கேட்டாய் பெண்ணே!
இனியெம்மை யார்வந்து(ம்)
என்ன செய்யமுடியும்?

த.நிரஞ்சலன்



# மூட்டைப்பூச்சி

மூட்டைப்பூச்சிக்கு அறிமுகம் தேவையில்லை. இது நோய்களைப் பரப்பாவிட்டாலும் தூக்கத்தைக் கெடுத்து தொல்லை தரும் பூச்சி என்பதில் சந்தேகமே இல்லை. இது பூச்சிகள் வகுப்பில் ஹெமிடேரோ வரிசையைச் சேர்ந்தது. இது இரவு இரைதேடி. இருட்டிலே நடமாடுபவை. பகலில் கட்டிலிலுள்ள இடுக்குகள், சுவரிலுள்ள சிறு சிறுபாந்துகளில் பதுங்கிக் கொள்ளும்.

மூட்டைப் பூச்சி சிவப்பு நிறத்தில் கோழி முட்டை வடிவில் தட்டையாக இருக்கும். இது 6 மி.மீ நீளமும் 3 மி.மீஅகலமும் கொண்டது. ரத்தம் உருஞ்சிய பின் இது சிவப்பாக மாறும். மூட்டைப் பூச்சியின் வாயில் தோலில் துளையிடுவதற்கான உறுப்பமைவு உள்ளது. இது ரத்தத்தைஉறிஞ்சும் போது ரத்தம் உறையாமல் தடுக்க ஒரு நொதியையும் உள்ளே செலுத்துகிறது. இது உடலில் அரிப்பு, எரிச்சல், வீக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துகிறது. இதற்கு இறக்கைகள் கிடையாது. மூன்று ஜோடி கால்கள் மார்புப் பகுதியுடன் பொருந்தியிருக்கின்றன. இது ஒரு முறை ரத்தம் உண்டுவிட்டால் 12 முதல் 15 மாதங்கள் வரை உணவு இல்லாம லிருக்கும்.

ஒரு பெண் மூட்டைப் பூச்சி 200 முதல் 500 முட்டைகள்வரை இடும். கோடை காலத்திலும் இளவேனில் காலத்திலும் மூன்று மாதங்களுக்கொரு முறையும் முட்டையிடும் இளரிகள் குண்டூசி தலையளவு இருக்கும். எட்டு நாள்களுக்கு ஒருமுறை வீதம் ஐந்து முறை சட்டையுரித்துக்கொள்ளும் இறுதியாக சட்டை உரித்தபின் இது வளர்ந்த மூட்டைப் பூச்சி ஆகிவிடுகிறது. ஒவ்வொரு முறை சட்டை உரிப்பதற்குள் இதற்கு ரத்த உணவு தேவை. ஒரு இளரி முழு மூட்டைப் பூச்சியாக மாற 40 நாள்கள் முதல் 60 நாள்கள் வரை ஆகும்.

மூட்டைப் பூச்சிகளினால் அதிக வெப்பத்தையும் தாங்க முடியாது. அதிகக் குளிரையும் தாங்க முடியாது.

## நகைச்சுவை

"உங்கள் மருந்துக்கடையில் எதுக்காக கட்டுக் கட்டாக புத்தகங்களை வச்சிருக்கீங்க?"

*"எல்லாம் ஜோக் புத்தகங்கள், சிரிப்பு நல்ல மருந்தாச்சே"*



## சொற்சிலம்பம் - 87

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | ப் | வு | சி | ன் | னை | தீ |
| டு | கு | நீ | பா | ந் | மி | ங் |
| தி | லா | தி | கோ | னி | ணி | ஸ் |
| லி | அ | பி | ரி | டோ | சீ | ர |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| லை | ப | யா | சா | ஸ் | ரு | ம |
| யா | ல் | ரே | ஓ | கி | த் | அ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 85 இன் விடைகள்

01. ஜேர்மன்.

02. காபன்.

## சொற்சிலம்பம் - 85 இன் பரிசுக்குரியவர்

S.கிசோபிகா,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் - 85 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. க.சுகிதரன், கோணாவில், கிளிநொச்சி.
02. கு.ரமேஸ், வைரவபுளியங்குளம், வவுனியா.
03. சி.ரிசிபா, இரத்தினபுரம், கிளிநொச்சி.
04. த.கார்த்திகா, 7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
05. பிரியா, பண்டாரிக்குளம், வவுனியா.
06. ரூ.ருபி, செல்வபுரம், கிளிநொச்சி.
07. யாழினி, சங்கானை, யாழ்ப்பாணம்.
08. விஜிதா, திருவையாறு, கிளிநொச்சி.

01. 'புதுமைக் கவிஞர்' என்று சொல்லப்படுபவர்?

01) ....................................

02. தமிழீழத்தின் தலை நகர்?

01) ....................................

பெயர் :- ....................................

முகவரி :- ....................................

....................................

....................................

சொற்சிலம்பம்-87
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

## ஓட்டப்பந்தயம்...

பகுதி-05



# வீடு



# விடியும் பொழுது நமக்கானது

"விடியும் பொழுது நமக்காகத்தான் புலர்கிறது" நம்முடைய வாழ்க்கையின் வெற்றிக்கு அடிகோலுகிறது. நம் மனதில் சொல்ல வேண்டியது என்னவென்றால் இன்று நமக்கு புதுமையான நாள், வாழ்க்கையில புதிய பார்வை பார்க்கும் நாள், இனிமையைக் கையிலேந்தி வரவேற்கும் நன்னாள். வெற்றியோடு எழுவேன். வெற்றியுடன் பழகுவேன். எப்பொழுதும் சிரித்த முகத்துடனே இருப்பேன். இன்று செய்யும் எல்லாக் காரியங்களையும் மன உறுதியுடன் செய்து வெற்றி பெறுவேன். இவ்விதம் மனதில் காலையில் எழுந்தவுடன் சொல்லிப் பார்த்துக்கொண்டே இருக்க வேண் டும்.

இதனைத் தினமும் தொடர்ந்தால் நம்மால் எதனையும் செய்யமுடியும் என்ற ஊக்கம் பிறந்துவிடும். அந்த ஊக்கமே ஆற்றலைப் பெற்றுத்தரும். இதற்கு மாறாக நாம் இருப்போமே யானால் மகிழ்ச்சியின் உருவமே மாறிவிடும். வாழ்க்கை நம்முடனே இருக்கிறது.

அது வேறு எங்கும் இல்லை. நடக்கின்ற பொழுதிலே நம்மோடு வருவதுதான். மேடுபள்ளங்கள், ஏற்ற இறக்கங்கள், வளைவு நெளிவுகள் மண்டிக்கிடக்கின்றன இந்தப் பூமியில். நாம்தான் சளைக்காது அவற்றிற்கு ஏற்றபடி நடந்துசெல்ல வேண்டும். எப்படியென்றால் அதற்குத் தகுந்தபடி நம்மை நாம் மாற்றிக் கொண்டால் அனைத்தும் நமக்கு அடிமையாகிவிடும். ஒவ்வொரு கணமும் மாறுவதுதான் இயற்கையின் சட்டம். ஓடுகின்ற ஆற்றில் இரண்டாவது முறையாக தண்ணீரில் குளிக்க முடியாது.

அதாவது நீரோட்டம் பழைய நீரைக்கொண்டு செல்கிறது. புதிய நீர் விரைந்து வருகிறது. ஓடிவிட்ட நீரை நினைத்து நிற்காதே வருகின்ற நீரில் குளித்துவிடு. நடந்துகொண்டிருக்கிற இந்தப்பொழுது ஒன்றுதான். நாளையைப்பற்றி நமக்குத் தெரியாது. நேற்று நடந்ததை நினைத்து இன்று நாம் கவலைப் பட்டால் இன்றைய நாள் சந்தோசம் அற்றுப் போய்விடும்.நடந்த ஒன்றை நினைத்து வருந்துவதால் எந்தப் பயனும் இல்லை. இனிநடக்கப் போவதை நல்ல முறையில் செய்து வெற்றிபெற வேண்டும். ஒவ்வொரு நாளும் நல்ல நாளே என்ற எண்ணத்துடன் கருமங்களைச் செய்ய வேண்டும். மீண்டும் மீண்டும் இன்று நல்ல பொழுது என்று எண்ணும் பொழுது எப்படித்தீய பொழுதாக மாற முடியும். நிச்சயம் மாறாது. எமது நல்ல எண்ணமே நல்ல பொழுதை எமக்கு உண்டாக்கும். மாற்றங்களைப பார்த்து அவர்களைப் போல நாமும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஒரு நாளும் எமக்கு இருக்கக் கூடாது.

"ஜேம்ஸ் வார்டன்" ஒரு கருத்துக் கூறுகிறார். "எவன் ஒருவன் குணத்திலும், தோற்றத்திலும் தன்னிலும் மாறான ஒருவனைப் போல் ஆகவேண்டும் என்று ஆசைப் படுகின்றானோ, அவனைப்போல துர் அதிர்ஷ்டசாலி உலகில் யாரும் இருக்கமுடியாது." எனவே ஒவ்வொரு நாளும் நல்லநாளே என்ற எண்ணத் துடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். மற்றவரைப் பார்த்து அவனைப்போல் நானில்லையே என்ற எண்ணம் இருக்கக்கூடாது. விலங்குகள் கூட ஒன்றை ஒன்றைப்பார்த்து பின்பற்றுவதில்லை. அதன் பின்பு நாம் மட்டும் ஏன் அடுத்தவரைக் கண்டு அங்கலாய்ப்புக் கொள்ளவேண்டும். நம்முடைய திறமையை உணர்ந்து கொண்டால் பிறரைப் பற்றிய கவனமே தோன்றாது. நம்மை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் ஒவ்வொரு நாளையும் எப்படி வெற்றியுடன் கொண்டுசெல்ல வேண்டும். என்பதை ஒரு அறிஞர் இவ்வாறு விளக்குகிறார். "மலை முகட்டைப் போல உயர்ந்து நிற்கமுடியாவிட்டாலும் அதனை ஒட்டி ஓடுகின்ற அருவியாக இருக்க ஆசைப்படு'' ஒரு பூங்கொத்தாகப் பிறக்காவிட்டாலும் முள் செடியாக இல்லாமல் இருக்க விருப்பங்கொள். தண்ணீர் தடாகமாக நீ இல்லையென்றாலும் அதில் மலரும் தாமரையாக வாழ ஆசைப்படு. நீ ஒரு சூரியனாக ஒளிவிட முடியாவிட்டாலும் ஒரு நட்சத்திரமாக மின்னுவதற்காவது ஆசைப்படு. ஒவ்வொரு நாளும் எங்கள் எண்ணம், சிந்தனை நல்லதாக இருக்க முயற்சி செய். விடியும் காலை பொழுதில் எழுந்து அந்த நாள் நல்ல நாளே என்ற எண்ணம் கொள்.

ஒவ்வொரு நாளும் எழுந்து நல்ல சிந்தனையுடன் செயற்பட வேண்டும். உதாரணமாக எண்ணத்தில் நோயை வைத்துக் கொண்டு உடலை நோயற்றதாக வைத்துக்கொள்ள இயலாது. இது எப்படியென்றால் மது அருந்திவிட்டு மயக்கம் வரக்கூடாது என்று எதிர்பார்ப் பதைப்போலத்தான் தூயவாழ்வில் நோயற்ற நாளின் ஊற்றுக்கண் எண்ணமே. ஒவ்வொரு நாளும் நமது எண்ணத்தில் வேண்டாத பழக்கத்தை விட்டொழித்து தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்து வந்தால் நமக்கு திறமையும் அதிகரிக்கும். ஆகவே நாம் ஒவ்வொரு நாளும் நுட்பமாகவும், புத்திசாலித்தனமாகவும் திட்டங்களை அமைத்துக்கொண்டு சோர்வு இல்லாமலும் தொடர்ச்சியாகவும் செயற்பட்டு வருவோமே யானால் அந்த நாள் நல்ல நாளே.

**திருமதி ச. தயாபரநாதன்**

# நாம் சாதிக்க வேண்டும்

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் ஏதாவது ஒன்றைச் சாதிக்கத்தான் விரும்புகிறான். ஆனால் விரும்புகிறானே தவிர விருப்புடன் அதனைச் செயற்படுத்துகிறானா? இன்று நாளாந்தம் சாதனையாளர் பட்டியல் நீண்டு செல்லும் அதே வேளை இன்னும் சிலர் இவ்வளவு காலமாகியும் எதனைச் சாதித்தேன் என்று எண்ணுவதும் உண்டு. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதமற்றுத்தான் சாதனை என்பது அமைகிறது. சாதாரணமான எமது வாழ்க்கையிலே எத்தனையோ சாதனையாளர்களைப் பற்றி அறிந்திருப்போம். அவர்களுக்குள்ளே பல்வேறுபட்ட திறமைகள் இருக்கும். பல்வேறு பட்ட பலவீனங்கள் இருக்கும். இன்று இந்தியாவில் உள்ள ஊனமுற்றோர் கல்லூரியை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கு ஆண், பெண் என்ற பேதமின்றி எல்லோரும் ஒன்றாக இருந்து கற்கிறார்கள். தங்களது உடல்வலுக் குறைவை பலவீனமாக கருதினால் அவர்களால் எதனைச் செய்ய முடியும். பலவீனம் என்பது அவர்கள் உடலுடன்தான். ஆனால் அவர்களது மனவலிமை, தன்னம்பிக்கைதான் சாதனைக்கான வழிகளில் கால்பதிக்கத் தூண்டுகிறது.



சாதிப்பது சாதனையாளராவது என்பது அவரவர் சிந்தனையில் தான் உள்ளது. மலையில் ஏறப்போய் நின்று இவ்வளவு உயரமாக இருக்கிறதே என்று சிந்திப்பதை விட எப்படி இந்த மலையில் ஏறலாம் என்று சிந்திப்பதால் நல்ல சிந்தனை உருவாகுமல்லவா? நாம் எவ்வளவிற்கு ஒன்றைப்பற்றிச் சிந்திக்கிறோமே" அவ்வளவிற்கு நாம் தெளிவு பெறுகிறோம்.

ஏதாவதொன்றை விரும்பி அதனைத் தேடிக் கண்டு பிடித்து செயற்படக்கூடிய திறமையுடையவர்களாக இருக்கின்ற ஒருவனால் உயர்ந்த சாதனையாளராக முடிகிறது என்றால் அவனுடைய ஆற்றல் இவ் ஆற்றல் வெளிப்படும் போது தான் சந்தர்ப்பங்கள் எம்மைத் தேடி வருகின்றன. எம் கண்முன்னே விரிந்து கிடக்கும் இவ்வுலகில் சாதிக்க எவ்வளவுண்டு. எம் மனதுக்குள் ஒரு துடிப்பு இருக்கவேண்டும். வாழ்க்கையின் அர்த்தம் அந்த வாழ்க்கையில் வாழ்ந்த கணங்களின் பெறுமதி என்பது ஒவ்வொருவனுடைய சாதனையிலும் திறமையிலும்தான் வெளிப்படுகிறது. சாதித்துத்தான் சாக வேண்டும் என்பதை விட வாழ்ந்து கொண்டே சாதிப்பது என்பது இன்னும் எத்தனை பரந்த சிந்தனை.

எம்மை நாமே சரியாக மதிப்பிடும் போது அதனைக் கொண்டு நாம் பெறுபேற்றைக் காண முடியும். என்னால் இது முடியுமா என்பதை விட இதனைச் செய்ய முயற்சிப்போம் என்பது சாதனைக்கான முதல்படி அல்லவா. பாருங்கள் சாதனையாளர்கள் எத்தனையோ தோல்வியை சந்தித்திருப்பார்கள். தோல்விகள்தான் படிப்பினைகள் என்று எண்ணுவதால் தான் இன்று வெற்றி என்ற வரலாறு பதிவாகிறது. ஓர் சிந்தனையை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எந்த்வொரு மனிதனும் சாதனையாளராகப் பிறப் பதில்லை. அவன் உருவாகின்றான் உருவாக்கப்படுகின்றான். நண்பர்களே வாழ்க்கையில் வெற்றிகளை அடைய நாம் சாதிக்க வேண்டும். சாவிலும் சாகாதது சாதனை அல்லவா?

**ஈழவிழி**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



**சமையல் குறிப்பு**

## தயிர்ச்சாதம்

**தேவையான பொருட்கள்:-**

அரிசி -1 சுண்டு
(வெள்ளைப்பச்சைஅரிசி அல்லது சம்பா அரிசி)
கட்டித்தயிர்-1 கப்
பச்சைமிளகாய்-4
கடுகு -1 தேக்கரண்டி
கறிவேப்பிலை - அளவாக
நல்லெண்ணெய்-1 மேசைக்கரண்டி
இஞ்சி -சிறியதுண்டு
உப்பு - அளவாக

**செய்முறை:-**

* அரிசியை பதமாக வேகவைத்து இறக்கவும்.
* சாதம் இளஞ்சூடாக இருக்கும்போதே தயிரையும் உப்பையும் சேர்த்து நன்கு கடையவும்.
* சாதத்துடன் கறிவேப்பிலையையும் பச்சையாகச் சேர்த்து நன்கு கிளறி அமர்த்தி மூடி விடவும்.
* பச்சைமிளகாய், கடுகு, இஞ்சி யாவற்றையும் நல்லெண்ணெயிற் தாளித்து சாதத்துடன் சேர்த்துக் கிளறிக்கொள்ளவும்.

இளஞ்சூட்டுடன் தேவையானால் தளிசைகளும் செய்துகொள்ளலாம்.




## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—48**

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# புரொபலின் கல்விச் சிந்தனைகள்




**குழந்தைக்கல்வி பிறந்தவுடனேயே தொடங்கப்படவேண்டும். குழந்தையிடம் காணப்படும் இயற்கையான இயல்பூக்கங்கள் அதற்கேற்றவகையில் வளர்ச்சிக்கப் படாவிட்டால் நல்ல பயன்களை எதிர்பார்க்க முடியாது. கல்வியின் நோக்கம் வாய்மையும் புனிதமும் புரையின்மையும் ஆகும். இதன் விளைவாகவே பாடசாலைக்கு முன் குழந்தையின் கல்வியை வலியுறுத்துகின்றார்.**

இன்றைய குழந்தைக்கல்விச் சிந்தனையாளர் வரிசையில் புரொபலின் கல்விச்சிந்தனைகள் முக்கியத்துவமானவை. மேலைத் தேய கல்விச் சிந்தனையாளர் எனும் ரீதியிலும் இவர் குழந்தைக் கல்வி உலகத்திற்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்றார். குழந்தைகளிடத்து அவர் செலுத்திய அவதானமே இதற்குக் காரணமாக அமைகின்றது. இவரது சிந்தனை வெளிப்பாடுகள் இயற்கையின் பிறப்பிடமாக அமைந்திருந்தன.

குழந்தைப்பருவத்தின் ஆக்கத்திறன் (Creativeress of Child Hood) என்பது புரொபல் கண்ட முதன்மையான கல்வித் தத்துவமாகும். குழந்தைப் பருவமானது கட்டிளமைப்பருவத்திற்கு தயார் செய்வதோடு மட்டுமன்றி அது தனக்குள்ளே ஒரு விழுமியமாக மாறி பல்வகை ஆக்கத்திறன்களைக் கொண்டதாகும். எனவே கட்டிளமைப் பருவத்தினர் தன்னை உயர்ந்தவராகக் கொண்டு குழந்தைப் பருவத்தின் வாழ்க்கை நிலைமையில் தலையிடாது வழிகாட்டும் தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மனிதனிடத்தில் உள்ள பாசம் என்ற உணர்வின் மூலம் குழந்தை பிற்காலத்தில் தான் அடையப்போகும் பிரபஞ்சத்தின் ஒற்றுமை என்ற கருத்தை உணர்ந்து கொள்கின்றது.

புரொபலின் கல்வித்தத்துவத்தில் இன்னொரு முக்கிய அம்சம் விளையாட்டு எண்ணக்கரு (concept of play) ஆகும். வேற்றுமையில் ஒற்றுமை எனும் வெளிப்பாட்டினை விளையாட்டு என்ற எண்ணக்கருவின்மூலம் வெளிப்படுத்தமுடியும் எனக்கூறுகின்றார். விளையாட்டு குழந்தையின் உடல்,உணர்வு,ஆய்வறிவுத் தன்மைகள் என்பவற்றைப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் உணர்ந்துகொள்ள உதவுகின்றது. விளையாட்டு, கவனம்-ஓய்வு; நோக்கம்-சுதந்திரம்; சட்டம்- சுதந்திரம் ஆகிய அம்சங்களுக்கிடையே இணைப்பைக்காண்கிறது.

குழந்தைக்கல்வி பிறந்தவுடனேயே தொடங்கப்படவேண்டும். குழந்தையிடம் காணப்படும் இயற்கையான இயல்பூக்கங்கள் அதற்கேற்றவகையில் வளர்ச்சிக்கப்படாவிட்டால் நல்லபயன்களை எதிர்பார்க்கமுடியாது. கல்வியின் நோக்கம் வாய்மையும், புனிதமும், புரையின்மையும் ஆகும். இதன் விளைவாகவே பாட்சாலைக்கு முன் குழந்தையின் கல்வியை வலியுறுத்துகின்றார்.

புரொபலின் கல்விச் சிந்தனைகள் குழந்தைகள்விடயத்தில் முக்கியததுவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

* மானிடக்கல்வியானது சமயம், இயற்கை, மொழி ஆகிய மூன்றினதும் உள்ளார்ந்த ஒற்றுமையைப் புரிந்துகொள்ளாதவிடத்து பாடசாலையும் நாமும் எல்லையற்ற பொய்மையிலும் சுய தூண்டுதலின் பன்மைத் தன்மையிலும் நன்மை யிழந்து விடுகின்றோம். வேற்றுமையில் ஒற்றுமை காணும் உணர்வை வளர்த்தலாகும்.

* குழந்தை தானே செயற்படும் (Self activity) முறைக்கு முதன்மை அளித்தல் வேண்டும்.

* குழந்தையின் கல்வி வளர்ச்சி விளையாட்டின்மூலம் நடைபெறவேண்டும்.

* சுதந்திரமான சூழ்நிலையில் குழந்தையின் கல்வி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். சுதந்திரம் என்பது இங்கு குழந்தை தனக்குத்தானே விதிக்கும் சுயகட்டுப்பாடாகும்.

* கல்வி குழந்தையின் இயற்கைத்தேவை என்பவற்றிற்கு உடந்தையாக இருத்தல் வேண்டும்.

* பாட்டுக்கள், அபிநயம், உருவமைப்பு என்பன குழந்தையின் கற்பனையைத் தூண்டும் கருவிகளாகக் கொள்ளப்பட வேண்டும்.

* கல்வியின் தொழிற்பாடு மனிதனுக்கு வழிகாட்டுதலாகும். ஆண்டவன், இயற்கை அவற்றின் மனிதத்தன்மை என்பன புனித வாழ்க்கையின் இலட்சியங்களாக மாற கல்வி வழிகாட்டவேண்டும்.

* புரொபல் குழந்தைகளுக்கான பாடசாலையை "குழவிப்பூங்கா" எனும் எண்ணக்கருவாக இனம் காண்கின்றார். இங்கே ஆசான் தோட்டக்காரன், மாணவன் இளம்பயிர் (Tender Plants) ஆசிரியன் தோட்டக்காரனைப்போன்று அம்மனித தாவரத்தைப் பராமரித்து, நீரூற்றி அழகுற வளர்த்து முதன்மையடையச் செய்கின்றான். ஒரு தாவரம் தனக்குள் இருக்கும் விதையின் தன்மையைப் பொறுத்து வளர்வதைப்போல குழந்தையும் தனக்குள் இருந்தே வளர்கின்றது.

சுய தொழிற்பாடு, மலர்கின்ற இளமைப்பருவத்துக் கல்வி மகிழ்ச்சிகரமானதாக அமைய வேண்டும். தமக்கென சொந்தமான இயற்கைத் தன்மையினையும் சொந்த உலகத்தையும் உருவாக்கி இரண்டையும் இணைத்து அவற்றின் மீது ஒருமைப்பாட்டினைக் காண்பதாகும்.

விளையாட்டு என்பது தூய்மையானதும் ஆத்மீக செயற்பாடு உடையதாகவும் அமைதல் வேண்டும். அது மகிழ்ச்சி, சுதந்திரம், திருப்தி, அமைதி என்பனவற்றுக்கு உதவும். விளையாட்டுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட நிச்சயமான ஓர் இலட்சியத்துடன் அமைதல் வேண்டும். விளையாட்டுப் பொருள்களாக மென்மையான பந்து, கோளம், கனவடிவம், உருளை, வர்ணம் பூசிய மரச்சட்டம் என்பன காணப்படுகின்றன.

பாட்டு, அபிநயம், அமைப்பு இம் மூன்றிற்குமிடையே உடல் ரீதியான தொடர்புகளை புரொபல் காண்கின்றார். பாடல் பின்னர் அசைவுகளாகவோ அபிநயமாகவோ மாறுகின்றது. இதுவே உள்ள விருத்தி, உறுப்பு, தசை நார் என்பவற்றுக்குப் பயிற்சி அளிக்கின்றது.

புரொபலின் குழந்தைக் கல்வி பற்றிய கருத்துக்கள் பல நாடுகளில் இன்று பின்பற்றப் படுவதனைக் காணலாம்.

புரொபல் குழந்தைகளுக்காக வாழுமாறும் குழந்தைகளை நேசிக்குமாறும் அழைக்கின்றார். குழந்தைகளுக் குரிய பாடசாலைகள் சிறைச் சாலைகளல்ல. குழந்தைகள் அமைதியாகக் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுமல்லர். சமுதாயத்தின் மத்தியில் குழந்தைகள் பற்றிய கல்வி உணர்வு நிலையில் செயற்படவேண்டும்.

பாலர் கல்வியில் தேவையான மாற்றங்கள் ஏற்படுத்தினால் ஒழிய கல்வியில் பெறுமதியான தாக்கங்கள் ஏற்படுத்த முடியாது. மனிதன் சமூகமாக வாழ்ந்துதான் தனக்குரிய தனியான குணச்சிறப்பைப் பெறுகின்றான். சமூக உறவுகளில் சரியானமுறையில் போதனை அளிப்பதற்கு சிறந்த இடம் பாடசாலையாகும்.

புரொபலின் குழவிப் பூங்கா ஒரு சிறிய உலகம் என்ற கருத்தையொட்டி Highes என்பவர், எனது பாலர் பாடசாலை சிறியதோர் உலகம் அங்கே பொறுப்புக்கள் எல்லோராலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. தனிமனித உரிமைகளுக்கு மதிப்புக்கொடுக்கப்படுகின்றன. சகோதர எண்ணக்கரு வளர்க்கப்பட்டு தூண்டுதல் இல்லாத கூட்டுறவு மனப்பாங்கு வளர்க்கப்படுகின்றது என்று கூறுகின்றார்.

பாடசாலைச் செயற்பாட்டில் விளையாட்டின் வழிகள் என்ற கருத்தை புரொபல் அறிமுகப்படுத்தியிருந்தார். எமது பாலர் கல்விமுறைமைகள் இன்று பாடல்கள், அசைவுகள், அபிநயம், நாடகம், கைவினைகள் மூலமே கற்பித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். புரொபல் குழந்தைகளுக்காக வாழ்ந்து அவர்களுக்காகப் பணிபுரிந்து அவர்களுக்காகவே மடிந்தவர். குழந்தைகள் மீது ஆழமான அன்பும் அனுதாபமும் கொண்டவர். இதனாலேயே குழந்தையின் இயற்கை நிலையை உணர்வுகளை ஆர்வங்களை அறிவதில் உள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

குழந்தைகளின் உணர்வுகளை வளர்ப்பதற்கு வெகுமதிகளின் அவசியத்தை புரொபல் வலியுறுத்துகின்றார். இதன் மூலம் வடிவம், உருவம், நிறம், எண் பற்றிய கருத்துக்களை குழந்தைகளுக்கு கொடுக்க முடியும்.

கல்வியின் சுயசெயற்பாட்டினை ஏற்றுக்கொண்ட முதற் கல்வியியலாளர் புரொபலேயாகும். இன்றைய கல்வியின் நோக்கமும் செய்வதன்மூலம் கற்றலேயாகும்.

குழந்தையின் இயல்பு நிலைக்கேற்ப பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் கடமை புரியும் ஆற்றல் பெண்களுக்கேயுரியது எனும் நிலைமை புரொபலின் சிந்தனையில் காணப்படுகின்றது. இது பலராலும் ஏற்கப்படுகின்றது.

சிறுவர் கல்வியில் குழந்தை உலகம் புரொபலின் கல்விச் சிந்தனையை மறக்க இயலாது. இவரது கல்விச் சிந்தனைகள் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்கு அளப்பரிய பங்காற்றியுள்ளன என்பதைக் குறிப்பிட்டுக்கூறலாம். ●

# நாடகத்தின் மோகம் குறைந்து வருகிறது

பேர்மினஸ்

நாடகம் மனித நேயத்தை வளர்க்கும் சிறந்த தொடர்புசாதனம். ஒரு நடிகன் நாடகத்தில் சிறந்த நடிகனாகத் தான் வரமுடியாதுவிட்டாலும் சமூகத்தில் நல்ல மனிதனாக வாழமுடியும். நாடகத்தின் ஊடாக நல்ல மனித மனங்களை பார்ப்பதுடன் அவற்றை சம்பாதிக்கவும் முடியும். முழுமையான மனிதர்களினால் அரங்குகளிலேயே நடிக்கமுடியும். வாழ்க்கையில் அல்ல. இவ்வாறு கூறுகிறார் நாடக, திரைப்பட நடிகர் கிறகொரி பிலிப் பேர்மினஸ் (கி.பி.பேர்மினஸ்)

அரை நூற்றாண்டாக நாடகத்துறையில் பல பரிமாணங்களில் பிரகாசித்துவரும் கலைஞர் நாட்டுக்கூத்து, இசை நாடகம், திரைப்படங்களில் தன் தனித்துவத்தை நிலை நிறுத்தி கலைத்துறைக்கு பெரும் பணியாற்றியுள்ளார். தொடர்ந்து பணியாற்றி வருகிறார். கலைத்துறை ஆவணங்களை பலவருடங்களாக சேகரித்து பாதுகாத்து வரும் கலைஞர் ஆவணங்களின் மூலப்பிரதிகளை வைத்துள்ளமை தேடலின் வீரியத்தை உணரவைக்கின்றது.

கலைத்துறைசார்பான ஆக்கங்களை அவ்வப்போது எழுதிவரும் கி.பி. பேர்மினஸ் நடிகராக, நெறியாளராக ஒப்பனை உடைஅமைப்பாளரா, ஆவணக்காப்பாளராக கலைத்துறைக்குப் பணியாற்றிவருகிறார். ஓய்வுபெற்ற சிறைச்சாலைத் திணைக்கள சிறை அதிகாரியான கி.பி.பேர்மினசை நேர்காணலிற்காக அவரது இல்லத்தில் சந்தித்தோம். அவர் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை வாசகர் முன் வைக்கிறோம்.

**நாம்:-** உங்களது அரங்கப் பிரவேசம் பற்றி....

**கி.பி.பேர்மினஸ்:-** நாட்டுக் கூத்துக் கலைஞரும் எனது மாமனாருமான லோவுறேஞ் மூலமாக இத்துறையில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது 1956 ஆம் ஆண்டு "ஒரு புகையிரத நிலையம்" என்னும் நாடகத்தில் புனித பத்திரிசியார் கல்லூரியில் என் கலைப் பயணம் ஆரம்பமாகியது. இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியினை மிகப் பிரமாண்டமாக 1957 ஆம் ஆண்டு



கல்லூரியில் மேடையேற்றினர். தமிழில் முதலில் மேடைகண்ட இவ் நாடகத்தில் பாத்திரமேற்று நடித்தேன். செல்வராஜா மாஸ்ரர் ஆம்ஸ்ரோங் போன்றவர்கள் மேற்படி நாடகத்தை நெறிப்படுத்தியமை குறிப்பிடப்படவேண்டும்.

நான் பாடசாலை வாழ்வை முடித்துக்கொண்டு சமூக அரங்குகளில் நுழைந்து சமூகத்தை நல்வழிப்படுத்தும் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தேன். என் நாடகப் பயண ஆரம்பத்தில் பயணித்தவர்களாக அல்பிரட், ஜெயசிங்கம், யேசுதாசன், டானியல் போன்ற பலரை குறிப்பிடலாம். "மனிதன் மாறி விட்டான்" "எங்கே நிம்மதி" "கூடப்பிறந்தான்" "இதுவும் சரிதானா" என பல நாடகங்களில் நடித்தேன். இவற்றில் அநேகமாகப் பேசப்படும் பாத்திரங்களில் தோன்றி நாடகங்கள் முடிந்த பின்னரும் பாத்திரப் பெயர்களால் அழைக்கப்பட்ட சுவையான சம்பவங்களும் உண்டு.

"அன்ரனியோ" என்ற இத்தாலிய படத்திற்கு பின்னணி குரல் கொடுத்ததுடன் அருட்கலாநிதி மரிய சேவியருடன் நட்பு கிடைத்தது. 1965 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை மரிய சேவியர் அடிகளாருடன் கலைப்பணி யாற்றிவருடன், அடிகளார் திருமறைக்கலாமன்றத்தை ஆரம்பித்து கலைப்பணியாற்ற அதன் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகிறேன் என தன் இளமைக் கால நாடக அனுபவங்களை சுவைபட பகிர்ந்தவரிடம்.

**நாம்:-** சிறைச்சாலை அதிகாரி என்ற வகையில் அனுபவத்தை....

**கி.பி பேர்மினஸ்:-** சட்டத்திற்கு முன் யாவரும் சமம். இருந்தபோதிலும் சட்டத்தின் பின்னால் பல நிரபராதிகள் உள்ளனர் என்பது அனுபவரீதியான உண்மை. வெலிக்கடை, மாத்தறை சிறை, யாழ்ப்பாணச் சிறைகளில் பணியாற்றிய போதும் நாடக ஆர்வம் என்னை விட்டு வைக்கவில்லை. சிறைக் கைதிகளைக் கொண்டு நாடகம் போட்டால் என்ன என்று தோன்றியது. 1965 ஆம் ஆண்டு "சங்கிலியன்" என்ற நாடகத்தை தமிழ்க் கைதிகளைக் கொண்டு மேடையேற்றினேன்.



கைதிகளோடு கைதியாக இருந்து பாதிக்கப்பட்டு மனஉளைச்சலோடு இருந்தவர்களின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டு அவர்களது பூரண ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக மேடையேற்றினேன்.

யாழ்ப்பாணச்சிறைக் கைதிகளைக் கொண்டு 1977 ஆம் ஆண்டு "சீர் திருந்திய கைதி" என்ற நாடகத்தை வீரசிங்கம் மண்டபம், குருநகர் அரங்கு ஆகிய இடங்களில் மேடையேற்றினேன். இதுவும் பெரு வெற்றிபெற்றது. கைதிகளை வெளியே கொணர்ந்து அவர்களை நடிகர்களாக மக்கள் முன் வைத்த பெருமை என்னையே சாரும். இன்றைய நிலையில் இவற்றை செய்ய முடியாது. இடவசதிகளும் போதுமானதாக

இரா-வின்

இல்லை என தன் பெருமிதத்தைக் கூறியவரிடம்.

**நாம்:-** நாடக அரங்கக் கல்லூரியில் இணைந்து செயற்பட்டதாக கூறப்படுகிறது இது பற்றி....

**கி.பி. பேர்மினஸ்:-** முது பெருங்கலைஞர் கலையரசு சொர்ணலிங்கத்தின் ஆசியுடன் தாசீசியஸ், குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியில் நண்பர் பிரான்சிஸ் ஜெனத்துடன் சேர்ந்து இணைந்து கொண்டேன். ஒரு வருட கலைப் பயிற்சியைப் பெற்று கல்லூரியின் தயாரிப்பு நாடகங்களில் நடித்துள்ளேன். நாடக அரங்கக் கல்லூரியில் நல்ல நடிகர்களுடன் பழகி அவர்களுடன் நடிக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மஹாகவியின் "கோடை" தாசீசியஸின் "பொறுத்தது போதும்" (சனாதிபதி விருது நான்கினை தனதாக்கியது) குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "கூடிவிளையாடு பாப்பா" "உறவுகள்" கலாநிதி மௌன குருவின் "சங்காரம்" கவிஞர் முருகையனின் "வெறியாட்டு" ஆகிய நாடகங்களில் நடித்து பல அனுபவங்களைப் பெற்றேன்.

நடிகனிற்கு களப்பயிற்சி மிகமிக அவசியம் என்பதையும் உணர்ந்து கொண்டேன். களப் பயிற்சியில் உடல்உள குரல் பயிற்சிகளை முழுமையாக பெற்றால் அது நடிகனிற்கு நாடகத்தில் மட்டுமன்றி அவனது வாழ்க்கைக்கும் பெருதவியாக அமையும் என்பது என் வாழ்க்கையூடாக நான் உணர்ந்து கொண்டுள்ளேன் என தனது அனுபவங்களினூடாக தன் இளமைக் காலத்தை மீட்டுப் பார்த்தவரிடம்.

**நாம்:-** திருமறைக்கலா மன்றத்தின் கலைப்பணியில் உங்கள் பங்களிப்பு எவ்வாறு....

**கி.பி.பேர்மினஸ்:-** நடிகராக அறிமுகமாகி பல மேடை நாடகங்களில் நடித்துள்ளேன். தொடர்ந்து நடித்துவருகிறேன். அமைப்பு ரீதியாக பலவேறு பொறுப்புகளை ஏற்று மன்ற வளர்ச்சிப் பணியில் பங்காற்றியதுடன் இப்பொழுது கவின் கலைப்பயிலக அதிபராக செயலாற்றி வருகிறேன். மன்றத்தின் பிரமாண்டமான படைப்பாக தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அரங்கேறும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியில் நடிகராக நெறியாளராக செயற்பட்டு வருகிறேன். மூவின கலைஞர்கள் பங்குகொண்ட மௌன நாடகமான அசோகா,தர்ஷனா போன்ற பல நாடகங்களில் நடித்துள்ளேன் என தனது நாடக கதாபாத்திரங்களைக் கூறி அவற்றின் ஒளிப்படங்களை சான்றாக காண்பித்தவரிடம்.

**நாம்:-** மேடை நாடக நடிகராக இருந்த நீங்கள் நெறியாளராக திரைப்பட நடிகராக பரிமாணித்தமை....

**கி.பி பேர்மினஸ்:-** நாடக அரங்கக் கல்லூரியில் பெற்ற பயிற்சியுடன் மரிய சேவியர் அடிகளாரின் அரவணைப்பில் வளர்ந்தமையால் அவரால் என்னை இனம் காணப்பட்ட மறுபக்கமே நெறியாளர். கப்புத்தளை, பதுளை,மன்னார், ஆட்காட்டிவெளி,முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு, அளம்பில் ஆகிய இடங்களில் திருப்பாடுகளின் காட்சியை நெறியாள்கை செய்ததுடன் மன்ற அரங்கிலும் என் நெறியாள்கையில் பலநாடகங்கள் அரங்கேறின. "சங்கிலியன்" "சீர்திருத்திய கைதி" "சத்தியத்தின் தரிசனங்கள்" "ஒரு தேடல்" சாகாதமனிதன் போன்ற நாடகங்கள் குறிப்பிடும் படியானவை.

அசோக்கா ஹந்தகமவின் "இவ்வழியால் வாருங்கள்" என்ற திரைப்படத்தில் நடித்ததுடன் தர்மசிறி பத்திராஜாவின் நெறியாள்கையில் இவ்வருட இறுதியில் வெளிவரவுள்ள திரைப்படத்திலும் நடித்து வருகிறேன் என சற்று உற்சாகமாக பதிலளித்தவரிடம்.

**நாம்:-** இந்திய ஐரோப்பிய கலைப்பயணங்கள் தொடர்பாகக் கேட்டபொழுது.....

**கி.பி. பேர்மினஸ்:-** 1973 ஆம் ஆண்டு இந்திய திருச்சி தேவர் அரங்கில் களங்கம் பலிக்களம் ஆகிய நாடகங்களை மரிய சேவியர் அவர்களுடன் நடித்தோம். 1997, 1998 ஆண்டுகளில் வடலிக் கூத்தர் என்ற பெயரில் ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், ஹொலண்ட், லண்டன் ஆகிய இடங்களில் பல்வேறு அரங்க நிகழ்வுகளை




நடாத்தி நம்மவரை மட்டுமன்றி வெளிநாட்டவரையும் மகிழ்வித்தோம் என புலம் பெயர் ஈழத்தமிழரின் பெருமைகளையும் நாடக முயற்சிகளையும் கூறிய வரிடம்.

**நாம்:-** நாடகத்தின் இன்றைய நிலை தொடர்பாக கேட்ட....

**கி.பி பேர்மினஸ்:-** சமூகத்திற்கு தேவையான பிரச்சினைகளை மையப்படுத்தியதான நாடகங்களைப் போட வேண்டும். இதற்கு ஒவ்வொரு இடத்திலும் நாடகமன்றம், நாடக மேடைகள் வேணும். கிராம ரீதியாக நாடகங்கள் மேடையேற்றப்பட வேண்டும். இதற்கான அரங்குகள் இல்லை. மண்ணின் விடுதலைக்கான நாடகங்களை மக்கள் முன் கொண்டுவரவேண்டும். நாங்கள் சுதந்திரமாக இயங்கி நாடகங்கள் செய்ய வேண்டுமென்றால் விடுதலையை வென்றெடுப்பதற்கான கருத்துக்களை வெளிக்கொணர்வது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது.

(20 ஆம் பக்கம் பார்க்க..)

# 18 ஆம் ஆண்டு நினைவு தினம்



தாயின் மடியில்
22 - 12 - 1956

தாயக மண்ணில்
20 - 05 - 1987

# லெப்.கேணல் ராதா

எம் எண்ணமெல்லாம் நீதான் ராதா
உன் வண்ணமுகம் இனி வராதா
பண்பாடுகின்றோம் உனைநாம் ராதா
விண்காத்திடுவோம் உன்பெயரில் ராதா.

சிந்தும் சிரிப்பினில் கொள்ளையிடும் ராதா
பண்பும் பாசமும் நிறைந்த எம் ராதா
குண்டு தாக்கிய நெஞ்சினன் ராதா
குன்றா உறுதியின் உறைவிடம் ராதா.

மங்காப்புகழுடன் மாண்ட எம் ராதா
மாசில்லாப்போர் வீரம் காட்டிய ராதா
வீசும் காற்றிலும் நிலவிடும் ராதா
வீணாய்ப் போகாது உன் கனவு ராதா.

ராதா வான்காப்புப்படையணி.

(6155)

# மீண்டும் எப்போது வருவீர்கள்..!

சுனாமியால் கடலோர வாழ்வைத் துறந்து தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கள் எஞ்சிய வாழ்வை விரக்தியில் கழித்துக் கொண்டிருக்கும் மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் ஆற்றுப்படுத்துவதற்கான அரங்கச் செயற்பாட்டுப் பயிற்சிப்பட்டறை ஒன்றினை GTZ நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கியிருந்தது.

இப்பயிற்சிப்பட்டறையினை GTZ நிறுவன தொழில்நுட்ப ஆலோசகர் திரு.K. கந்தசாமி அவர்களின் பணிப்பில் அரங்கச்செயற்பாட்டுக்குழுவினர்களான பேராசிரியர் சிதம்பரநாதன், செ.விந்தன், மகிழ்ச்சிகரன், இளங்கோ ஆகியோரும் கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களும் நெறிப்படுத்தினார்கள். ஆற்றுப்படுத்தலுக்கான அரங்கச் செயற்பாட்டின் ஒத்திகையாகவும், முதலாவது ஆற்றுப்படுத்தல் செயற்பாடாகவும் வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறை இடைத்தங்கல் முகாமுக்கு எங்கள் ஆசிரியர்கள் குழு ஒரு புதன்கிழமை காலை 9.00 மணிக்குப் புறப்பட்டது.

ஒரு மினிபஸ்ஸிலும், GTZ பிக்கப்பிலுமாகப் பயணம் போனோம். அந்தப் பயணம் மிகப்பெரிய அனுபவமாகப் பின்னாளில் இருக்கப் போவதை யாரும் அறிந்திருக்காத பயணமாக அது இருந்தது. கிளிநொச்சியில் இருந்து புறப்படும்போதே எனக்கு மனசு குழம்பியபடி இருந்தது. ஆற்றுப்படுத்தப்போகிறோம். ஆனால் ஆற்றுப்படுத்துவதென்பது சாதாரண விடயமா? அல்லது ஆற்றுப்படுவதென்பதும் சாதாரணவிடயமா? சொத்துக்களை இழந்து தாய்தந்தையை, கணவனை, மனைவியை, பிள்ளைகளை, சகோதரர்களை என்று எவ்வளவு உறவுகளை அலையில் கொடுத்துவிட்டு முகாம்களில் அரற்றியும், பிதற்றியும், அழுகையும், ஓலமுமாக வாழும் அந்த ஜீவன்களை ஆற்றுப்படுத்துவதென்பது சாதாரண விடயமா? மனசு எனக்குக் குழம்பியபடியே இருந்தது.

மினிபஸ் தாளமும் பாட்டுமாக நிரம்பி வழிய நான் என்னிருக்கையில் அதையே எண்ணியபடி தனித்திருந்தேன் அமைதியாக.

உடுத்துறை முகாம் நான் நினைத்திருந்ததைவிட பெரிய முகாமாகத் தானிருந்தது. எங்களில் முப்பத்தாறுபேரும் யாழ்ப்பாண அரங்க செயற்பாட்டுக்குழுவில் இருந்து வந்த செல்ரனும், சிவநாதனுமாக முப்பத்தெட்டுப் பேர் முகாமில் இறங்கினோம். விந்தன் சேறும், மகிழ்ச்சி சேறும், இளங்கோ சேறும் எங்களை அணி பிரித்தனர். தெருவின் இடது புறம் அரைவாசிப்பேரும், தெருவின் வலதுபுறம் அரைவாசிப்பேருமாக அணி பிரிந்தோம். பிறகும் சிறுவர்களோடு பழகி அவர்களோடு விளையாடி மகிழ்விப்பது ஒரு அணியெனவும் ஆண்களோடு கதைத்து அவர்களுடைய மனச்சுமையைப் பகிர்ந்துகொள்வது ஒரு அணியெனவும், பெண்களோடு கதைப்பது இன்னொரு அணியெனவுமாகச் சிறுசிறு குழுக்களாக பிரிந்து நடந்தோம். மணலில் கால் புதைத்து நடக்கும்போது பழைய ஞாபகங்கள் என்மனசில பிம்பங்களாய் நிழலாடின.



சின்னவயதில் சிலாவத்தைக் கடற்கரைக்குப்போவதற்கு வீட்டில் இருந்து 2 கிலோமீற்றர் தூரம்வரை நடந்துபோவோம். தூரத்தில் கடல்

**முல்லைக்கோணேஸ்**

நிலம் கண்களில் தெரிய மணலில் கால் 'சறுக் சறுக்' கென்று புதைந்து புதைந்து எழ எழ ஓடுவோம். கால்களில் சிப்பியும் ஊரியும் அழுந்தக் குருவிப் பாய்ச்சல் பாய்வோம். இராவணன் மீசைப் புல்லு கால்களில் குத்தாமல் விலத்தி ஓடுவதற்கும் அந்தச் சின்ன வயதிலும் எனக்குத் திராணி இருந்திருக்கிறது என இப்போதும் நினைக்கப்பெருமையாக இருக்கும். கரையைத் தொடும் முன்னர் நிலத்தில் படர்ந்த பெயர் இன்னதென்று நான் இன்னமும் அறிந்திராத அந்தப் பச்சைக் கொடியும், ஊதா நிறப் பூவும் படர்ந்திருக்க அது தாண்டிப் பாய்வோம். அலை கோபம் கொண்ட பாம்பெனச் சீறியெழ ஆசையோடு கண்களுக்குள் அத்தனை அழகையும் இழுத்து இரசித்த வண்ணம் கரையில் நின்றிருப்பேன். கடல் ஆனந்தமானதாகவும் ஆண்டவனுடைய அற்புதமான சிருஷ்டியுமானதாகவும் அப்போது எனக்கது இருந்தது.

நானும் டிலானும் ஒரு ஊடு பார்த்து நடந்துபோனோம். எதிரில் மாபிள் அடித்துக்கொண்டிருந்த சிறுவர்கள் மூவரைக் கண்டதும் நாங்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டோம். ஆரம்பத்தில் எங்களைச் சேர்க்கத் தயங்கினார்கள். பிறகு விளையாடிவிட்டுப் போகப்போகிறோம் என்று கூறும்போது விடமுடியாது என்று கையைப் பிடித்து இழுத்தார்கள். "அப்ப உங்கட விளையாட்டை நாங்கள் விளையாடினோம். எங்களுக்குத் தெரிந்தவிளையாட்டை நாங்கள் இப்ப உங்களுக்குக்காட்டித்தரப்போறம் வாறீங்களோ?" என்றுகேட்க,"ஓம். ஓம்" என்று எங்கள் இருவரின் கையைப் பிடிச்சுத் தொற்றினார்கள். அப்படியே அவர்களை அழைத்துக் கொண்டு போக கவிதா கொஞ்சப் பிள்ளைகளோடு மரநிழல் ஒன்றில் கதைசொல்லிக்கொண்டிருந்தாள். அவளோடு போய் நாங்களும் சேர்ந்துகொண்டோம்.

கடலோர வெயில் தகித்தது. வியர்வை பிசுபிசுவென்று மேலெல்லாம் ஓடியது. முகாம் விட்டு வரிசையில் மேல் வெயில் அலைந்தது. கதை கேட்க ஏராளமான குழந்தைகள் சுற்றிவளைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு முகம்களும் தங்கள் துயரங்களை மறந்து கதை கேட்பதில் லயித்துச் சந்தோசிப்பது அவர்கள் ஒவ்வொருவரது முகம்களிலும் தெரிந்தது. கவிதா கதை சொல்ல டிலானும் நானும் கதைப் பாத்திரங்களாக மாறி நடிக்க கைதட்டலும், ஆரவாரமும் எழுந்தது. இந்தச் சத்தம் ஓங்கி ஒலிக்க இன்னும் சிறுவர்கள் வந்து சேர்ந்துகொண்டார்கள்.

(22 ஆம் பக்கம் பார்க்க..)


---

# கிளிநொச்சியில் கிரிக்கெற்—ஒரு நோக்கு

நீண்ட பெரும்காலமாக கிளி மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகள் முழுமையான வெற்றியை அடையவில்லை என்றே கூற வேண்டும். அதற்குப் பல காரணங்கள் இருந்தபோதும் முக்கியமாக அரசியல், இராணுவ நடவடிக்கைகளால் மாணவர்கள் நிலையான இருப்பிடத்தையும் மாற்றவேண்டியதுடன் பல நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

குறிப்பாக வன்னிப் பெரு நிலப்பரப்பில் கிளிநொச்சி மாவட்டம் பல முக்கிய அம்சங்கள் கொண்டவையாகக் காணப்பட்டபோதும் இன்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டே வருகின்றனர். அதிகம் கல்விச் செயற்பாடுகள் முன்னேற்றம் கண்டபோதும் அனைத்திலும் மேலான அம்சங்களைக்கொண்ட விளையாட்டுத்துறைச் செயற்பாட்டில் பெரும் பின்னடைவாகவே உள்ளது. இருப்பினும் சற்று வேறாக நோக்கின் சிறுவர்களின் கிரிக்கெற் வரலாற்றை கிளி.மாகாவித்தியாலயம், கிளி.மத்திய கல்லூரி என்பன பெரும் சவாலை எதிர்நோக்கி முன்னேற ஆரம்பித்துள்ளன.

கிரிக்கெற் விளையாட்டை நோக்குமிடத்து மிகப்பெரும் பொருளாதாரத்தை செலவு செய்தே அதன் ஆரம்பகட்டத்தை தாண்ட வேண்டியுள்ளது. ஆனால் பெரும் பொருளாதாரத்தை செலவுசெய்யும் அளவிற்கு தாயகப்பிரதேசத்தில் உள்ள எந்த தமிழ்ப் பாடசாலைகளும் இன்று இல்லை. இதை வளர்த்தெடுக்கும் நோக்கில் தென்னிலங்கை கல்வி அமைச்சோ அல்லது விளையாட்டு அமைச்சோ இனிவரும் காலங்களிலாவது அக்கறை செலுத்துமா என்பது பெரும் கேள்வியாகவே உள்ளது? இருந்தாலும் கிரிக்கெற் விளையாட்டுக்கு அமைவாக மைதானம் ஒன்றைக்கூட அமைக்கும் அளவிற்கு கிளி.மாவட்டப்பாடசாலைகள் இல்லை. அத்துடன் சிறுவர்கள் ஆர்வத்துடன் கிரிக்கெற் போட்டிகளில் ஈடுபடும் அளவிற்கு அவர்களின் ஆற்றல் காணப்பட்டுவருகின்றது. இதனை ஊக்குவிக்கும் நோக்கில் கிளி. மாவட்ட விளையாட்டுத்துறையால் மைதான வசதிகள், விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டதுடன் கிளி. மகாவித்தியாலயம் விரைவாக தனது பயிற்சியில் களமிறங்கி பல போட்டிகளில் கலந்து கொண்டதுடன் முதன்மை மாவட்டங்களான யாழ், வவுனியா பாடசாலைகளுடன் நட்பு அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு அனுபவங்களையும் பெற்று அவர்களின் எண்ணம்



அணிகளின் பயிற்றுவிப்பாளர் திரு.அலன்



கிளி.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு.ராஜா

வளர்ந்துகொண்டே செல்கின்றது.

அத்துடன் இவர்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிவரும் அணிகளின் பயிற்றுவிப்பாளர் திரு.அலன் அவர்களை நினைவூட்டவேண்டிய தேவையுள்ளது. குறிப்பிட்ட ஒரு பாடசாலையுடன் மட்டும் நின்றுவிடாது அயல் பாடசாலையையும் முதன்மைக்கல்லூரியான கிளி.மத்திய கல்லூரி மாணவர்களையும் இணைத்து பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். தனி ஒரு சமூகத்தினரோடு நின்றுவிடாது எல்லா மாணவ சமூகத்தையும் இணைத்து கிளி. மாவட்ட மாணவர்களின் கிரிக்கெற் விளையாட்டை வளர்க்கும் நோக்கில் செயற்படுவதுடன் அவர் பாராட்டுக்குரியவ்ராகவும் உள்ளார். ஏனெனில் எத்தனையோ கிரிக்கெற் விற்பண்ணர் கள் இருந்தபோதும் யாரும் முன்வராத பட்சத்தில் வசதி வாய்ப்புக்களை காரணம் காட்டாது "நினைத்தது கிடைக்காது விட்டாலும் கிடைத்ததை வைத்து பெருமைப்படு" என்ற பழமொழிக்கு அமைவாக சிறுவசதிகளுடன் இவ்விளையாட்டின் பயிற்றுவிப்பாளராக விளங்குவது என்பது பெருமைக்குரியதே. இது இவ்வாறு இருந்தபோதும் இவ்விளையாட்டுக்குரிய மைதான ஏனைய வசதிகளை ஒழுங்குபடுத்திக்கொடுத்த கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு.ராஜா அவர்கள் குறிப்பிடுகையில்,

கிரிக்கெற் விளையாட்டு என்பது உலகின் புகழ்பெற்ற முதன்மை விளையாட்டுக்களில் ஒன்றாகக் காணப்பட்டபோதும் இருபது வருடங்களுக்கு மேலாக எமது சமூகம் விளையாட்டுத்துறையில் எந்தவித உயர்வும் இல்லாமல் மிகவும் கீழ்மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனவே தான் நாம் வேகமாக விளையாட்டுத்துறையிலும் உலகப் புகழ்பெற்ற விளையாட்டுக்களில் வளர்ச்சி காண வேண்டுமானால் கடின உழைப்பு அவசியமாகவுள்ளது. குறிப்பாக சிறார்களை வளர்த்தெடுப்பதன் மூலம்தான் எதிர் காலத்தில் நல்ல பெறுபேற்றை அடையமுடியும். அந்த வகையில்தான் எனது மாவட்டத்திற்குள் உட்பட்ட இரண்டு பாடசாலைகளையும் முதற்கட்டமாக வளர்த்தெடுக்க முயற்சிசெய்கின்றோம். அத்துடன் இனிவரும் காலங்களில் ஏனைய பாடசாலைகளிலும் இவ்விளையாட்டை வளர்த்தெடுக்க எம்மால் முடிந்த வசதிகளை எந்த வேளையிலும் வழங்கி விளையாட்டுத்துறையை வளர்த்தெடுப்பதே எமது கடமையாகும்.

அதேபோல் அணிகளின் பயிற்றுவிப்பாளர் ஆகிய திரு.அலன் குறிப்பிடுகையில், நான் விளையாட்டில் மிகவும் ஆர்வம் கொண்டவன். அத்துடன் கிரிக்கெற் எனது பிரியமான விளையாட்டு. அதை கிளிநொச்சி மாவட்டத்தில் வளர்த்து எடுக்கவேண்டும் என்பது எனது பேராவலாக இருந்தது. ஆனால், எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா என எண்ணியபோது விளையாட்டுத் துறையின் ஊடாக எனக்கு கிளி. மகாவித்தியாலய மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வாய்ப்புக்கிட்டியது. இதற்கு பாடசாலைச்சமூகமும் எனக்கு பெரும் ஒத்துழைப்பு நல்கின. என்னால் முடிந்தவரை விளையாட்டுத் துறையினருடன் இணைந்து பயிற்சி அளித்து வேறு மாவட்டங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று நட்புப்போட்டிகளை ஏற்படுத்தி அதன் ஊடாகவும் இவர்களை வளர்க்க வேண்டும் என்பதுடன் தனியொரு பாடசாலையுடன் மட்டும் நின்று விடாமல் கிளி. மத்திய கல்லூரியும் இணைந்து பயிற்சி அளித்து வருவதுடன் இவர்களை நல்ல வீரர்களாக வளர்த்தெடுப்பதற்கு என்னால் இயன்ற முழு உதவிகளை வழங்கி அனைவரின் எதிர்பார்ப்பையும் நிறைவு செய்வது எனது கடமை என நான் கருதுகிறேன்.

வன்னியில் கிளி.மாவட்ட பாடசாலையில் கிளி.மகாவித்தியாலயம், கிளி மத்திய கல்லூரி என்பன கல்வியில் முன்னோடியாக இருந்தபோதிலும் விளையாட்டுத் துறையிலும் தமது பாடசாலைகளை வளர்த்தெடுக்கவேண்டும் என்பதற்காக அரச அதிகாரிகளையோ அல்லது அமைச்சுக்களையோ நம்பி இராது தங்களால் முடிந்தளவு எல்லாச் சமூகத்தினருடன் தொடர்புகொண்டு அதற்கான வசதி வாய்ப்புக்களை சிறிது சிறிதாகத் திரட்டி மாணவர்களின் ஆர்வத்தை பெருகூட்டும் அளவில் பாடசாலைச் சமூகங்கள் காணப்படுவதுடன் பாடசாலையின் பெருமைக்காகவும் மாவட்டத்தின் உயர்வுக்கும் நல் ஒழுக்கத்துடன் மாணவச் சிறார்களை வளர்த்தெடுக்க வேண்டுமாயின் விளையாட்டுத்துறை மிக மிக முக்கியமாக அமைகின்றது. கிளி. மாவட்ட மாணவர்களின் கிரிக்கெற் விளையாட்டுக்கு பாடசாலைக் சமூகம், பெற்றோர், ஆர்வலர்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பு மென்மேலும் அதிகரித்துச் செல்லுமாயின் குறுகிய காலங்களில் விளையாட்டு ரீதியாக மாணவர்கள் பெரும் வெற்றியை ஈட்டித்தருவார்கள் என நாம் நம்புகின்றோம்.

**அ.நவா**

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமானது அவற்றுக்கான தீவனத்தைப் பெற்றுக்கொள்வதாகும்.

பண்ணையாளர்களின் . கால்நடைகள் இந்தப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக கட்டாக்காலிகளாக விடப்படுகின்றன. இந்த நடவடிக்கையானது கால்நடைகளுக்கு தீவனத்தை வழங்குகின்றதோ இல்லையோ விவசாயிகளுக்கும் ஏனையவர்களுக்கும் பெரிதும் இடையூறாக அமைந்து விடுகின்றன.

கட்டாக்காலி கால் நடைகளால் உண்டாகும் ஆபத்துகளை/சேதங்களை இங்கு விபரித்துக்கூற வேண்டிய தேவையில்லை.

கால்நடைகளுக்கான தீவனம் ஒரு பிரச்சினையாக



மாறியுள்ள இந்த வேளையில் அதற்கான தீர்வு அவற்றினை கட்டாக்காலிகளாக விடுவதன் மூலம் கிடைத்துவிட முடியாது.

இதற்கான தீர்வு ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒதுக்கப்பட்டுள்ள மேச்சல் தரைகளை கால்நடைப் பண்ணையாளர்கள் வளர்ப்போர் பயன்படுத்துவதன் மூலம் ஓரளவு கண்டுகொள்ளலாம்.

மேய்ச்சல் தரைகளை கால்நடை வளர்ப்போர் தத்தமது வசதிக் கேற்ப உருவாக்கிக்கொள்ளமுடியும். குறிப்பாக தரிசாக விடப்பட்ட நிலங்களில் புல்லு உற்பத்தியை மேற்கொண்டு மேய்ச்சல் தரைகளை உருவாக்கலாம்.

வசதியானவர்கள் தாம் வளர்க்கும் கால்நடைகளின் தொகைக்கு ஏற்ப தமது வளவுகளிலேயே தீவனமாகக்கொடுக்கக் கூடிய புல்லை உற்பத்தி செய்யமுடியும். இது தவிர தமது வளவின் வேலிகளில் இலை குழைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய மரங்களையும் நடுகை செய்து பராமரிக்கலாம்.

குறிப்பாக முள்முருக்கு, கிளிசறியா, இப்பிலிப்பில் போன்றவற்றை நடுகை செய்யலாம்.

கால் நடைகளுக்கான புல்லு உற்பத்தியை மேற்கொள்ள விரும்புகின்றவர்கள் அண்மையில் உள்ள காராளி செயற்கை முறைச்சினைப்படுத்தல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு வேண்டிய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

# குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுமா?



யாழ் மாவட்டத்திலுள்ள வலிகாமம் மேற்குப்பிரதேசத்தில் நன்னீர் உவர் நீராக மாறிவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய முடியாத நிலையும் ஏற்பட வாய்ப்பு உண்டாகிறது.

வலிகாமம் மேற்குப் பிரதேசம் இந்து சமுத்திரத்தாலும் யாழ் கடனீரேரியாலும் சூழப்பெற்றுள்ளது. 4930 ஹெக்டேயர் நிலப்பரப்பை உள்ளடக்கிய பிரதேசமாகும். 200 ஹெக்டேயர் நிலப்பரப்பு விசாலமான உள்நாட்டு நீர் நிலைகளான குளம், கிணறுகள், வாய்க்கால் போன்றவற்றை கொண்டதாக அமைந்துள்ளது.

வலி கிழக்குப்பிரதேசத்தின் எல்லைக் கிராமமாக வாதரவத்தையும் வடமராட்சிப் பிரதேசத்தின் எல்லைக் கிராமமாக கப்புதூரும் உள்ளன. இக் கிராமத்திலும் உவர் நிலம் அதிகமாகக் காணப்பட்ட போதிலும் உவர் நீர் நிலைகளும் காணப்படுகின்றன.

அண்மைக் காலத்தில் நன்னீர் உவர் நீராக மாறுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி இங்கு 8280 கிணறுகள் இருக்கின்றன. அவற்றில் 2821 நன்னீர்க் கிணறுகள், 2388 ஓரளவு நன்னீர்க் கிணறுகள், 397 கடும் உவர் நீர்க் கிணறுகள், 2644 நன்னீர்க் கிணறுகளும் 30 பாழடைந்த கிணறுகளும் காணப்படுகின்றன. இவற்றில் உவர் நீராக உள்ள 20 வீதமான கிணறுகள் கடந்த 10 வருடங்களுக்கு முன் நன்னீராகக் காணப்பட்டது. இத்தகைய நன்னீர் உவர் நீராக அதிகமாகவே மாறிவிடுவதாக தற்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

குடா நாட்டில் பெரியதொரு நிலப்பரப்பை, நீர்ப்பரப்பை வீணடிக்கப்படுவதால் இப்பிரதேசம் உவர் நீரினால் காவு கொள்ளப்படும்போது குடாநாட்டிற்கு உவர் நீர் அச்சுறுத்தல் ஏற்படும். கப்புதூர் வாதரவத்தைப் பகுதிகள் 1960 ஆம் ஆண்டு 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நன்னீர்ப் பிரதேசமாக இருந்தன. ஆனால் இன்று இப்பகுதி உவர் நீர் நிலைகளையே கொண்டுள்ளது.

கரவெட்டி தெற்குப் பிரதேசம் உவர் நீராவதைக் காண முடிகிறது. நாளடைவில் நன்னீராக இருக்கிற இடங்கள் தற்போது உவர் நீராக மாறிவருவதால் யாழ் குடா நாட்டில் நன்னீரைக் காணக்கூட முடியாத நிலை ஏற்படவாய்ப்புள்ளது. குறிப்பாகச் சொல்லப்போனால் கடலேரியை அண்மித்த பிரதேசங்கள் தற்போது உவர்நீராகவும் சற்றுத் தொலைவில் உள்ள பிரதேசங்கள் உவர் நீராகிக்கொண்டு வரும் பிரதேசங்களாகவும் உள்ளன.

இதேநேரத்தில் வலி மேற்குப் பிரதேசத்தில் பெய்யும் மழைநீர் வழுக்கையாற்றைச் சென்றடைகிறது. போர் அனர்த்தம் காரணமாக வழுக்கையாற்றின் துருசுகள் சேதமுற்று காணப்படுவதால் நீர் முழுவதும் கடலைச் சென்றடைகின்றது.

வழுக்கையாற்றுக்கு வந்து சேருகின்ற மழைநீர் தடுப்பு அணை இல்லாததால் இந்நீர் கடலில் வீணாகக் கலக்கிறது. இதனால் கடல் நீர்மட்டத்தால் உயர்வடைவதால் நிலத்தடியூடாக கடல் நீர் வேகமாக உள்நோக்கி வருவதால் நன்னீர் உவர்நீராக மாறுகிறது.

அரியாலையில் இருந்து பொன்னாலை ஈறாக அமைக்கப்பட்ட உவர் நீத் தடுப்பு அணை அழிவுற்று சிதைவடைந்து காணப்படுவதால் நன்னீரும் கடல் நீரும் ஒன்றாகச் சேருகின்றது. நிலத்தடி நீர் உவராகி வருவதால் யாழ்மாவட்டத்திலுள்ள அராலிப் பகுதி, வட்டு கிழக்கு மூளாய், அரசடி போன்ற இடங்களில் விவசாய நிலங்கள் உவராகி வருகின்றன.

யாழ்குடாநாடு அபிவிருத்தி அடைய வேண்டுமானால் உவர்நீர் அபாயம் நீக்கப்பட வேண்டும். கடல் நீர் ஏரிகளையும் சரசாலை சதுப்பு நிலக் காட்டில் இருந்து ஆரம்பிக்கும் செம்மணிக் கடல் நீரேரி முள்ளிச் சதுப்பு நிலக்காட்டில் இருந்து ஆரம்பிக்கும் தொண்டமனாறு கடல் நீர் ஏரிவரை முழுமையாக ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமானதாகும்.

முள்ளிச் சதுப்புநிலக்காடு கப்புதூர் கண்டல்காடு என்பன யுத்த இடப்பெயர்வினால் முற்றாக அழிக்கப்பட்டு தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக கண்டல் மரங்கள் தளிர் விடுகின்றன. இவற்றை இனி மேலாவது அழியவோ அழிக்கவோ விடாது பாதுகாக்க வேண்டும்.

உவர் நீத் தடுப்பின் முதற்கட்ட நடவடிக்கை நீர்த்தேக்கங்களையும் சதுப்பு நிலக்காடுகளையும் முழுமையாகப் பயன்படுத்துதல்.

வயல்களுக்கிடையே காணப்படும் நீர்த்தேக்கங்களையும் உவர்த்தடுப்பு அணைகள் மூலம் குளமாக மாற்றுவதால் இதைத் தடுக்கலாம்.

மழை காலங்களில் மிதமிஞ்சிய நீரை வடிகால் அமைத்து வெளியேற்றல்.

கப்புதூர் வெளி நீர்வேலி வெளிகளில் காணப்படும் மேய்ச்சல் தரைகளின் பரப்பளவை அதிகரித்து நல்ல புல்லினங்களை வளர்த்தல், சவுக்கு தேக்கு போன்ற மரங்களை நடுகை செய்தல். உவர் நீர் நிலைகளில் இறால், மீன்களை வளர்த்தல்.

க்டலுடன் கடல் நீர் ஏரி கலக்கும் இடங்களிலும் கோடை காலங்களில் கடல் நீர் உட்புகாமல் இருக்க அணைகட்டுதல் இத்திட்டங்களை அமுல்படுத்தும் பட்சத்தில் நல்ல பலனைப் பெற முடியும்.

குடா நாட்டின் நிலத்தடி நீர் உவர் நீராவதை தடுக்க முடியாவிட்டால் மத்திய கிழக்கு நாடுகள் போல் அங்கே உள்ள மக்கள் நன்னீரை விலை கொடுத்தும் வாங்க முடியாத நிலை எதிர்காலத்தில் ஏற்படலாம்.

ஆகவே இதை நிவர்த்தி செய்ய தடுப்பு அரண்களை புனரமைப்புச் செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதே நேரம் இங்கே உள்ள சிறு குளங்களை புனரமைத்து நன்னீர்த் தேக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்துக்கொள்வதுதான் நல்லது.

திருமதி கே.சிவலிங்கம்

(03ஆம்பக்கத் தொடர்ச்சி)

கண்டியில மாநாடு. கொழும்பில பேச்சுவார்த்தை. கிளிநொச்சிக்கு தூதுக்குழு- அயல்நாடுகளுக்கு அவசரப் பயணம். என்ன... என்ன நாடகமே நடத்திறியள்... நகையால கிழிக்கிற பனங் கிழங்குக்கு ஆப்பும் வல்லீட்டியும் தேடுறியள். இல்ல வாறவைக்குத்தான் ஒண்டும் விளங்காதே பொடியள் கிழவி எங்கயிருந்து சொல்லுறனெண்டு கேளுங்கோ; உங்களை உவை முதுகில தட்டி நித்திரையாக்கிப் போட்டுப் படம்போடப்போகினம். நீங்கள் படுத்தியளோ அவ்வளவுந்தான். அதென்னடா எழுவத்தியேழில பொடியங்கள் எண்பத்திநாலிலையும் பொடியங்கள், ரெண்டாயிரத்தி நாலிலையும் பொடியங்கள் எண்டு நினைச்சுக்கொண்டே இந்தப் பிரளி பண்ணுகினம். மெய்யே பொடியா- உதுபோல ஒரு நொடியிருக்கு நீ கேள்விப் பட்டியோ தெரியா "தாயுங் குட்டி மோளுங்குட்டி" என்னண்டா "மசுக்குட்டி" எண்டு சுகமா மறுமொழிசொல்ல என்ர பேத்தி சொல்லுறாள். மசுக்குட்டியில்லயாம் மயிர் கொட்டியாம். போடா போ இந்த நாளையிப்பிள்ளையள் தாயின்ர வயுத்துக்க கிடக்கயுக்கயே கொம்பிட்டரை உணருதுகள். அதுகளோட கதைக்கேலுமே... நீ நான் சொன்னதை மறந்துபோகாதை. கண்டியில் குளிரோட ஐசும் வச்சாப் பிழைச்சுப்போம்... நீங்கள் இன்னுங்குழந்தையளில்ல.

(17ஆம்பக்கத் தொடர்ச்சி)

இன்று நாடகத்தின் மோகம் குறைத்துள்ளது. தொலைக்காட்சி சினிமாவின் தாக்கம் தான் காரணம். இளம் தலைமுறையினர். மேடைநாடகங்களில் ஆர்வமின்றி சினிமா மேகத்தில் புரள்வதினால் மேடை நாடகங்களிற்கான வரவேற்பு குறைவாகவுள்ளது. நாடகம் பார்க்க வேணுமென்று இருப்பவன் நாடகத்தை பார்க்க ஆவலாக இருப்பான். இப்படியானவர்களிற்கு நல்ல நாடகங்களை மேடையேற்ற வேண்டிய பொறுப்பு நாடகக் கலைஞர்களிடமேயுள்ளதென பதிலளித்தவரிடம்.

நாம்:- இறுதியாக இத்துறை தொடர்பான கருத்துக் கேட்ட....

கி.பி. பேர்மினஸ்:- நாடகத் துறை எனக்கு ஆத்மதிருப்தியைத் தந்துள்ளது. இவ் அனுபவத்தில் நல்ல மனிதனாக வாழலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறேன். கலைஞர்களைப் பொறுத்தவரையில் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் கூடிய ஒற்றுமை தேவை. இதற்கு மூத்த, இளைய கலைஞர்கள் என்ற விதிவிலக்கில்லை. சமூகத்தை நல்வழிப்படுத்தி சமூக வளர்ச்சிக்கு அரங்குகளின் ஊடாக பங்காற்றி வரும் அரங்க கலைஞர்கள் தமது நிஜ வாழ்க்கையிலும் தம்மாலான பணிகளை சரிவர மன நிறைவுடன் மேற்கொள்ள வேண்டும். கலைஞர்கள் கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டாலும் அவர்களால் வெளிகொணரப்படும் கலைவடிவங்கள், கருத்துக்கள் நிலையாக நின்று தனி இன்பம் வழங்கும் என்பது அனுபவரீதியான உண்மை.

"நடிகர்கள், விளையாட்டு வீரர்களால் நாட்டை நிர்வகிக்க முடியுமென்றால் நல்ல கலைப்படைப்புக்களால் நாட்டை ஏன் கட்டியெழுப்ப முடியாது" எதன எம்மிடம் கேள்வி கேட்டு செவ்வியை நிறைவு செய்தார்.

அரைநூற்றாண்டாக தொடர்ந்தியங்கிவரும் கலைஞர் கலைத் துறைக்காற்றிய சேவைக்காக கலைஞானகேசரி, அரங்க வாரிதி, யாழ்ரத்னா, கலாபூசணம் ஆகிய விருதுகளைப பெற்றுள்ளார். 66 வயதிலும் மிக இளமையுடன் துடிப்பான பாத்திரங்களில் நடித்துவரும் கலைஞர் ஓய்வு பெற்ற முன்னணி உதைபந்தாட்ட வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. தன் மனைவியின் பாராட்டுதலும் பூரணமான ஒத்துழைப்புமே வெற்றிக காரணமெனக் குறிப்பிடும் கலைஞர் தனது பிள்ளைகளை கலைத் துறைக்கு பணியாற்றக் கூடிய வகையில் வளர்த்துள்ளார் என்பது நினைவு கூரப்பட வேண்டியது.

மிகத் திறமையான நடிப்பாற்றலினால் நூற்றுக்கணக்கான மேடை யேறி பலரது பாராட்டுதல்களைப் பெற்ற கலைஞர் உடல், உளப் பயிற்சியுடன் சேர்ந்த களப் பயிற்சியே நல்ல கலைஞராக வெளிவர கைக்கொள்ளப்பட வேண்டுமென்பதை அனுபவரீதியாக ஏற்றுக் கொள்கிறார். குருநகர் சென் றோக் மகாவித்தியாலயம் புனித சம்பத்தரிசியார் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனான கி.பி பேர்மினஸ் சமயசமூக சேவைகளிலும் முன் நின்று உழைப்பவர்.

கலைகளின் ஊடாக நல்ல மனிதரை சந்தித்த சேமித்த கலைஞரை சந்தித்து நாடகத் துறை சார்பாக பெற்ற கருத்துகளில் இருந்து கி.பி பேர்மினஸ் அபூர்வ நடிகர் மட்டுமன்றி நல்ல மனிதரும் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

# எல்லாரும் அறிஞ்சிருக்கவேண்டிய முக்கியமான விசயம்

உலா 34




*'வணக்கம்* எல்லாருக்கும்! எப்பிடி சுகங்கள்? நான் இஞ்சையிருந்து எழுதி அனுப்பி, அது உங்கை வெள்ளிக்கிழமை வெளிவாறதுக்கிள்ளை இடையில எத்தினையோ விசயங்கள் நடந்து போயிடுது. உடன உடன அதுகளைப் பற்றி எழுதேலாமல் போறதுக்கு நீங்கள் கோவிக்க மாட்டீயள் எண்டெனக்குத் தெரியும். என்ரை குஞ்சுகள் என்னை ஏன் கோவிக்கப்போகுதுகள் மற்றது பாருங்கோ ! உந்தப் பாதை திறந்ததும் காணும், நாங்கள் படிற பாடும் காணும். அதுதான் ஒருசில சர்வதேசக்காரரின்ரை கண்மண் தெரியாத இம்சையைக் கேட்கச் சகிக்கிதில்லை. அவர் ஒருத்தர் 'புலியள் சிறுவர்களை இயக்கத்துக்குப் பிடிக்கினம்' எண்டு பாதுகாப்புச் சபைக்கு அறிக்கை குடுக்கப் போறாராம். ஒருக்கால் இடையில வந்து இஞ்சை பார்த்திட்டுப் போங்கோ எண்டால், அதுக்கு இஸ்ரமில்லை. சரி எங்களில உவ்வளவு கரிசனைப் படிகினம். இந்தியாவில இருந்து திரும்பி வர விரும்பிற எங்கட சனத்தை தங்கட பாதுகாப்பில கௌரவமாய் கொண்டு வந்து இறக்கலாமெல்லோ! அவையள் வந்து ,எத்தினை வேதனையளை நடுவழியில அனுபவிக்க வேண்டியிருக்கு. இல்லாட்டி தாய்லாந்துக்கு அடுத்ததாய் சிறுவர் விபச்சாரம் நடக்கிற தென்னிலங்கையில சட்டங்களை இறுக்கிறதுக்கு நெருக்குவாரம் குடுக்கலாம். 'சே! பேந்து உல்லாசப்பயணிகள் குறைஞ்சிடுவினம், அரசாங்கம் ஒத்துக்கொள்ளாது. நான் முந்திப் பாருங்கோ ஒருக்கால் வீட்டாரோட கண்டி பார்க்கப்போற பாதையில இடைக்கிளை வீதியின்ரை 2 பக்கமும் பொம்பிளையள் கஜு வைச்சு வித்துக்கொண்டிருத்திச்சினம். கஜு எண்டால் என்னைச் சொல்லவே வேணும். நான்கிராமப்பக்கம் தானே! நல்ல மலிவாய் ஒரு மூட்டையை மடக்கி வாகனத்தில போட்டுக் கொண்டு போவோம் எண்டு ட்றைவரை நிற்பாட்டச் சொன்னன். அந்தாள் என்ரை வயசையும் கவனிக்காமல் என்னை பறக்கப்பறக்க பேசிப் போட்டிது. அது கொஞ்சம் பிசகான பகுதியாம். கஜு விக்கிற மாதிரி வெள்ளைக்காரப்பயணியளுக்காகத் தானாம் அவையள் அப்பிடி நிற்கினம். நான் திரும்பிப் பார்த்தன். கறுமமான குழந்தைப்பிள்ளை வயசு, 15 கூட வராதெண்டு நினைக்கிறன். மூஞ்சை முழுக்க அது இதெண்டு எல்லாம் பூசி வெளிக்கிட்டு அவையள் நிண்டது ஏனெண்டு ட்றைவர் சொன்னாப் பிறகு தான் எனக்கு விளங்கிச்சிது. அந்தப் பகுதியின்ரை பேர் கூட கஜுகம (கம எண்டால் கிராமம்). உதுகளில இருந்து .குழந்தை குட்டியளைக் காப்பாற்றிற சிந்தனை கூட சர்வதேசங்களுக்கு துண்டற இல்லை.

ஏன் போனகிழமை எனக்கு வந்த சிக்கலைக் கேளுங்கோவன்! இஞ்சை சின்னப்பொடியங்கள் இன்ரர்நெற்றில ஒரு சண்டை விளையாட்டோட வலு அமளிப்பட்டுக் கொண்டிருந்தாங்கள். அது அமெரிக்கப்பாதுகாப்பு அமைச்சால ஆப்கானிஸ்தான் போர் தொடங்கிற நேரம் இலவசமாய் சின்னப் பிள்ளையளுக்கு வெளியிடப்பட்ட விளையாட்டாம். அமெரிக்கப்போர்வீரன்ரை இடத்தில இருந்து எதிரியளை நீங்கள் அழிக்கோணும். எதிரியள் எல்லாரும் முஸ்லிம் உடுப்புகளோட தென்பட்டிச்சினம். 'தாத்தா ! நீங்கள் தமிழீழத்தில புலிமாமா,மாமியள் சண்டை பிடிக்கேக்கிளை எல்லாம் பார்த்திருப்பீங்கள் தானே! எங்கை ஒருக்கால் விளையாடிப் பாருங்கோவன்!', எண்டொரு சின்னவட்டம் என்ரை தலையில குண்டைத் தூக்கிப்போட்டிச்சிது. 'இதென்னடா கரைச்சல்! சின்னனுகளுக்கு முன்னால மரியாதை கெடப்போறேனே எண்டு பயந்து கொண்டு விளையாடத் தொடங்கினன். அமெரிக்கா ஆப்கானிஸ்தானை அடிச்சாலென்ன, விட்டாலென்ன எனக்கு! ஆனாலும் சின்னனுகளுக்கு முன்னால கௌரவப் பிரச்சினை விட்டுக்குடுக்கேலாமல் கிடந்திச்சிது. உள்ள கடவுளுக்கெல்லாம் நேர்த்தி வைச்சு ஒரு மாதிரி நாகதம்பிரான் புண்ணியத்தில வெண்டிட்டன். கொம்பியூட்டர் திரையில கொமாண்டர் ஒராள் வந்து என்னைப் பாராட்டினார். பாராட்டினது தான் தாமதம் அவையின்ரை ராணுவத்துக்கான ஆட்சேர்ப்புப் பக்கத்தில இருந்து விண்ணப்பப்படிவம் ஒண்டு 'வந்து நிரப்பச்சொல்லி விளம்பரம் மினுங்கிச்சிது. அது விளையாட்டில்லை, விசயம் சீரியஸாய் போய்ட்டிது. இதென்னடா வில்லங்கம் எண்டு எல்லாத்தையும் அடிச்சு நிற்பாட்டி, கறண்ட் வயரையும் கழற்றி எடுத்திட்டன். பாருங்கோ என்ன என்ன மாதிரியெல்லாம் சின்னனுகளைத் தூண்டி இழுக்கிறாங்கள் எண்டு! பொறுப்பானவை எண்டு சொல்லிக்கொண்டு ஆரோட ஒட்டி, ஆரை உண்ணுறாங்களோ கடவுளுக்குத்தான் வெளிச்சம் !

வேற ஒரு புல்லரிக்கிற சம்பவம். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சைச்சேர்ந்த சியாம் சரன் திருகோணமலைக்குப் போய்க்கூட்டம் கூட வெளிக்கிட, 'எங்கட தரப்பு பிரதிநிதியளான புலியள் அழைக்கப்படாத இடத்துக்கு நாங்கள் சமுகமளிக்கமாட்டம்' எண்டு சொல்லி முஸ்லிம் உறவுகள் உட்பட தமிழ் மக்கள் எல்லாரும் வெளிநடப்புச் செய்தது அறிஞ்சிருப்பியள் எண்டு நினைக்கிறன். 'திருகோணமலையின்ரை அழகை சம்பந்தர் தேவாரத்தில பாடியிருந்தவர். அவர் பாடின அழகைக் காணிறதுக்காகத் தான் வந்தனானே தவிர வேறொண்டுக்கும் இல்லை. நாங்கள் சுனாமி நேரம் உங்களுக்கு அது தந்தனாங்கள், இது தந்தனாங்கள். எங்கட 2 நாடுகளின்ரையும் உறவு 2000 ஆண்டுகள் பழமை வாய்ஞ்சது', எண்டு மனுசன் துள்ளத்தொடங்கிட்டிதாம். இஞ்சால பக்கம் வராமலேயே மனசில நினைச்சு சம்பந்தர் பாடின தேவாரம் 'நிரை கடல் அரவம் சிலம்பொலி ' எண்டு நினைக்கிறன். சின்னனிலை பாடமாக்கினது, வடிவாய் ஞாபகம் இல்லை. அதிலை கோணமாமலை அமர்ந்தவர் எண்டு சிவபெருமானைப் பற்றியும், நகரைப் பற்றியும் தானே அவர் பாடினவர்! கடற்படைத்தளங்களைப் பற்றிப் பாடேல்லைத்தானே! பேந்தென்னத்துக்கு சியாம் சரன் கடற்படைத்தரப்போட நல்லாய் மினைக்கெட்டவராம்? எடேட!பாவம் மனுசன்! கோணமாமலை அமர்ந்தவர் எண்டதை அங்கை தளம் போட்டு அமர்ந்திருந்த கடற்படையினர்தானெண்டு தப்பாய் விளங்கிக் கொண்டிட்டார்!

பிள்ளையள்! (நான் பிள்ளையள் எண்டால் பொடியங்களையும் சேர்த்துத்தான். அது ஒரு இருபால்-பொதுப்பெயர்) உங்களுக்கு நான் ஒரு பொம்பிளையைப் பற்றிச் சொல்லோணும். இது நீங்கள் எல்லாரும் அறிஞ்சு வைச்சிருக்க வேண்டிய சீரியஸான விசயம் : 2002 ஆம் ஆண்டு யூன் மாசம், மத்திய பாகிஸ்தானில இருக்கிற மீர்வாலா எண்ட ஒரு கிராமத்தில ஒரு 12 வயதுப் பொடியன் பள்ளிக்கூடம் முடிஞ்சு வரேக்கிளை, மஸ்தோய் எண்ட உயர் சாதி எண்டு அழைக்கப்படும் கூடப் படிக்கிற ஒரு பிள்ளையோட வீதியில நடந்து வந்திருக்கிறான். இப்பிடி கூட நடந்து போறதை ஜீரணிச்சுக்கொள்ள முடியாத அந்த சமூகம் அந்த 12 வயசுப்பொடியன்ரை 30 வயது தமக்கையான முக்தார் மாய்க்கு கிராம நீதிமன்றத்தில(?) தண்டனை வழங்கியிருக்கினம். அந்த கிராம சமூகத்தின்ரை நீதியாளர் எண்டு தங்களைச் சொல்லிக்கொண்ட கிழடுகள் தங்களால ஏலாததால, அதுகளின்ரை கட்டளையின்படி வேற 4 பேரால முக்தார் மாய் பகிரங்கமாக பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறா. இது நடந்தாப்பிறகு வெவ்வேற பெண்ணுரிமை மையங்களின்ரை தலையீட்டால விசயம் நீதிமன்றத்துக்குப் போய், குற்றத்துக்கு காரணமாயிருந்த 6 பேருக்கு மரணதண்டனையும், பாதிக்கப்பட்ட முக்தார் மாய்க்கு 8300 US $ உம் அளிக்கப்பட்டிது. அந்த நஷ்டஈட்டுத்தொகையைத்தான் எடுக்காமல், உள்ளூரில ஒரு பள்ளிக்கூடம் கட்டச்செலவளிச்சிருக்கிறா முக்தார் மாய் கிட்டடியில வழக்குக்கு போதுமான சாட்சிகள் இல்லை எண்டு காரணம் சொல்லி, மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியளை நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிது. மஸ்தோயின்ரை உயர்சாதி வக்கிரம் முக்தார் மாயைக் கொலை செய்யிற அளவுக்கு கொதிச்சுப்போயிருக்கு. அது பாவமோ தான் கட்டின பள்ளிக்கூடத்துக்குள்ளையே ஆசிரியையாய் அச்சத்தோட வாழ்ந்து கொண்டிருக்கிது. என்ன பாகிஸ்தானைப் பற்றியே யோசிக்கிறீங்கள்? எனக்கொரு சந்தேகம், கேட்கிறன், குறை நினைக்கக்கூடாது !

நாங்கள் ஒரு போட்டி வைச்சால் அதில திறமையாய் வாற ஆக்களுக்குத் தானே பரிசு குடுப்பம்! வகுப்பில முதலாவதாய் வந்த கெட்டிக்கார மாணவர்கள் தானே ஊக்குவிக்கப் படுகிறவை. அதை விட்டிட்டு கடைசியாய் வந்தவைக்கே குடுக்கிறது? . . உதென்ன விசர்க்கதை எண்டு என்னில கோவிக்கிறீங்களோ? அப்ப எனக்கொருக்கால் இதை விளங்கப்படுத்துங்கோ! நாங்கள் தமிழர் கற்புநெறியை உயர்வாய் போற்றுறம். அதையொட்டித்தான் சமூக வழக்குகளும் நிறைஞ்சு கிடக்கிது. ஆனாலும், கற்பைப் போற்றிற தரப்பிட்டை சீதனத்தை வலியுறுத்திறதையும், அந்த நெறியில இருந்து தவறி அதையே பிழைப்பாகக் கொண்ட தரப்புக்கு அள்ளிக்குடுக்கத் தயாராகிறதையும் (நாட்டின்ரை சில பகுதியளில கேள்விப்படுகிறதுகளை வைச்சுத்தான் கேட்கிறன்) என்ன வகையில புரிஞ்சு கொள்றது? எங்கட வழக்கத்தின்படி வகுப்பில கடைசியாய் வந்தாளுக்குத்தான் சன்மானமோ??

ஐயைய்யோ ! முக்கியமான ஒரு நாட்டில நிண்டுகொண்டு சந்திப்பம் எண்டு போனமுறை சொல்லிப்போட்டு, அதையே மறந்திட்டன். நாட்டைச் சொல்ல முதல் ஏன் முக்கியமானதெண்டு சொல்லிப் போட்டு பேந்து விசயத்துக்கு வாறன். உலகம் பூராவும் துல்லியம், தராதரம், நேரத்துக்கு மதிப்புக்கொடுத்தல் எண்ட 3 நற்பண்புகளைக் கொண்ட நாடு. இரண்டு உலகப்போருக்கும் முக்கிய காரண கர்த்தாவாக இருந்த நாடு. 2ஆம் உலகயுத்தம் முடிஞ்ச நேரத்தில கதை முடிஞ்சிது எண்டு எல்லாரும் நினைச்சுக்கொண்டிருக்க, வெறும் 10 வருசத்துக்குள்ளையே பாய்ச்சல் வளர்ச்சியைக் கண்ட நாடு. அதாலயே இண்டைக்கு எங்கட நாடு காணிற இழப்புக்களை எல்லாம் நினைச்சபடி ஏங்கிக்கிடக்காமல், எங்களாலயும் எழமுடியும் எண்டு நம்பிக்கை ஊட்டக்கூடியது மட்டுமில்லாமல், தான் கடந்து வந்த பாதையளை எங்களுக்கு வழிகாட்டியா வைச்சிருக்கிற ஒருநாடும்கூட! 20 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில இந்த நாட்டு மன்னனின்ரை ஆலோசனையாளராய் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு தமிழ் ஆளும் பணியாற்றி இருக்கிறார். இதைவிட பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தை ஆய்வு செய்த மக்ஸ்முல்லர் இந்த இனத்தைச் சேர்ந்தவர்தான்! உலகத்திலயே நல்லாய் பியர் அடிக்கிற ஆக்களும் இஞ்சை தான். ஆனாலும், குடிவெறி எல்லாம் வெள்ளி இரவு தொடங்கி சனி இர்வு மட்டும் தான்! ஞாயிறு தெளிய விட்டிட்டு திங்கள் தங்கட தங்கட வேலையில கண்ணும் கருத்துமாய் இருப்பாங்கள் இவங்கள்! எங்கட தாயகத்தை ஆரோ சிங்கள அரசு வடக்கு-கிழக்கு எண்டு கூறு போட நினைக்கிது. அப்பிடி ஆரோ வேறநாடுகளின்ரை சதியால 45 வருசம் பிரிஞ்சிருந்து, திரும்ப இணைஞ்ச சந்தோசம் கொண்ட நாடு! நாங்கள் உள் வாங்கிக் கொள்றதுக்கு இவங்களிட்டை நல்ல விசயங்கள் கனக்க இருக்கிது. மற்றது பாருங்கோ! மகன், மகள், சொந்தங்களெண்டு எனக்கும் இஞ்சை ஆக்கள் கூட இருக்கிறதால, கொஞ்சம் கூடக்காலம் தங்க வேண்டியும் வரப்போகுது.

ஆ . . ! என்னது? ஐயோ சொல்ல மறந்திட்டன், மன்னிக்கோணும். நான் இப்ப நிக்கிறது யேர்மனி நாட்டில. வடக்கில டென்மார்க், கிழக்கில போலந்து, தெற்கில சுவிஸ், மேற்கில நெதர்லாந்து உட்பட செக் குடியரசு, ஒஸ்திரியா, பிரான்ஸ், பெல்ஜியம் எண்டு கன நாடுகளை எல்லையில கொண்டிருக்கிது இது. இலங்கைத்தீவை விட 6 மடங்கு பரப்பளவில 82 மில்லியன் மக்கள் வாழ்ந்து வருகினம். முந்தி நூற்றுக்கணக்கான சின்னச்சின்ன ராச்சியங்களாகப் பிரிஞ்சு கிடந்த நாடு, பிஸ்மார்க் (Bismark) எண்ட அரசத்தலைவரின்ரை முயற்சியால தான் 1871 இல ஒரு தனியானதும், பலமானதுமான ஒரு நாடாய் உருவானது. 16 மாநிலங்களின்ரை சமஷ்டிக்குடியரசு எண்டு அழைக்கப்படுகிற இதின்ரை தலைநகரம் பேர்ளின் (முந்தி பொண்). நாணயம் முந்தி மார்க், இப்ப பொது நாணயம் யூரோ. மொழி டொச் (நெதர்லாந்து மொழி டச்). சில மாநிலங்களில சில வட்டார வழக்குகள் பழைய தலை முறையிட்டை இருக்கிது. ஆகலும் முக்கியமான பெரிய நகரங்கள் எண்டால் தலைநகரம் பேர்ளின், பொண்,. பிராங்போர்ட், மியூனிச், ஹம்பேர்க், பிறேமன், ஹனோவர் எண்டு சொல்லலாம். ஹிட்லரால 6 மில்லியன் யூத மக்கள் அழிக்கப்பட்டாப் பிறகு பிற்காலத்தில 1960 களில வெளிநாட்டு மக்கள் கனபேர் வேலைவாய்ப்புக்காக வந்து அப்பிடியே குடியேறிட்டினம். துருக்கி, போர்த்துக்கல், இத்தாலி, போலந்து எண்டு மொத்த சனத்தொகையில 9 வீதமான ஆக்கள் இருக்கினம். எங்கட சனம் 80 000 இற்கும் குறையாமல் இருக்கினம். குளிரும் கொஞ்சம் குறைஞ்சுகொண்டு போறதால எனக்கும் சுத்தித்திரிய வசதியாய் போயிட்டிது. விசயங்கள் கனக்கக் கிடக்கிது. அடுத்த முறை சந்திப்பம். எல்லாரும் கவனமாய் இருங்கோ!



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 09

பகுதி -47

ஒரு நீண்ட நிமிடத்துக்கு டிப்ஸ் என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"நான் வந்த நேரம் வெள்ளனத்தான். ஆனா நான் போறநேரம் முந்திய மாதிரித்தான் இருக் கும்" அறிவிப்பதுபோல் சொன்னான் டிப்ஸ்.

"இல்லை போகும் நேரமும் இண்டைக்கு வெள்ளனவாகத்தான் இருக்கும்" என்றேன்.

"இல்லை நான் வெள்ளன வருவன். ஆனா வெள்ளன போகமாட்டன்" டிப்ஸ் சொன்னான்.

"இல்லை, நீங்கள் போகத்தான் வேண்டும். இண்டைக்கு டொக்டரட்ட போகவேணும் ஞாபக மில்லையோ?"

"ஞாபகப்படுத்துவதற்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இல்லை.

"உங்களுக்குப்




போக விருப்பமில்லை, அவ்வளவுதான். ஆனா..."

"ஓம் அது சரிதான்" என்று இடை மறித்துச்சொன்ன டிப்ஸ், என்ன நோக்கி அளவிடப்பட்டதுபோன்ற ஒரு நீண்ட பார் வையை செலுத்தினான்.

"உங்களுக்கு அது பற்றி நிச்சயமில்லை. அப்படித்தானே?" என்று கேட்டேன். டிப்ஸ் பெருமூச்சொன்றை வெளிவிட்டான். "நான் நிச்சயமாக இருக்கிறேன். என்றுதான் நினைக்கிறேன்..." என்று இழுத்தவன், சரி இப்ப நான் போகிறேன். டொக்டர் ஊசியை டொறத்திக்குப் போடவேணுமெண்டுதான் நான் விரும்புகிறன். அவள் கத்திக்குழறுகிறவரை அவளை ஊசியால குத்த வேணும் எண்டுதான் நினைக்கிறன். அவளுக்கு வேதனை தெரியுதெண்டு நான் உள்ளுக்க சிரித்துக் கொள்ளுவன். அதப்பற்றி எனக்குக் கவலை யில்லையெண்டமாதிரி நான் இருப்பன். போயிற்றுவாறன். அடுத்த வியாழக்கிழமை உங்களைச் சந்திப்பேன்.

டிப்ஸ் மண்டபம் நெடுக நடந்து வரவேற்பு அறைக்குள் சென்றான். அங்கு அவனது தாயாரும் டொறத்தியும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். அவன் தனது சகோதரியைக் கவனித்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. தன் தாயின் கையைப் பிடித்துக்கொண்ட அவன் யாருக்கும் எதுவும் சொல்லாமல் மையத்தை விட்டுப்போய்விட்டான்.

## அத்தியாயம்- 10

அடுத்த வாரம் டிப்ஸ் வந்தபோது அவன் இயல்பான பரபரப்பில்லாத முறையில் நடந்து விளையாட்டு அறைக்குச்சென்றான். கதவுக்கருகில் நின்ற அவன், அதில் தொங்கிய அறிவித்தல் அட்டையை மறுபுறமாக மாற்றி விட்டான். "தயவு செய்து தொந்தரவு செய்யவேண்டாம்" என்று சொல்லிக் கொண்டான்.

அறைக்குள் சென்ற அவன் தன் தொப்பியையும் கோட்டையும் கழற்றிக் கதவுக் குமிழில் தொங்கவிட்டான். மணல் பெட்டியின் விளிம்பில் அமர்ந்து கொண்டு பாதணிகளைக் கழற்றிவிட்டான். பின் அவற்றை தனது கோட்டுக்குக் கீழே நிலத்தில் வைத்துவிட்டான். அறையில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த நான்கு துப்பாக்கிகளை எடுத்து, பொம்மலாட்ட அரங்கினுள் கொண்டு சென்றான். அங்கிருந்து வெளியே வந்த அவன், உடைந்த இயக்குறுப்போடு இருந்த ஒரு விமானத்தை எடுத்தான். மேசையடியில் அமர்ந்துகொண்ட அவன் உடைந்திருந்த இயக்குறுப்பை மிக அமைதியாகவும் திறமையாகவும் திருத்தி விட்டான்.

பண்ணை மிருகங்கள் இருந்த பெட்டியை எடுத்த அவன், மிருகங்களின் பெயர்களை கூறிக்கூறி அவற்றை வகைப்படுத்தினான். பின்பு மணல் பெட்டிக்குச் சென்று அதற்குள் ஏறி அங்கிருந்த சிறியவீட்டை ஆராய்ந்தான்.

"லெக்சிங்ரன் அவனியூ வில இருக்கிற ஒரு கடையில இப்பிடி ஒரு வீட்டக் கண்டனான்" என்று அறிவித்தான்.

"கண்டனீங்களோ? " நான் கேட்டேன்.

"ஓம்.கண்டனான். சரியா இது மாதிரித்தான். இதே அளவு, இதே நிறம். உலோகத்தால செய்தது. இரண்டு டொலர் தொண்ணூற்றெட்டுச் சதம். ஓம் அதுதான் அதின்ர விலை" என்றான்.

பின் அந்த வீட்டைத்திருப்பித் திருப்பி விட்டான்."அந்த வீடு, எல்லாம் துண்டு துண்டாக் கழட்டி, ஒரு பெட்டியில வைச்சு வந்திருக்கு. அதுகளப் பூட்டி வீடாக்க வேணும். ஆனா சரியா இது மாதிரித்தான்." என்றவன். தனது விரலால் வீட்டைச் செய்திருந்த தகட்டில் தட்டிக்காட்டிக் கொண்டே, " மெல்லிய தகட்டில இது செய்திருக்கு " என்றான்.

பிறகு வெப்பமூட்டியை பார்த்தான். "இன்றைக்கு இதுக்குள்ள வெக்கையா இருக்குது. நான் வெப்பமூட்டியை நிறுத்தப் போறன்." என்றவன் சரிந்து வெப்ப மூட்டியை நிறுத்திவிட்டான்.

"அந்தக் கடையில கனக்க விளையாட்டுச் சாமான்கள் இருக்கு. சரியா இதைப்போல சின்ன ட்ரக்கும் இருக்குது" என்றவன் மணல் பெட்டிக்குள் இருந்த ட்ரக் ஒன்றை நான் பார்க்கக்கூடியதாகத் தூக்கிப்பிடித்தான்.

"பெட்டிய சரிச்சு மண்ணக் கொட்டக்கூடிய ட்ரக். அதில ஒரு கைபிடி இருக்குது. அதச் சுழற்றினா பெட்டி சரிஞ்சு மணல் கொட்டுப்படும்."

."இதே மாதிரி ட்ரக்கா?"

ஏதோ ஒரு காரணத்திற்காக . டிப்ஸ் நேரத்தை இழுத்தடிப்பது போல் தோன்றியது. ஆனால் அவனில் எந்தப் பரபரப்பும் தெரியவில்லை.

"கிட்டத்தட்ட இதுமாதிரித்தான். ஆனா அச்சொட்டா இதுமாதிரியில்ல. கிட்டத்தட்ட ஒரே அளவெண்டுதான் சொல்லவேணும். பொறியமைப்பு இதுமாதிரித்தான். இந்த நிறம் அதுக்கு அடிச்சிருக்கயில்ல. அதின்ர பக்கவாட்டில ஏதோ பேரும் எழுதியிருந்தது. கொஞ்சம் கனமான தகட்டில செய்திருந்தவங்க. அதுக்கு ஒரு டொலர் எழுபத்தைந்து சதம் கேட்டவங்கள்"

பெட்டியிலிருந்த ட்ரக்கினுள் மணலை நிறைத்த அவன், கைபிடியை சுழற்றி பெட்டியை உயரச் செய்து, மணல் வெளியே சொரியும்படி செய்தான். பிறகு கைபிடியை எதிர்வளமாக சுழற்றி பெட்டியை ஆரம்ப நிலைக்குக் கொண்டுவந்தான். இந்தச் செயற்பாட்டை திரும்பத் திரும்ப பலமுறை செய்தான். அவன் இதைச் செய்தபோது அவனுக்கு முன்னால் மணல் கும்பமொன்று உருவாகி வந்தது.

"இப்பிடிச் செய்தா நான் ஏறக்கூடிய மாதிரி ஒரு குன்று வரும். போர்வீரர் பொம்மைகள் சண்டை செய்கிறமாதிரி நான் விளையாடலாம்" என்றான்.

மணல்பெட்டிக்கு வெளியே பாய்ந்த அவன், அறைக்குக் குறுக்காக விரைந்து சென்று மேளத்தை எடுத்துக்கொண்டான். மணல் பெட்டியின் விளிம்பில் அமர்ந்தபடி மேளம் தட்டும் தடிகளால் மேளத்தில் தட்டினான். "அற்புதமான.... அற்புதமான மேளம்" என்றவன், தொடர்ந்து "இந்த மேளத்துக்க ஒலியள் நிறைஞ்சிருக்கு...." மெதுவான சத்தங்கள், வேகமான சத்தங்கள்.

மென்மையான சத்தங்கள்,டம்...டம்....டம்....எண்டு மேளம் ஒலிக்குது. சண்டை செய்....சண்டை செய்....சண்டை செய்.... எண்டு சொல்லுது. வா....வா....வா....எண்டு மேளம் சொல்லுது. என் பின்னே வா.... என் பின்னே வா.... என்பின்னே வா" என்றவன் மிக அவதானமாக மேளத்தை மணல் பெட்டியின் விளிம்பில் வைத்தான். மணல் பெட்டிக்குள் மீண்டும் பாய்ந்து ஏறிக்கொண்ட அவன் மணலைக் குவித்து குன்று ஒன்றை உருவாக்கத் தொடங்கினான்.

"இப்ப நான் வேலை தொடங்கப் போறன். உயரமான குன்று ஒண்ட கட்டப் போறன். உயரமான....மிக மிக உயரமான குன்று ஒண்ட கட்டப்போறன். அந்தக்குன்றின்ர



உச்சிக்கு போறதுக்கு போர் வீரர்கள் சண்டைபோடப் போகினம்.உச்சிக்குப் போற துக்கு, அந்தளவுக்கு, அவையளுக்கு விருப் பம் இருக்குது" என்றவன் விரைவாக குன்று ஒன்றை உருவாக்கிவிட்டான். பின்பு சில வீரர்களின் பொம்மைகளை தெரிந்தெடுத்து குன்றில் அவர்கள் ஏறுவது போல் தோன்றும் விதத்தில் அவற்றை பல்வேறு இடங்களிலும் நாட்டி விட்டான்.

"உண்மையாவே அவர்கள் குன்றின்ர உச்சிக்குப் போக விரும்புறமாதிரித்தான் தெரி யுது அல்லவா? " என்றேன் நான்.

"ஓமோம்" என்ற டிப்ஸ், "உண்மையாவே அப்பிடி விரும்புகினம் " என்றான். தன்னால் கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்த அனைத்து பொம்மை போர் வீரர்களைச் சேகரித்துக் கொண்டான். அவர்கள் எல்லோரையும் தான் உருவாக்கியிருந்த குன்றைச் சூழ நாட்டி விட்டான். "இன்னும் இன்னும் போர் வீரர்கள தேடப்போறன். அவயள இந்தக் குன்றில ஏறவிடப்போறன். அவை ஏறி உச்சிக்குப் போக வேணும். அவை உச்சிக்குப் போனாத்தான். உச்சியில என்ன இருக்கெண்டு அறிய ஏலும். அதாலத்தான் அவ குன்றில ஏற விரும் பீனம்" என்றான்.

என்னை நிமிர்ந்து பார்த்தான். அவனது கண்கள் மினுங்கிக்கொண்டிருந்தன.

"உச்சியில என்ன இருக்கெண்டு உங் களுக்குத் தெரியுமா?" என்று என்னைக் கேட்டான்.

"இல்லை.எனக்குத் தெரியாது. அங்கே என்ன இருக்கிறது?" என்று நான் கேட்டேன். டிப்ஸ் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். ஆனால் உச்சியில் என்ன இருக்கிறது என்று அவன் சொல்லவே இல்லை.

அவன் மிக மெதுவாகவும் சிறிது சிறிதாகவும் வீரர்களை உச்சியை நோக்கி நகர்த்தினான். அவர்களது இலக்கில் இருந்து ஒரு அங்குலத்திற்கும் குறைவான தூரம்வரை எல்லாவீரர்களையும் நகர்த்தியபின் குன்றின் மீது மேலும் மண்ணலைக் கொட்டி இன்னும் சிறிது உயரமானதாக அதனை ஆக்கிவிட் டான். பின்பு ஒவ்வொரு வீரனையும் எதிர்வள மாகத் திருப்பிய அவன், மிக மெதுவாக ஒவ்வொரு வீரனையும் கீழே கொண்டுவந்தான்.

(தொடரும்)

---

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலை இறங்குவெயிலாக இருந்தாலும் உக்கிரமாய்த்தா னிருந்தது. 5மணி நெருங்க சிறு சிறு குழுக்களாய் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை ஒரு பொதுவான வெளிக்கு அழைத் துச்சென்று எல்லோரையும் சேர்த்துக்கொள்ள சுரேன் பறை யடித்தபடி வந்தான். பறைக்குப் பின்னால் சுக்குப்பக்கு புகை வண்டிப் பாட்டோடவதனாபோக பிள்ளைகள் பெட்டிகளாய்த் தொற்றினார்கள். இடையிடையே பிள்ளைகளோடு பிரியா, குமு தினி, செல்வா, வனஜா தாங்கள் தாங்கள் சேர்த்து விளையாடிய குழந்தைகளோடு வந்து சேர்ந்து கொண்டார்கள். முகாமெங்கும் நீண்ட ரயிலாகக் குழந்தைகள் வளைந்து வளைந்து பாடியபடி வெளியை நோக்கிப்போனார்கள்.

சுக்குப் பக்கு
சுக்குப் பக்கு
றப்பர் தோட்டம்
சுப்பற்ற கொல்ல

என்ற பாடல் முகாமெங்கும் ஓங்கி ஒலிக்க சிரிப்பும் கும்மா ளமுமாக சிறுவர்களது ரயில் நெளிந்தது. அவர்கள் தங்களை மறந்தனர். தங்கள் துயரத்தை மறந்தனர். அவர்களது மகிழ்வை யும், குதூகலத்தையும் கண்ட பெற்றோர்கள், சகோதரர்கள் உறவுகள் ஆனந்தம் மேலிட்ட உணர்வோடு அவர்களையே பார்த்தவண்ணம் வீடுகளுக்கு முன்னால் நின்று ரசித்தனர். பெரியவர்களில் சிலரும் குழந் தைகளது ரயிலில் தொற்றிக் கொண்டார்கள்.

பனைகளும் வேம்பும் சூழ நின்ற அந்த மணல் வெளியில் சிறுவர்கள், பெரியவர்கள் வட்ட மாய் நிற்க எல்லா ஆசிரியர் களும் அவர்களோடு சேர்ந்து கொண்டோம். சிறுவர்களது விளையாட்டில் பெரியவர்களும் கலந்து அவர்களை மகிழ்வித் தனர்.

விளையாட்டு முடிய செல்ரன் அம்பாப்பாட்டொன்று இழுத்துவிட்டான். எட்ட நின்று எட்டிப்பார்த்த வயதானவர்களும், இளைஞர்களும் கொஞ்சம் கிட்ட வந்தார்கள் [illegible]றையதிர எங்கள் குழு வ[illegible] யிழுப்பதுபோல நடனமாட சுற்றிநின்றவர்களும் அதில்சேர்ந்துகொள்ள சிரிப்பும் களிப்புமாக அந்த வெளி மாறி யது.

குமுதினி சிவமும் நிமல னும் பம்பரமாய் ஆடினார்கள். தாங்கள் வாழ்ந்த நெய்தல் நில வாழ்வை இரைமீட்டியபடி வயதா னவர்களும், இளைஞர்களும் அம்பாப்பாடலை மாறி மாறிப் பாடினார்கள். துயரங்களைத் தற் காலிகமாகவேனும் மறந்திருக்க அந்தஆற்றுகை அப்போது அங்கே அதி உன்னதமானதொரு சாதனமாக மாறியது.

இருள் கவிந்து வரும் மாலைப்பொழுது பனை மரங்கள் கறுப்பாகித் தெரிய வானம் செக்கச்செவேலென்றிருந்தது. அந்தப் பிரதேசத்திலுள்ள மக்களின் சோகங்களையெல் லாம் திரட்டித்தான் வைத்தி ருப்பதுபோல இருள் மெல்ல மெல்லப் பரவியது.


நிறுத்த மனமின்றி பிரியக் கஸ்ரப்பட்டு விடைபெற்றோம். "மீண்டும் எப்போது வருவீர்கள்?" என்று கேட்ட குழந்தைகளுக்கு பதில்சொல்லமுடியாமல் பிரிந்தோம்.

வாகனம் புறப்பட்டது. மினி பஸ் முன்னாலும் GTZ பிக்கப் பின்னாலுமாகப் புறப்பட்டோம். போகும் வழியில் கந்தசாமி சேறும், பார்வதி அம்மாவும் தாளையடிக்கடல் பார்த்துவிட்டுப் போவோம் என்று கூறிப் பிக்கப்பை நிறுத்தினார்கள். இறங்கி அலைகளில் கால்களை நனைத்தோம். இருண்டகடல் அப்போது அமைதியாகத்தானி ருந்தது. தன் குரூரங்களை எல்லாம் மறைத்தபடி, கோடானு கோடி ரகசியங்களைப் புதைத் தபடி கடல் அப்போது அமைதி யாகத்தான் இருந்தது.

வாகனம் புறப்பட்டது. மீண்டும் கிளிநொச்சி நோக்கி. நான் கடைசி இருக்கையில் அமர்ந்தேன். முன்னிருக்கைக ளில் இருந்தவர்கள் கைதட்டிப் பாடினார்கள். என் ஞாபகங்களில் அந்தக் குழந்தைகளின் முகங் கள் மாறி மாறி வந்து அலைக் கழித்தன. மெதுவாகக் கண்களை மூடி என் இருக்கையில் சாய்ந்து கன்னத்தில் வழிந்த கண்ணீரை யாருக்கும் தெரியாமல் மெல்லத் துடைத்துக்கொண்டேன்.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்ப வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




*பாவலா!*

*எனக்கு வயது 14 நான் ஒரு தேநீர்க் கடையில் வேலை செய்கிறேன். இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் எனது தங்கைகளை படிக்க வைப்பதோடு சுகயீனமான எனது அம்மாவையும் பராமரிக்கின்றேன். இந்நிலையில் நான் வேலை செய்வது சிறுவர் துஸ்பிரயோகம் எனச் சொல்லி என்னை வேலையில் இருந்து நிறுத்தப்போகிறார்கள் அப்பா இல்லாத நான் இனி என்ன செய்வது.?*

*யாழினி,*
*கிளிநொச்சி.*

நான் வெறும் சிறுவன் மட்டுமல்ல. ஒரு குடும்பத்தை சுமக்கும் தலைவன். எனது பொறுப்பை உங்களால் சுமக்க முடியுமா? என்று உரத்து கேளுங்கள் உங்களின் உழைக்கும் உரிமைக்காக.

*பாவலா!*

*எங்கள் பாடசாலை ஆசிரியர் ஒருவர் மாணவர்களை தண்டிக்கும்போது தற்போது எரிக்கின்ற கடும் வெயிலில் முழங்காலில் மணலில் இருத்தி தண்டிக்கிறார் இது தேவையா? வேறு வழியில் திருத்த முடியாதா?*

*கிருஸ்ணா,*
*புதுமுறிப்பு.*

அவருக்குள் இருக்கும் மன எரிச்சல் மற்றவர்களை சுடு மணலில் முழங்காலில் இருத்தி தண்டிக்க வைக்கிறது- அவரின் அறிவு அவ்வளவுதான்.

*பாவலா!*

*நடைபெற்று முடிந்த கண்டி மாநாடு பற்றி?*

*பிரியங்கா,*
*கோணாவில்.*

பரபரப்புடன் தொடங்கி 'சப்' பென்று முடிந்த எத்தனையோ மாநாடுகள் போல் இதுவும் ஒன்றே... ஆளும் வர்க்கங்கள் கூடிக்கலந்து போசிக் கலைந்துள்ளன.... அவ்வளவு தான்...! நாம நம்ம வழியைப் பார்க்க வேண்டியதுதான்.

*பாவலா!*

*கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்கிறார்கள். அப்படியாயின் எப்படி வாழ்வது?*

*தயாழினி,*
*யாழ்ப்பாணம்.*

இன்றைய உலகில் கடமைகள் யாவும் சம்பளத்தால் நிர்ணயிக்கப்படும் பொழுது பலனை எதிர்பார்க்காதே என்று கூறுவதில் அர்த்தமில்லைத்தான்.

*பாவலா!*

*ரணிலிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு பிரதமர் ஆலோசனை கூறியிருக்கிறார். இதற்கு உமது ஆலோசனை என்ன?*

*சுகிர்தா,*
*உருத்திரபுரம்.*

சங்கரன் ஆண்டாலென்ன? கிங்கரன் ஆண்டாலென்ன? எல்லாம் ஒரே பேரினவாதக்குட்டைக்குள் ஊறியமட்டைகள் தான்.

*பாவலா!*

*சிறிலங்கா புலனாய்வுத் துறை உயர் அதிகாரிகளை பாதுகாப்புக் கருதி அவர்களை வெளிநாட்டுக்கு அரசு அனுப்பி விட்டதாமே இது பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*ஜதிசனா,*
*திருவையாறு.*

ஒரு நாட்டைப் பாதுகாப்பவர்களே புலனாய்வுத் துறையினர். அவர்களை பாதுகாக்க வெளி நாட்டுக்கு அனுப்பும் நாடு எப்படி உருப்படும்.

*பாவலரே!*

*வன்முறையாளர்களை மென்முறைக்கு மாற்ற வழி ஒன்று கூறுங்களேன்?*

*தர்சினி,*
*யாழ்ப்பாணம்.*

ஆளும் வர்க்கம் மனித வர்க்கமாக இயங்கினால் வன்முறைக்கு இடமேது. சிறுமை கண்டு பொங்கும் போது தானேபோராட்டம் வன்முறை எல்லாம் உருவாகின்றது.

*பாவலா!*

*நாட்டின் தலைமைப் பொறுப்பினை ஏற்க ஜே.வி.பி தயாராக இருப்பதாக சோமவன்ச கூறுகின்றாரே?*

*சியாமளா,*
*வவுனியா.*

அந்நிய நாடுகளில் தலைமறைவாக வாழ்ந்த தலைவரை நம்பி எவரும் ஆட்சியை ஒப்படைக்க தயாரா என்பதே அடுத்த கேள்வி.

*பாவலா!*

*சச்சின் பார்ப்பதற்கு உமக்கும் சேர்த்து டிக்கட் எடுக்கிறேன் வாரீரா?*

*சாரங்கா,*
*இரத்தினபுரம்.*

போகலாம்தான். ஆனால் சச்சின் பார்க்கப்போக கிச்சின (Kitchen) அனுமதிக்கவேண்டுமே.

*பாவலா!*

*காதல் கசக்காமல் இருக்க என்ன செய்யவேண்டும்?*

*ஜெயா,*
*ஆனந்தநகர்.*

சீதனம், சமூகவேறுபாடு, மத முரண்பாடு பற்றி காதலர்களும் அவர்களின் குடும்பத்தரப்பினரும் பேசாமல் இருக்கவேண்டும்.

*பாவலா!*

*ஆடம்பரம் அவசியமா? அநாவசியமா?*

*சிவாஜினி,*
*ஜெயந்திநகர்.*

விளம்பரத்திற்கான ஆடம்பரம் அநாவசியமானது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட....




"அவன் ஒரு நல்ல கலைஞன். தான் கற்கும் வித்தையில் கவனமுள்ளவன். நல்லபடியாக அவன் படித்து முடிக்கவேண்டுமேயென்று நான் மிகவும் அக்கறையாகவிருந்தேன்."

"அடடா அப்படியா. அவன் ஒழுங்காகக் கற்று முடித்தானா..."

இடையில் அவன் ஒரு பெண்ணைக் காதலிக்க ஆரம்பித்தான். அதை என்னிடம் வந்து சொன்னபோது நான் மிகவும் கவலைப்பட்டேன்"

"காதல் கவலைக்குரிய விடயமா என்ன?"

"அப்படியல்ல ஒரு லட்சியவாதியைக் காதல் குழப்பிவிடும். வருகிற பெண்ணைப் பொறுத்து. அவனுடைய வளர்ச்சி பாதிக்கப்படலாமே?"

"ஓகோ... ஒருபெண் ஆணுடைய லட்சியத்தைக் குழப்பிவிட்டால் என்று யோசித்தீர்களாக்கும்.."

"அதேதான்"

"நீங்கள் இன்னும் காதலிக்கவில்லை என்று நினைக்கிறேன் அதுதான் லட்சியவாதிக்கு காதல் துணை தேவையா...?

"துரும்பாக இருந்த ஆண்களை தூணாக மாற்றிய பெண்களைப்பற்றி ஏன் சிந்திக்கிறீர்களில்லை"

"உண்மைதான் என் நண்பனின் காதலி அவனுக்கு மனைவியானதும், அவன் லட்சியத்தை அடைந்தே விட்டான்"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –120



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினை வுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–120

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –119



**ராஜசெல்வி,**
**கிளி/ புனித சென் திரேசா**
**பெண்கள் கல்லூரி,**
**கிளிநொச்சி.**

## பரிசுக்குரிய வரிகள்

*பாலங்கள் புனரமைப்பு பத்திரிகைச் செய்தி*
*பாலகி கூட ஒற்றைப்பாலத்தில் பரிதவிப்பு*
*எந்த நாடும் உனக்கு உதவியில்லை- ஆனால்*
*உன் உறவுப் பாலங்கள் உறுதியாய் உள்ளன.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*ஆற்றைக் கடக்க பாலமில்லை- அரசோ*
*புதிதாய் பாலம் அமைத்துத் தருவதாயுமில்லை*
*காட்டுமரம் இல்லாவிட்டால் வேறு வழியுமில்லை*
*கஷ்டப்பட்டு குடிநீர் அள்ளும் காலமாச்சு.*

த.கோகுலன்,
கனகாம்பிகைக்குளம்..

*தாகம் தன்னைத்தீர்த்து விட*
*தங்கை இவள் செல்கின்றாள் தண்ணீருடன்*
*பல தடைகளைத் தாண்டிய இவளுக்கு*
*இது ஒரு தடையா...?*


ம.சன்நிலா,
வவுனியா.

*தன்னந்தனிமையிலே ஒற்றையடிப்பாலத்திலே*
*பதற்றமின்றி நடைபோடும் பிஞ்சே!*
*உன்கையில் உறவுகளுக்கான குடிநீர்*
*உன் மனதில் 'உறுதியின் உறைவிடம்'*

திருமதி.ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*ஆறும் நீரும் நிரம்பக் கிடக்கு*
*வருமா, இதிலொரு, மின்விளக்கு?*
*பாலமும் பாதையும் பாழாய்க் கிடக்கு*
*சேர்க்குமா என்னை, வாழ்க்கை கரைக்கு?*

றமணன்,
உடையார்கட்டு.



உங்கள் இன்றைய தெரிவுக்கு...

## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள் பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண் சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்



## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

(சி-11906)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 30 - 11 - 1973



உதிர்வு 06 - 04 - 2005

### குணராஜன் வளர்மதி(மதி)

பங்குனித்திங்கள் 24ஆம் நாள் 06-04-2005 இல் அமரத்துவம் எய்திய எனது மனைவியின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம். இன்று (20-05-2005) அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை காலை 4.00 மணிக்கு பாண்டியன் பதிப்பக முன் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் இதனைத் தொடர்ந்து நடைபெறும் சபண்டிகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நி. முகவரி:
பெரியகேணி, வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

த. முகவரி:
பாண்டியன் பதிப்பக முன் வீதி,
றெட்பானா, விசுவமடு.

தகவல்: கணவர்:
ஆ. குணராஜன் (பாபு)
குடும்பத்தினர்.

(சி-6145)

## துளசி புகைப்படக் கலையகம்

திருமண விழாக்களா பூப்புனித நீராட்டு விழாக்களா பிறந்தநாள் விழாக்களா உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து விழாக்களுக்கும் தரமான முறையில் படம் பிடித்துத் தர நீங்கள் நாடவேண்டிய இடம்.



எமது சேவைகள்:-

- உட்புற வெளிப்புற படப்பிடிப்பு
- டிஜிற்றல் வீடியோ படப்பிடிப்பு
- டிஜிற்றல் முறையிலான அல்பம் தயாரித்தல்
- புகைப்படத்துடன் கூடிய திருமண வாழ்த்துக்கள் பிறந்தநாள் வாழ்த்துக்கள் அழைப்பிதழ்கள் வடிவமைத்தல்
- கணனி மூலம் பழுதடைந்த பழைய புகைப்படங்களை புனரமைத்தல்
- கறுப்பு வெள்ளை புகைப்படங்களை கலர் படமாக மாற்றுதல்
- டியுரோ பிறேம் செய்து கொடுத்தல்
- அவசர புகைப்படங்கள் 15 நிமிடங்களில் வழங்கப்படும்

அவசர தேவை கருதி 15 நிமிடங்களில் புகைப்படங்கள் வழங்கப்படும்

துளசி புகைப்படக்கலையகம்,
மத்திய கல்லூரி முன்பாக,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
021-2285989

## ஏமாற வேண்டாம்



இதோ எமது புதிய உறைகள்

ASTRA Sun

போலிகளால் ஏமாறாதீர்கள்

அஸ்ட்ரா, சன் நூல்களை வாங்கும் போது இப்புதிய அம்சங்களை அவதானியுங்கள்



கோட்ஸ் இலச்சினையுடன் ஹொலோகிறாம் ஸ்டிக்கர்

தரமான தையல் நூல்களுக்கு ASTRA Sun

COATS
கோட்ஸ் திரட் லங்கா,
163, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி : 2307358

வடக்கில் எமது ஏக விநியோகஸ்தர்:

வைர மாளிகை
எண் 65, கண்டி வீதி, கிளிநொச்சி.

நியு சொப்பிங் சென்ரர்
இல 131/6, KKS ரோட், யாழ்ப்பாணம்.

## ExpoAir

*your friend in the skies...*

எக்ஸ்போ எயாரில் பயணியுங்கள்...

யாழ்ப்பாணத்தைக்கண்டுகளியுங்கள்...

அனுபவம் வாய்ந்த நட்புறவு...

நம்பகத்திற்கு எக்ஸ்போ எயார்...



EXPO AVIATION(PVT)LTD.
1E,Stanly Road, Jaffna.
Tel: 021-222 3891/6297 077-2349999/8888
email:Jaffna@expoavi.com/reservations@expoavi.com

(C-11725)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.